303

காவேரி

விய-ஆடி

July - 1946

As. 6

2306

நீர்வளம் நிலவளம் நிறைந்த வங்காளத்தில் கோடை
யிலும் குளிரிலும் எல்லோரும் விரும்புவது தேனீரே.
இந்தியா முழுமையும் எல்லோரும் ப்ரூக் பாண்டை
விரும்புவதன் காரணம் அதன் புத்தப் புதுமையே.
ப்ரூக் பாண்ட்
"இரு இலையும் ஒரு மொட்டும்"

13 AUG 1946
MADRAS

விஜயபுரம்

கே. டி. ஆர்.

சரக்குகள்—பன்னீர், அரைக்கீரை, சந்தனாதி
தைலங்கள், கிருஷ்ணா அகர்பத்தி, ராஜா
பற்பொடி — மணத்திற்கும் குணத்திற்கும்
பெயர்போனவை — எங்கும் கிடைக்கும்

K·T·R
சந்தனாதி
தைலம்

...SOLE DISTRIBUTORS...
GIRISON & Co...MADRAS

தென்னிந்தியாவிலுள்ள எல்லா ஊர்களிலும் எல்லா வியாபாரிக ளிடத்திலும், வட இந்தியாவில் பம்பாய், கல்கத்தா, பூனா, குண்டூர் டிஸ்டிரிக்ட்டு முதலிய ஊர்களிலுள்ள எங்கள் ஏஜண்டு களிடமும் கிடைக்கும். மற்றப் பாகங்களிலும் ஏஜண்டுகள் தேவை.

K. T. R. என்ற விலாஸ எழுத்துக்களை எழுத்துக்கெழுத்து
— கவனித்து வாங்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம் —

விருந்தின் ருசி — புசித்தால் தெரியும்.

கர்னடக சங்கீத வித்வான்

“இசை ஒளி” கும்பகோணம்

A. D. சுல்தானின்

இசை விருந்தின் மேன்மையை அநுபவித்தால்தான் அறிய முடியும். நகரமெங்கும் இதை அநுபவித்தவர்கள் பலர். அதைத் தேடித் தேடி அநுபவிக்க விரும்புகிறவர்கள் எண்ணிக்கை கணக்கிலடங்கா. அதற்கு அத்தாட்சி வேறு வேண்டியதில்லை. மாதா மாதம் நடைபெறும் கச்சேரிகளே இதற்குப் போதிய சான்று.

14-7-46	கல்லிடைக்குறிச்சி
21-7-46	கொழும்பு டவுன் ஹால்
28-7-46	,, ,,
24-8-46	திருச்சி ரேடியோ

நங்கையின் நன்றி

லோத்ரா

கர்ப்பாசய ரோக நிவாரணி

கர்ப்பாசயக் கோளாறுகளால் ஏற்படக்கூடிய பல்வேறு உபாதைகளிலிருந்து காப்பாற்றி ஆரோக்யத்தை அளிக்கிறது.

கேசரி குடீரம் லிட், மதராஸ்

நைஜாம் சமஸ்தானங்கள், ஆந்திரா ஜில்லாக்கள், தமிழ்நாட்டிற்கு ஏஜண்டுகள்:-

சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்,

செகந்திராபாத்-பெஜவாடா-மதுரை.



Noting the events of the day
3rd July 1946
marriage fixed
jewels solicited &
Ordered at P.A.R's
1. necklace.
3 Pairs bangles,
1 Saree pin
1. Diamond nose screw
1. Pair thodu 1.5. cts.
all to be recd on 20
BASKARA
Better cultivate the diary habit
P. A. RAJU CHETTIAR & BRO.,
JEWELLERS
COIMBATORE.
Louis

சந்தோஷச் செய்தி!
வெகு சீக்கிரத்தில் உங்களுக்குப் பிரியமான
பென்ஸிலை மறுபடியும் பெறுவீர்கள்.

STAR of INDIA

an outstanding name in the pencil world...

மீண்டும் பென்ஸிலுக்கு அடிக்கடி உடையக்கூடிய முனையும் கூடிவிட்டால் கோபம் வருவதுடன் தெளிவான சிந்தனையும் போய்விடும். ஓர் அற்ப பென்ஸிலுங்கூடிய அபார மன சிந்தனைக்கு ஏதுவாகலாம். ஸ்டார் ஆப் இந்தியா பென்ஸில்கள் எழுதுவதில் இன்பத்தையும் உன்னத எண்ணங்களையும் உற்பத்தி செய்ய ஏதுவானவை.

ஸ்டார் ஆப் இந்தியா பென்ஸில் என்றால் மிகவும் உயர்தரமான பென்ஸில் என்பதுதான் அர்த்தம்.

ALWAYS
-BUY-
INDIAN

..MADRAS PENCIL FACTORY Madras.

ADS.MP.I.

அநேகவிதமான

ஜரிகை பட்டு & நூல் ஆடைகளுக்கு

கைராசியும் கீர்த்தியும் வாய்ந்துள்ளது

★

M.N. நாகேந்திரம் சன்ஸ்

பட்டு ஜவுளி வியாபாரம்

உள்மண்டபம் — மலைவாசல்

தெப்பக்குளம் P. O. - திருச்சிராப்பள்ளி



தாயின் மகிழ்ச்சி

பல வருஷங்கள் தனிமை, யிலும் அசௌக்கியத்தி லும் உழன்ற பின்னர், ஒரு புஷ்டியான குழந் தைக்குத் தாயாக விருப்ப தில் அவள் பெருமைபடு கிறாள்.

கர்ப்பக் கோளாறுகளு க்கு சிறந்த ஒளஷதம்

பண்டிட் டி.கோபாலாச்சார்லுவின்

அருணா

கர்பாசயரோக நிவாரணி.

ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட், மதராஸ்.



டிரேட் மார்க்கை
கவனியுங்கள்!



ஒவ்வொரு
வீட்டிலும்
உட்வார்ட்ஸ்
க்ரைப் வாட்டர்
இருக்கவேண்டும்

WOODWARD'S
GRIPE WATER

keeps baby well

1-WW112-111 W. WOODWARD LTD. LONDON ENGLAND

Agents:— **T. T. KRISHNAMACHARI & CO.**
12A Lingha Chetty Street, G. T. MADRAS.

வீகம்ஸீயின்

டிரேட் மார்க்

V. C.

(ஸ்தாபிதம் 1893)

குறிபோட்ட நகைகளெல்லாம்

சவரன் பொன்னுக்கும்

முதல்தரமான

வைரங்களுக்கும்

மேன்மையான கைதேர்ந்த

வேலைப்பாட்டுக்கும்

உத்தரவாதமுள்ளவை

வீகம்ஸீ சபில்தாஸ் & சன்ஸ்

பிரசித்திவாய்ந்த வைர வியாபாரிகள்

சைனபஜார், : : சென்னை.

பொருளடக்கம்

விய மலர் 5 } { ஆடி இதழ் 12

நீதி—நிர்வாகப் பிரிவினை	9
ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனம்	11
கதம்பம்	13
அணுகுண வைத்தியம் — டி. பி. நவநீதகிருஷ்ணன்	20
யமுனைக் கரையிலே — ரா. ஸ்ரீ. தேசிகன்	26
சித்ரா — கே. சுந்தரம்மாள்	33
யூதர்! யூதர்! யூதர்! — யோகி சுத்தானந்த பாரதியார்	43
விடுதலை — எம். எஸ். கமலா	48
கனவுகள் — எஸ். கிருஷ்ணமூர்த்தி	58
அடைக்கலம் — வேங்கடலட்சுமி	62
ஏழையின் உபகாரம் — மானஸீகன்	76

குறிப்பு:—காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்கள் அவற்றை எழுதியவர்களுடையனவே. அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்லர்.

வெளிவரும் தினத்தை எதிர்பாருங்கள்.

P. U. சின்னப்பா
T. R. ராஜகுமாரி
S. M. குமரேசன்
B. S. சரோஜா
ஆழ்வார் குப்புஸ்வாமி
T. S. தமயந்தி
அங்கமுத்து & நாகலக்ஷ்மி
நடித்த

விகடயோகி





VIKATAYOGI

DIRECTION:- K. SUBRAHMANYAM, B.A., B.L.

A MADRAS UNITED ARTISTES CORPN. PRODUCTION..

மதராஸ் யுனைடெட் ஆர்டிஸ்ட்ஸ் கார்ப்பரேஷன் தயாரிப்பு.

காவேரி

விய மலர் 5	“சென்றிடுவீ ரெட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்—” பாரதியார்	ஆடி இதழ் 12

நீதி-நிர்வாகப் பிரிவினை

சென்னை கவர்மெண்டார் விடுத்துள்ள நீதி—நிர்வாகப் பிரிவினைத் திட்டம் கிரிமினல் நீதி வழங்கும் முறையில் பெருத்த மாறுதலை உண்டுபண்ணக் கூடும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. நீதி இலாகாவையும் நிர்வாக இலாகாவையும் அறவே பிரித்து ஒருவருடைய ஆதிக்யம், அல்லது அதிகாரத்திற்குட்பட்டு, மற்றொன்று இல்லாமல் செய்வதன் நோக்கம் ஒன்றே. மக்களுடைய உரிமைகள் பாதிக்கப்படாமல் காக்க, நாட்டில் பூரண சுதந்திரம்கொண்ட நீதி இலாகா அவசியம். நிர்வாகஸ்தர்கள், ஆட்சி புரியும் கோஷ்டியினர், பற்பல சமயங்களில், நெருக்கடிகளைச் சமாளிக்க எண்ணி, குறுக்கான வழிகளைக் கையாள நேரிடும். மக்களுடைய உரிமைகள் பாதிக்கப்படலாம். அத்தருணங்களில் அவர்களுடைய செய்கைக்கு உடளுகை அமைந்துவிடும் நீதி இலாகா நிர்வாக இலாகாவுக்கு உட்பட்டிருந்தால். நீதி வழங்கும் உத்தியோகஸ்தர்களின் பிரமோஷன், அவர்களுடைய வேலையைச் சீர்தூக்கிப் பார்ப்பது—இத்தகைய பொறுப்பு நிர்வாகஸ்தர்கள் கையில் அமைக்கப்பட்டால் கவர்மெண்டாருக்கு உட்பட்டு வழக்கின் தரப்படி அல்லாமல் கவர்மெண்டாரின் இச்சைப்படி நீதி வழங்கப்படலாம்.

இதை உத்தேசித்துத்தான் பல அரசியலமைப்பில் நீதி இலாகாவை நிர்வாக இலாகாவினின்று பிரித்து, பூரண சுதந்திரம்கொண்ட தனி இலாகாவாக அமைத்துள்ளார்கள். பற்பல சமயங்களில் நிர்வாகஸ்தர்களே கட்சிக்காரர்களாக அமையலாமாகையால் நீதி வழங்கும் உத்தியோகஸ்தர்கள் நிர்வாக இலாகாவுக்கு உட்படும்படி அமைக்கப்பட்டிருந்தால் நீதி தவறிவிடலாம் என்ற ஐயத்தின்பேரில்தான் இவ்விரு இலாகாக்களையும் அறவே பிரித்துவிடுவது.

இக்கொள்கைப் பிரகாரம் பார்த்தால் சென்னை கவர்மெண்டார் கொண்டு வந்துள்ள திட்டம் பிரயோசனமற்றது என்று விளங்கும்.

இத்திட்டத்தின் முக்கிய அம்சங்களாவன:—ரெவின்யூ அதிகாரிகளிடமிருந்து மாஜிஸ்ட்ரேட் அதிகாரம் எடுக்கப்பட்டு அதற்கெனப் பிரத்தியேக அதிகாரியிடம் ஒப்படைக்கப்படும். இனி ஜில்லா கலெக்டர் ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டாகவும் இருக்கமாட்டார். முறையே சப் கலெக்டர், ரெவின்யூ டிவிஷனல் ஆபீஸர், சப் மாஜிஸ்ட்ரேட் இவர்கள் ரெவின்யூ வேலையிலேயே ஈடுபட்டிருப்பார்கள். அவர்கள் செய்துவந்த கிரிமினல் நீதி வழங்கும் வேலையை ஜில்லா மாஜிஸ்ட்ரேட், டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் சப் மாஜிஸ்ட்ரேட் என்ற புதிய உத்தியோகஸ்தர்கள் வகித்து நடத்துவார்கள். இவர்களுடைய வேலையைக் கண்காணிப்பது ஜில்லா மாஜிஸ்ட்ரேட். ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டுகளைக் கவர்மெண்டாரே நிர்வகித்து நடத்துவார்கள்.

இன்று ஸிவில் நீதி மன்றங்கள் ஹைகோர்ட்டு ஆதிக்கத்திற்கு உட்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன. உண்மையில் நீதி நிர்வாகப் பிரிவினை செய்ய வேண்டுமென்றால் முன்சிப்புகளிடமும் சப்ஜட்ஜுகளிடமும் கிரிமினல் வழக்குகளை விசாரிக்கும் பொறுப்பை விட்டுவிடுவதுதான் ஏற்ற முறை. அப்படி ஏற்பாடு செய்தால் பாரபக்ஷமின்றி மக்களுடைய உரிமைகள் காப்பாற்றப்படும். கவர்மெண்டாரோ போலீஸாரோ யாதொரு சலுகையுமின்றி வழக்குகளை நடத்த நேரிடும். அப்பொழுது உண்மையான நீதி நிர்வாகப் பிரிவினை ஏற்படும்.

இவ்வாறு செய்யாது ஏன் தனி உத்தியோகஸ்தர்களை ஏற்படுத்தி அவர்களைக்

கவர்மெண்டார் ஆதிக்கத்திற்குள்ளேயே வேலை செய்யும்படி ஏற்படுத்தவேண்டும்? நீதி நிர்வாக இலாகாக்கள் பிரிவினை என்பது குறிக்கத்தக்க ஒரு பலனை எதிர்பார்த்துச் செய்யப்படும் காரியம். அதாவது நிர்வாகஸ்தர்களின் ஆட்சிக்குட்படாமல் நீதி மன்றங்கள் வேலை செய்யவேண்டுமென்பதே. இதனால் நீதி பாரபக்ஷமின்றி வழங்கக்கூடும் என்பது கருத்து. எந்தத் திட்டம் இந்த இரண்டு இலாகாக்களை ஒருவருக்கொருவர் உட்படும்படி செய்கிறதோ அது நீதி நிர்வாகப் பிரிவினையாகாது. நிர்வாகஸ்தர்களின் கண்ட்ரோலுக்குட்படாது நீதி மன்றங்கள் சுதந்திரமாக வேலை செய்யவேண்டும் என்பதுதான் இப்பிரிவின் அடிப்படையான கொள்கை.

இந்தக் கொள்கைப்படி பார்த்தால் சென்னை கவர்மெண்ட் செய்துள்ள பிரிவினை பயன்படாது என்று விளங்கும். 1942-ல் நடந்த கலவரங்களின்பொழுது மக்களின்மீது பல வழக்குகள் தொடங்கப்பட்டன. அநேக நிரபராதிகள் குற்றம் சாட்டப்பட்டார்கள். அநேகமாகப் போலீஸார் இஷ்டப்படியே அவர்களுக்குத் தண்டனை அளிக்கப்பட்டதே யொழிய, சாக்ஷியங்களின் பலாபலத்தை யொட்டித் தீர்ப்புக் கூறப்படவில்லை. பெயில் அளிக்கப்படவேண்டிய பலருக்கு ஜாமீனில் விடுதலை கிடைக்கவில்லை. இவையெல்லாம் நீதி இலாகா நிர்வாக இலாகாவு (கவர்மெண்ட்)க்கு உட்பட்டு இருப்பதினுல்தான் சாத்தியமாயின. கவர்மெண்டாரின் கொள்கைப்படி மாஜிஸ்ட்ரேட்டுகள் நடக்கும்படியாயிற்று. இத்தகைய அநீதிகள் நடவாமல் தடுப்பதற்கே நீதிநிர்வாகப் பிரிவினை செய்யவேண்டுமென்று அறிவாளிகள் வற்புறுத்துவது.

சென்னை கவர்மெண்டார் வகுத்துள்ள பிரிவினைத் திட்டத்தின்படி இனி இத்தகைய சம்பவங்களுக்கு இடமில்லை என்று கூற முடியுமானுல் அத் திட்டத்தை நாம் வரவேற்கவேண்டியதே. கவர்மெண்டார் நல்லவர்களாகவேயிருப்பின் கவலையில்லை. இனியும் அட்வைசர் ஆட்சியோ, வேறு பொறுப்பற்ற ஆட்சியோ ஏற்படுமானுல் அவர்கள் ஜனங்களை அடக்குமுறை செய்யத் தங்கள் ஆதிக்யத்திற்குட்பட்ட ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டுகளுக்குக் கவர்மெண்ட் தொடரும் கேஸ்களில் எத்தகைய தண்டனை விதிக்கப்படவேண்டும் என்று ரகஸிய உத்தரவுகள் விடக்கூடும். அத்தகைய உத்தரவுகள் முறையே ஜில்லா அதிகாரிக்குட்பட்ட மாஜிஸ்ட்ரேட்டுகளுக்குத் தெரிவிக்கப்படும். இதை நிராகரித்து மாஜிஸ்ட்ரேட்டுகள் நீதி வழங்குவார்களா? கவர்மெண்ட் கேஸ்களில் தைரியமாக, கவர்மெண்டுக்கு விரோதமாக நீதி வழங்குவார்களா? அல்லது தங்களுடைய புரமோஷனை உத்தேசித்து நிர்வாகஸ்தர்களின் தயவை நாடி நடிப்பார்களா?

கவர்மெண்டார் கண்ட்ரோலிலுள்ள மாஜிஸ்ட்ரேட்டுக்கள் பூரண சுதந்திரத்துடன் நடந்துகொள்ள முடியாது என்ற முடிவுக்குத்தான் எல்லோரும் வரமுடியும். கவர்ன்மெண்டாரும் நீதி வழங்குவதில் தலையிட வசதி யிருக்கிறது என்பதைச் சிற்சில சமயங்களில் பயன்படுத்திக் கொள்ளக்கூடும் என்பதும் மறுக்க முடியாத உண்மை.

ஹைகோர்ட் மாகாண ஆட்சிக்குட்பட்டபிறகு இந்த மாஜிஸட்ரேட்டுகளைக் கண்ட்ரோல் செய்யும் பொறுப்பை அவர்களிடம் ஒப்படைத்துவிடுவோம் என்று சென்னை கவர்ன்மெண்ட் அறிக்கை கூறுகிறது. ஹைகோர்ட்டும் நிர்வாக இலாகாவின் ஆதிக்கத்திற்குட்படுத்தப்படுமானுல், இந்தக் கிரிமினல் இலாகாவையும் அதனிடம் ஒப்படைப்பதில் என்ன அர்த்தம் என்று நமக்கு விளங்கவில்லை. நீதிஇலாகா முழுதும் தனியே மத்திய பெடரல் கோர்ட்டின் ஆதிக்கத்தில் அமைக்கப்பட்டால் தான் நாட்டில் நீதி நிர்வாகப் பிரிவினையென்பது நிலைபெறுவதாகும்.

இத்தகைய அரைகுறையான பிரிவினைகளால் பண விரயம்தான்; யாதொரு நன்மையும் விளையாது. இந்தப் பிரிவினைக்கு அடிப்படையாக உள்ள கொள்கையை ஒப்புக்கொண்டால் ஹைகோர்ட்டாரிடமும் முன்ஸீப்புகளிடமும் கிரிமினல் நீதி வழங்கும் பொறுப்பை ஒப்படைத்தாக வேண்டும். அக்கொள்கையில் நம்பிக்கையில்லாவிட்டால் அதனருகில் செல்லக் கூடாது. வெய்யிலிலும் காயாமல் மழையிலும் நனையாமல் உள்ள சீர்திருத்தங்கள் வீண். ராஜாஜி செய்ய மறுத்ததைச் செய்துவிட்டதாகக் காட்டிக்கொள்ள வேண்டுமானுல் இது உதவலாம். ஆனுல் மக்களுக்கு இதனுல் சிறிதும் நன்மை ஏற்படாது.

ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனம்

உலகத்தில் என்றும் சமாதானம் நிலவுதற்காக ஏற்படுத்தப்பட்ட ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனம் எவ்வகையில் அமைக்கப்பட்டுள்ளது என்று தெரிந்து கொண்டால்தான் அந்த ஸ்தாபன விஷயமாக வெளிவரும் செய்திகளைப் புரிந்து கொள்ளமுடியும்.

ஐக்கிய நாடுகளின் பொது அஸெம்பிளி ஐம்பத்தொரு தேசங்கள் அடங்கியது. ஒவ்வொரு தேசத்திற்கும் ஒவ்வொரு பிரதிநிதி. உலக சமாதானம் சம்பந்தப்பட்ட பிரச்னைகளை விவாதிப்பதும், அவற்றைக் குறித்துப் பாதுகாப்புக் கவுன்ஸிலுக்குச் சிபார்சுகள் செய்வதுமே அதற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள வேலைகள். இவ்வருட ஆரம்பத்தில் அதுமுதல்தடவையாகக்கூடிற்று. மறுபடியும் செப்டம்பரில் கூடும்.

இந்த ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனத்திற்கு அடிப்படை அதன் உட்பிரிவான பாதுகாப்புக் கவுன்ஸில். இது ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனத்தின் காரியக் கமிட்டி. இது பதினொரு அங்கத்தினர்கள் கொண்டது—ஐந்து நிரந்தர மெம்பர்களும் ஆறு தற்காலிக மெம்பர்களும். தற்காலிக மெம்பர்கள் அஸெம்பிளியினால் இரண்டு வருஷத்திற்கு ஒருமுறை தெரிந்தெடுக்கப்படுவார்கள். இதில் அங்கத்தினர் பதவி தேசங்களுக்கு தனிப்பட்ட நபர்களுக்கல்ல.

அமெரிக்கா, பிரிட்டன், ருஷ்யா, பிரான்ஸ், சைனா இவ் ஐந்து தேசங்களுக்கும் நிரந்தர அங்கத்தினர் பதவி உண்டு. ஆஸ்திரேலியா, பிரேஸில், மெக்ஸிகோ, போலந்து, நெதர்லாந்து, எகிப்து—இவற்றிற்குத் தற்காலிக மெம்பர்கள் பதவி.

இந்தப் பாதுகாப்புக் கவுன்ஸிலிலும் பெரிய வல்லரசுகளான அமெரிக்கா, பிரிட்டன், ருஷ்யா இவர்களுக்கிடையே ஐக்கிய பத்தியம் நிலவினால்தான் இந்த ஸ்தாபனம் நடைபெறும். இல்லையேல் கலைத்துவிடவேண்டியதே. ஏனெனில் இத் தேசங்களிடம்தான் கவுன்ஸிலில் தீர்மானங்களை நிறைவேற்றிவைக்கப் போதிய பொருள் பலமும் ராணுவ பலமும் உள்ளன.

இந்த ஸ்தாபனத்தை அமைத்த யாதாஸ்தின்படி, உலக சமாதானத்தைக் குலைக்க முற்படும் தேசத்தைக் கண்டிக்கவும், அதைத் தகர்க்கவேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவும் இந்தக் கவுன்ஸிலுக்குத்தான் அதிகாரம். ஆனால் இந்த யதேச்சாதிகாரம் நிரந்தர மெம்பர்களின் நிராகரிப்பிற்கு உட்பட்டது. அதாவது, இந்தப் பஞ்ச பாண்டவர்களில் எவராவது எடுக்கப்படும் நடவடிக்கைக்கு உடன்படாவிட்டால் இந்தக் கவுன்ஸிலில் மேலே ஒன்றும் செய்ய இயலாது.

ஒரு சண்டை விஷயத்தைக் கவுன்ஸிலில் ஆலோசிக்கும் தறுவாயில் இந்த நிராகரிப்பு அதிகாரத்தை (Veto power) உபயோகிக்க முடியாது. இந்த ஆலோசனையின் விளைவாக விசாரணை செய்ய வேண்டுமானால் மொத்தம் ஏழு மெம்பர்கள் சாதகமாக ஓட் செய்தாக வேண்டும். அதில் நிரந்தர மெம்பர்களான ஐந்து தேசங்களும் சாதகமாக ஓட் செய்யவேண்டும். ஆனால் இந்த ஐந்தில் எவரேனும் சண்டையில் கட்சிக்காரராக விருந்தால் அவர் ஓட்டும் கொடுக்க முடியாது அல்லது அவருக்குள்ள நிராகரிப்பு அதிகாரத்தையும் உபயோகிக்க முடியாது. இறுதிக் கட்டத்தில், அதாவது, சமாதானத்தைக் குலைக்கும் தேசத்தின்மீது நடவடிக்கை எடுக்க, ஐந்து நிரந்தர மெம்பர்கள் உள்பட ஏழு மெம்பர்கள், அவர்களே கட்சிக்காரராக இருந்தாலும் கூட, ஏகோபித்துச் சாதகமாக ஓட் செய்தாக வேண்டும். இல்லையேல் நடவடிக்கை என்பதே இயலாது.

இவ்வமைப்புள்ள ஸ்தாபனம் நடைமுறையில் எதையும் சாதிக்க முடியுமா? பெரிய வல்லரசுகளான ருஷ்யா, அமெரிக்கா, பிரிட்டன் இவைகளுக்குள் அபிப்பிராய பேதமிருந்தால் எதுவும் நடப்பதற்கில்லை. ஆகையினால்தான் இந்த ஸ்தாபனம் ஒவ்வொரு விஷயத்திலும் நொண்டியடித்துக்கொண்டு வேலை செய்து வருகிறது.

★ விசேஷ மலர் ★

காவேரி பிறந்து ஐந்து ஆண்டுகள் இவ்விதமுடன் நிறைகின்றன. யுத்த காலத்தில் தோன்றி, பல இன்னல்களைச் சமாளித்துக் கொண்டு பருவமடைந்திருக்கிறது. இதற்கு அடிப்படையான காரணம் வாசகர்கள் அதற்கு அளித்த போஷணையே; அதன்பால் அவர்கள் வைத்துள்ள அன்பே. இவ்வன்பு வரவரப் பெருகிக்கொண்டே வருகிறது என்பதைக் குறிப்பிட மகிழ்கிறோம். இவ்வாதரவைப் பயன்படுத்திக் கொண்டு காவேரி புதிய ஆண்டில் பல நூதன அம்சங்களை வாசகர்களுக்கு அளிக்கும் என்று வாக்குறுதி தருகிறோம். மக்களது அறிவை விசாலப்படுத்தக் கூடிய பல கட்டுரைகளை இனி இதில் காணலாம்.

காவேரியின் ஐந்தாவது ஆண்டு நிறைவு வைபவத்தை சிறப்புறக் கொண்டாட வருகிற ஆவணி இதழை விசேஷ மலராக வெளியிடத் தீர்மானித்துள்ளோம். மலர் விலை அணு பன்னிரண்டு; ஸிலோன், மலேயா முதலிய வெளிநாடுகளில் ரூபா ஒன்று. காகிதக் கஷ்டத்தினால் அதிகப் பிரதிகள் அச்சிட இயலவில்லை. பிரதி வேண்டுவோர் முன்னதாகவே தங்கள் ஊர் ஏஜண்டிடமோ அல்லது இந்த ஆபீஸிலோ தங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஸினிமா பகுதி

ஸினிமா மனித வாழ்க்கையில் இடம் பெற்றுவிட்டது. ஸினிமா பார்க்காத மனிதன் தற்காலத்தில் இல்லை என்றே சொல்லலாம். என்றாலும் அது இழிவான தொழில் என்ற மனப்பான்மை மட்டும் இன்னும் மக்கள் மனதைவிட்டு அகலவில்லை. ஸினிமாவும் ஓர் உயரிய கலை என்பதை ஒப்புக்கொண்டால், மனிதனுடைய தற்கால வாழ்க்கையில் அது இடம்பெற்று விட்டது என்பதை அங்கீகரித்தால், அதைப்பற்றிய கட்டுரைகள் நம் பத்திரிகைகளில் இடம்பெற வேண்டும் என்பது தெளிவாகும். தமிழ்நாட்டில்ஸினிமாக் கலை அதிகமாக உயர்வடையவில்லை என்றால் மக்களின் மனப்பான்மையே இதற்கு அடிப்படையான காரணம். ஸினிமாக்களைப்பற்றி பொதுஜன அபிப்பிராயம் (public opinion) இன்னும் உருவாகவில்லை. எத்தகைய படங்கள் நல்லவை, எத்தகைய கருத்துக்கள் கொண்டனவாக அவை இருத்தல் வேண்டும் என்ற பிரச்னைகளைக் குறித்துப் பொதுஜன அபிப்பிராயம் தெளிவாகவில்லை. இது ஏற்படவேண்டுமானால், ஸினிமாக் கலை உயர்ந்து முன்னேற வேண்டுமானால், அதைப்பற்றிய விவாதங்கள், சர்ச்சைகள் பத்திரிகைகளிலும் பொது மேடைகளிலும் நடத்தப்படவேண்டும்; படித்த வகுப்பினர், படியாதவர் அனைவரும் சிந்தனை செய்யவேண்டும், அபிப்பிராயம் கூறவேண்டும். அப்பொழுதுதான் கலையுயர்வு ஏற்பட ஹேதுவாகும். எத்தகைய உயர்வான பத்திரிகையாயினும், எவ்வளவு அதிகம் படித்தவராயினும், கலையில் ஆர்வங்கொண்டால் ஸினிமாவைக் குறித்து முறையே இனி எழுதாமலோ, பேசாமலோ இருக்க முடியாது. இதுவரை படித்தவர்கள் இதை இழிவாக நினைத்து ஒதுங்கி நிற்பதே தமிழ்ப் படங்களின் முன்னேற்றக் குறைவுக்குக் காரணம் என்பது நமது அபிப்பிராயம்.

காவேரியில் இனி ஸினிமாவுக்கென ஒரு தனிப் பகுதி ஆரம்பிக்கப்படும். ஸினிமா சம்பந்தமான கட்டுரைகளை அறிவாளிகள் எழுதி அனுப்புமாறு வேண்டிக் கொள்கிறோம். ஸினிமாக் கலையைப்பற்றிய பொதுப் பிரச்னைகளைக் குறித்தும், குறிப்பாகத் தமிழ்ப் படங்களை எவ்வகையில் உயர்த்துவது என்பதைப்பற்றியும், வியாசங்கள் தேவை. கட்டுரைகளுக்குத் தகுந்த சன்மானமளிக்கப்படும்.

கதம்பம்

அந்தப் படத்தைப்பார்!

திருவாங்கூர் சமஸ்தானத்திலிருந்து திடுக்கிடும் செய்திகள் அடிக்கடி வருகின்றன! மக்களின் முன்னேற்றத்தில் கண்ணும் கருத்துமாயுள்ள திவான் புரட்சிகரமான திட்டங்களை வெற்றிகரமாய் நிறைவேற்றுவதில் நிபுணர். பிரிட்டிஷ் ஆட்சி உருவான காலம் தொட்டு, சென்னை மாகாணத்தில் நிலவரி முறையை மாற்றியமைக்கவேண்டும், நிலவரி விதிக்கும் அநீதியானமுறை அகலவேண்டும் என்று கிளர்ச்சி நடந்து வந்திருக்கிறது. நாளது வரை ஒன்றும் நடக்கவில்லை.

சென்னை மாகாணத்தில் நிலவரி விகிதம் வருமானவரி விகிதத்தைவிட உயர்வானது. வருமான வரி ஒரு குறிப்பிட்ட வருமானத் தொகைக்கு மேலிருந்தால் உண்டு. ஆனால் ஒரு குழி நில மிருந்தாலும், நிலவரி, தரம் தீர்வை, தண்ணீர்த் தீர்வை, செஸ், என்று சொல்லப்பட்ட விநோத வரி எல்லாம் செலுத்தவேண்டும்.

நிலவரி. இது எதற்காகத் தனியாக விதிக்கப்படவேண்டும் என்பது தெரியவில்லை. நிலமுடையவனுக்குத் தண்டனை என்று கூடச் சொல்லலாம்.

தரம்தீர்வை. நிலத்தின் தரத்தைப்பற்றி யாதொன்றும் தெரியாத ஓர் உத்தியோகஸ்தன் தரத்தைப்பற்றித் தீர்மானிக்கிறான். அடிக்கடி ஆபீஸில் உட்கார்ந்துகொண்டு நிலத்தின் தரத்தை உயர்த்திவிடுகிறான். தரத்துக்குத் தகுந்தவாறு தீர்வை.

தண்ணீர்த் தீர்வை. தண்ணீர் பாயாவிட்டாலும், தண்ணீரே இல்லாவிட்டாலும் இந்த வரியை அழுதாகவேண்டும். மேட்டூர் திட்டத்துக்குச் செலவழிக்கப்பட்ட மூலதனத்துக்கு வட்டிக் கணக்குப்போட்டு வசூலிக்கப்படுகிறது. இப்படியாக வியாபாரம்போல் தண்ணீர் இலாபத்துக்கு விற்கப்படுகிறது.

'செஸ்'வரி. இது ஜில்லா போர்ட் நிர்வாகத்திலுள்ள ரஸ்தாக்களினால் நாம் அடையும் கஷ்ட நஷ்டங்களுக்குச் செலுத்தும் கூலி!

இனி திருவாங்கூர் திட்டத்தைக் கவனிப் போம்.

1 தரம்பார்த்துவரி என்பதில்லை.

2 நஞ்சைத் தீர்வை, தண்ணீர்த் தீர்வை என்ற முறை எடுபடல்.

3 எல்லா நிலங்களுக்கும் ஏகர் ஒன்றுக் குப் பதினன்கு அணுதான் வரி! (சென்னை யில் 7 ரூ. முதல் 22 ரூ. வரை வரி விதித திருக்கிறது.)

4 அதிக வருமானமுள்ள பெரிய நிலக் காரர்கள் மற்றத் தொழிலினரைப்போல் வருமானவரி செலுத்தவேண்டும்.

திருவாங்கூர் திட்டம் எப்படி?! அந்தப் படத்தைப்பாருங்கள் என்று சென்னை அர சாங்கத்துக்குச் சுட்டிக்காட்டினலாவது ஞானேதயம் ஏற்படுமா? விவசாய வரு மானவரி விதிக்கப்போவதாக மட்டும் சென்னை அரசாங்கம திட்டமிட்டுள்ளதாகத் தெரியவருகிறது. நிலவரி முறையை மாற்றி யமைக்க இதுவரை திட்டமொன்றும் வெளி யிடாதது வருந்தத்தக்கது. யோசிப்பார் இல்லை.

மனப்பாடம் செய்யுங்கள்!

ஆடு மாடுகள் பட்டியில் அடைக்கப்படு கின்றன. கைதிகள் சிறையில் வைக்கப்படு கின்றனர். சிங்கர், புலி முதலிய கொடிய துஷ்ட மிருகங்கள் வாழத் தனியாகக் காடு கள் ஒதுக்கிவிடப்பட்டுள்ளன. பைத்தியக் காரர்களுக்குக்கூடத் தனி விடுதி வசதி யுண்டு. ஆனல் முடியிறக்கப்பட்ட அல்லது முடிதுறந்த மாஜி மன்னர்களுக்குத் தனி யான இடம் ஒதுக்கப்படாதது வருந்தத் தக்கது! இதைப்பற்றி யாருமே சிந்தனை செய்யாமல் அசட்டையாயிருந்துவிட்டார் கள்.

இப்படி எல்லோரும் முடியிழந்த மன்னர் களைப்பற்றி விசாரமற்று இருக்கையில் பிர சித்திபெற்ற நூலாசிரியரும், தீர்க்க தரிசியு மான ஆசிரியர் வெல்ஸ் அவர்கள் ருசிகர மான யோசனை யொன்றை அளித்துள்ளார். "துரத்தப்பட்ட அல்லது வெளியேற்றப் பட்ட மாஜி மன்னர்களுக்கும், 'மன்னிகளுக் கும்' (ராணிகள்!) அமெரிக்காவிலோ அல் லது எங்கேயோ தனியாக இடம் ஒதுக்கப் படவேண்டும். மாஜி ராஜாக்களும் ராணி களும் இந்தத் தனியான இடத்தில் ராஜா, ராணி என்று சொல்லிக்கொள்ளலாம். இஷ்டப்பட்டவர்களுக்கு வேறு யாதொன் றும் செய்ய முடியாவிட்டாலும் பகட்டுப் பட்டங்களாவது விநியோகிக்கலாம். இவ களுக்குத் தகுந்தவிடம் அமெரிக்கா தான் என்று தோன்றுகிறது. அங்கேதான் படா டோப டாம்பீகப் பிரியர்கள் அதிகம் உள்ள னர். உபயோகமற்ற அசட்டுப் பட்டங் களுக்கு ஆசைப்படுகிறவர்கள் அதிகம் உள்ளனர்"!

ஆசிரியர் அவர்கள் மாஜி மன்னர்களைத் தவிர முடிதாங்கும் மற்றவர்களையும் சந்தியி லிழுத்து அவமானப்படுத்துவது அடாது!

"உலகமெல்லாம் உதாசீனம் செய்யப் படும், உலகத்தில் அழிந்துகொண்டுவரும் மன்னர்களது ஆட்சி முறையுடன் ஆங்கிலே யர்கள் பிணைக்கப்பட்டுள்ளார்கள். இந்த மன்னர்கள் பரிசுத்தமானவர்கள் அல்லர் என்று நிரூபிக்கக்கூடிய திடுக்கிடும் சங்கதி கள் வெளி வருகின்றன. இந்தப் பரிசுத்த மற்ற மனிதர்கள் (tainted people) இப் பொழுதே ஏன் புத்திசாலித்தனமாக நட ந்துகொள்ளக்கூடாது? இப்பொழுதே அவ ர்கள் 'புத்திசாலித்தனமாக நடந்துகொண் டால் கவுரமாயிருக்கும். பிறகு மக்களால் துரத்தப்பட்டால் (dismissal) அவர்களது நிலைமை கடுமையாகிவிடும். மன்னர் ஆட்சி முறை ஜனநாயக ஆட்சிமுறைக்கு நேர் எதிரிடை. மக்களில் எல்லோரும் சமம் என்ற முக்ய மனித தத்துவத்திற்கு விரோத மாயுள்ளது. சாதாரண மனிதனை விட உயர் ந்தவன் என்ற செயற்கைக் கவுரவத்தை உண்டுபண்ணிக் கொள்ளுகிருர்கள் இந்த மன்னர்கள். தமக்குச் சகோதரர்கள்போல் பாவிக்கவேண்டிய மற்றச் சாதாரண மனி தர்களின் வாழ்க்கையைப்பற்றி நினைக்காத வர்கள்"

சீமையில் பத்திரிகைச் சுதந்திரம், தனி மனிதனின் பேச்சு, எழுத்துச் சுதந்திரம் எத் தன்மையிலிருக்கிறது பாருங்கள்?

ஜனநாயக அரசியல் முறைக்கு எவ்விதத் திலும் முரணுக நடக்காத, நடக்க முடியாத பிரிட்டிஷ மன்னரைக்கூட ஆசிரியர்வெல்ஸ் அவர்கள் கடுமையாகக் குறைகூறுகிருர். நமது சுதேச சமஸ்தானுதிபதிகளை இப்படிக் குறையாக எழுதினுல் சும்மா இருப்பார் களா? வாய்ப்பூட்டு, கைகால்பூட்டு எல்லாம் இட்டு மனித சுதந்திரங்களைப் பறித்துவிடு வார்கள்! காலப்போக்கின் தன்மையை உணர நமது சமஸ்தானுதிபதிகள் பன்முறை ஆசிரியர் வெல்ஸ் அவர்கள் கூறியுள்ளதைப் படித்து, மனப்பாடம் செய்வதுகூட நல்லது!

ஏமாற்றம்!

"பரபரப்பை உண்டுபண்ணக்கூடிய செய் திகளிலும், செய்கைகளிலும் விசேஷ ஆர் வம் காட்டும் குணம்புடைத்த அமெரிக்கர்

3 AUG 1946
MADRAS

இவை எல்லாம் சென்னையிலேயே இப்பொழுது தயாராகின்றன

பதப்படுத்திய உருக்கு ஸ்பானர்கள்
அசிடிலின் ஜெனரேட்டர்கள்—மீடியம் பிரெஷர்
அசிடிலின் ஜெனரேட்டர்கள்—லோ பிரெஷர்
டெயில் போர்ட் செயின்கள்
ஸ்லாம் பூட்டுகள் (இரண்டு வகை வேலை செய்வது)
ஹெவி ட்யூடி பஸ், லாரி ஜாக்கிகள்
போர்ட்டபிள் தொழிற்சாலை கிரேன்கள்
போர்ட்டபிள் தொழிற்சாலை போர்ஜுகள்
ஸ்டோரேஜ் டாங்குகள்
உலோகத் தகடுகள் வெட்டும் ரோட்டரி மெஷின்கள்
போர்ட்டபிள் ரோலர் ஊத்தும் மெஷின்கள்
வீல் பாரோஸ்
பிளாட்பாரம் டிராலிகள்
அட்ஜஸ்டபிள் மெடல் ஸ்டூல்கள் முதலியவைகள்

தயாரிப்பவர்கள்:—

ஸிம்ஸன் அண்ட் கம்பெனி லிமிடெட்

மவுண்ட் ரோட், சென்னை.

பிராஞ்சுகள்:— பெங்களூர், திருச்சினுப்பள்ளி, உதகமண்டலம், ஹைதராபாத் (டக்கான்).

களில் ஆயிரக்கணக்கானவர்கள் அணுகுண்டு பரீட்சை புஸ்வாணமாக முடிந்ததைக் கண்டு வெட்கி, ஏக்கமுற்று அந்தத் துக்க அதிர்ச்சி தாங்கமாட்டாமல் உயிர்துறந்திருப்பார்கள்"!—இவ்வாறாக ருஷ்ய பத்திரிகையொன்று கூறியுள்ளது.

அணுகுண்டு பரீட்சை சம்பந்தமாகப் படாடோப பயங்கர செய்திகள் பரப்பப்பட்டன. "பிரும்மாண்டமான கப்பல்கள் தூள் தூளாகிவிடும். சுற்றுப்பக்கத்தில் பல மைல் விஸ்தீரணத்திலுள்ள சகல ஜீவ ராசிகளும், தாவரங்களும் அழிந்துவிடும். கடலின் அடிப்பாகத்திலிருந்து பெருத்த நிலப்பாகம் வெளியே கிளப்பப்படும். கடலில் பூகம்பம்போல் அபரிமிதமான கொந்தளிப்பு ஏற்பட்டு நகரங்கள் பல பாழாகிவிடும்."

ஆனால் நடந்ததென்ன? அவமானம்! ஏமாற்றம்! அணுகுண்டு நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டது! அணுகுண்டின் குறிக்கு இலக்காக ஏற்படுத்தப்பட்ட நிவாடா என்ற கப்பல் அணுகுண்டின் சக்தியை ஏளனம் செய்வதுபோல் ஆடி அசைந்து கம்பீரமாக நின்றது. அணுகுண்டு பகவானுக்குப் பலியாக அர்ப்பணம் செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான ஆடுகள், பன்றிகள் இவைகளெல்லாம் ஆனந்தமாய் ஆகாரத்தை உட்கொண்டு சுகமே இருந்தன. சப்தம்கூட அதிகமில்லை. கைத்துப்பாக்கியின் சத்தமே. புகைச்சல் மட்டும் அதிகம்!

இந்தப் புஸ்வாண வேடிக்கையை உலகத்தோருக்கு விளக்க 5000000000 டாலர்கள் செலவாம்.

அணுகுண்டு பரீட்சையினால் பெரியார்கள் கற்றுணர்ந்த பாடமென்ன?

"உலக முழுவதிலும் ஆதிக்கம் செலுத்த அமெரிக்கா எண்ணங்கொண்டு மற்றவர்களை மிகவும் பயமுறுத்த அணுகுண்டைத் தயாரித்தது. சமாதானத்தில் அமெரிக்காவுக்கு நம்பிக்கையில்லை. ஆயுத பரிகரணத்தில் ஆர்வமில்லை என்பது தெளிவாகிவிட்டது!"

ருஷ்ய பத்திரிகை பர்வடா

"உலகத்தில் பயங்கர கொடிய ஆயுதங்களின் ஆபத்து அணுக முடியாதவிடம்

இண்டோ கம்மர்ஷியல் பாங்க் லிமிடெட்

ரிஜிஸ்டர்டு ஆபீஸ்: மாயவரம் ★ ஸெண்ட்ரல் ஆபீஸ்: மதராஸ்

வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ. 25,00,000
செலுத்தப்பட்ட மூலதனம் ...	ரூ. 18,75,000
ரிஸர்வ் பண்டு ...	ரூ. 5,50,000
மொத்த ஆஸ்தி ...	ரூ. 4 கோடிக்குமேல்

ஸிட்டி ஆபீஸ்கள்:

சைனாபஜார், மாம்பலம், மயிலாப்பூர், பெரியமேட், திருவல்லிக்கேணி

அமதலவாலஸா	காரைக்குடி	சாலூர்	திருச்சிராப்பள்ளி
அனகாபள்ளி	கும்பகோணம்	சீயாழி	திருவாரூர்
சிதம்பரம்	மதுரை	தஞ்சாவூர்	வேலூர்
சித்தூர் (கொச்சி)	மருடேரு	தாடபள்ளிக்கூடம்	விழுப்புரம்
கடலூர் N. T.	பாலக்காடு	திலாறு R. S.	விருதுநகர்
காஞ்சீவரம்	பார்வதிபுரம்	திருநெல்வேலி டவுன்	விஜயநகரம்
ஈரோடு	புதுக்கோட்டை	திருநெல்வேலி ஜங்ஷன்	நாகப்பட்டணம்
அம்பாசமுத்ரம்	தென்காசி	வேதாரண்யம்	ஆம்பூர்

பிக்ஸட் டிபாஸிட்கள்:- ஒரு வருஷம் நூற்றுக்கு வட்டி ... ... $2\frac{3}{4}$% விதம்
இரண்டு „ „ ... ... 3% „
சேவிங்ஸ் பாங்கு கணக்கு வாரம் ரூ. 250/ வாங்கக்கூடியது ரூ. 5000/ வரை வட்டிவீதம் $2\frac{1}{2}$% „
கரண்ட் கணக்கு .. .. $\frac{1}{4}$% „

தங்கம், வெள்ளிபார், கவர்மெண்ட் பாண்டு, கடன் பத்திரங்கள், ஷேர்கள், வியாபாரச் சரக்குகள் முதலியவைகளின் பேரில் கடன்கள் கொடுக்கப்படும்.

எல்லாவிதமான பாங்கு நடவடிக்கைகளும் நடத்தப்படும்

எஸ். என். என். சங்கரலிங்க அய்யர்,
மானேஜிங் டைரக்டர்.



குமாரி ராஜம்	பி. எஸ். சரோஜா	கே. எஸ். வடிவாம்பாள்
ஆர். பலராமன்	குமரேசன்	ஜகதீசன்
ஜி. வி. சர்மா	ஜே. பி. பாபுதாஸ்	புளிமூட்டை முதலியவர்கள்

பாட்டுகள் : சிவன்

ஸ்டூடியோ : ஸோபனசலா

சங்கீதம் : கே. வி. மகாதேவன்

டைரக்ஷன் : பி. எஸ். ராமையா

விபரங்களுக்கு

போன் : 8447.

அம்பிகா பிலிம்ஸ்

17, கதெட்ரல் ரோடு
மதராஸ் 6.

ஒன்றுதான். அதுதான் பெரிய சண்டைக் கப்பல்!''

பிரிட்டிஷ் அட்மிரல் கன்னிங்ஹாம்.

''உலகில் சமாதானம் நிரந்தரமாக நிலவ அமெரிக்கா மிக்க பலம் பொருந்தியதாக இருக்கவேண்டும். அணுகுண்டு சோதனை இதற்கு வெகுவாகப் பயன்படும்''

அமெரிக்க அட்மிரல் பிளாண்டி.

''இத்தகைய பயங்கர ஆயுதங்கள் தனிப்பட்டவர்கள் கையிலிருப்பது ஆபத்து. சர்வதேசப் பாதுகாப்புச் சபையின் ஆதிக்கத்தின் கீழிருக்கவேண்டும்''

மேஜர் உட்.

''அணுகுண்டைக் கண்டு நாங்கள் திடுக்கிடமாட்டோம்!''

ஒரு ஜெர்மன் ராணுவ வீரன்.

எரிகிற வீட்டில் கொள்ளை!

உணவுப் பஞ்சம், துணிப்பஞ்சம், எல்லாம் பஞ்சம், வருவாய் மட்டு முதலிய துயர்களால் மக்கள் பிழைக்கவும் மாட்டாமல் சாகவும் வழிதெரியாமல் துடிதுடித்து ஏங்கி நிற்கையில் துணி மில் முதலாளிகள் அடித்த கொள்ளை இலாபம் போதாதென்று இன்னும் அதிகமாக மக்களை வாட்டி இலாபம் சம்பாதிக்கச் சதியாலோசனைத் திட்டமிடுவது எரிகிற வீட்டில் கொள்ளையடிப்பது போல்தானிருக்கிறது. துணிகளின் விலையையும், நூல் விலையையும் உயர்த்த இந்தச் சதியாலோசனைச் சுயநலக் கூட்டத்தார் தீர்மானித்துவிட்டனர். அன்னிய அரசாங்கமும் இக்கூட்டத்தாருக்குப் பக்கபலமாக அமைந்துள்ளது.

திருடர்களிடமே சொத்தைப் பாதுகாத்து ஒப்புவிக்க ஒப்படைத்த அப்பாவி கதைபோலத் துணிகள் வினியோகம், விலை நிர்ணயம் இவைகளை மில் முதலாளிகள் நிரம்பி உள்ள கமிட்டியாரிடம் அசட்டுத்தனமாய் ஒப்புவிக்கப்பட்டது. இதுதான் சமயமென்று ஒவ்வொரு மில் முதலாளியும் குபேரர்களாகிவிட்டார்கள். இஷ்டப்படி அதிக விலையை நிர்ணயித்துக்கொண்டார்கள். கள்ளமார்க்கெட்டுகளுக்கு அதிபதிகளானார்கள். பேராசையை அளவில்லாமல் பெருக்கிக்கொண்டார்கள்.

மில் முதலாளிகள் முன்பு 1945 அக்டோபர் மாதத்தில் சொல்லியதைக் கவனிப்போம். ''வரிகள் குறைக்கப்பட்டால் துணி, நூல் இவைகளின் விலையை மேலும் குறைக்கச் சாத்தியமாகும்'' என்று சொல்லி நவம்பர் மீ 1உ முதல் விலையையும் சற்றுக் குறைத்தார்கள். அமிதலாபவரியும் பிறகு எடுபட்டது. நாம்கண்ட பலனென்ன? இன்னும் விலை ஏற்றமே.

விலையை ஏற்ற முதலாளிகள் கூட்டத்தார் சொல்லும் காரணங்களைக் கவனிப்போம். உற்பத்தி குறைவு. 1945-ல் ஒவ்வொரு மாதமும் சராசரி 3700 லக்ஷம் கஜம் துணிகள் உற்பத்தியாயிற்று. 1946-ல் 350000 லக்ஷம் கஜம் துணிகளே உற்பத்தி. இதற்குக் காரணம் அடிக்கடி ஏற்பட்ட வேலை நிறுத்தங்களே.

உற்பத்தியைப் பெருக்க மில் முதலாளிகள் யாது செய்தார்கள்? வேலை நிறுத்தத்திற்குக் காரணமென்ன? மேலே சொல்லிய கணக்குப்படியே வேலை நிறுத்தத்தினால் உற்பத்தி அதிகம் பாதிக்கப்பட்டதாகத் தெரியவில்லையே? அமிதலாபவரி எடுபட்டுவிட்டதே! அதுவே பெரிய வருமானமாகவில்லையா? இவைகளைப்பற்றி முதலாளிகள் சிந்திக்க மறுக்கிறார்கள்.

விலையை உயர்த்தாவிட்டால் நஷ்டமேற்பட்டுவிடும் என்று நல்ல வேளையாகச் சொல்லப்படவில்லை!

''1945-46 லாபநஷ்ட திட்டங்களைக் கவனித்தால் மில் முதலாளிகளின் நிலைமை தெளிவாகும். லக்ஷாதிபதி கோடீசுவரராகியிருக்கிறார். கோடீசுவரர் கோடி கோடீசுவரராகிவிட்டார். கோடி கோடீசுவரர் பணத்தை என்ன செய்வதென்று தெரியாமல் தவிக்கிறார்! இந்நிலையில் விலையை உயர்த்துவது மில் முதலாளிகளின் பேரில் துவேஷம் கிளம்ப ஏதுவாகும்'' என்று பம்பாய் பத்திரிகையொன்று குறிப்பிட்டுள்ளது.

துணி விலை உயர்த்தியதிலும் சூழ்ச்சியைப் பாருங்கள்! சற்று மோட்டாத்துணிகளுக்கே அதிக விலை உயர்வு. 'நைஸ்' துணிகளின் விலை சற்றுக் குறைவாம்! எளிய மக்கள் நிறைந்த நாட்டில், துணி அகப்பட்டால் போதுமென்று இருக்கும் நிலையில் பெரும்பாலோர் வாங்கக்கூடிய துணிக்கு விலை அதிகம்! உற்பத்திக் குறைவான, கிடைக்கக் கூடாத 'நைஸ்' துணிகளின் விலை குறைவாம்.

பொது உடைமைக்காரர்களையும் அவர்களது பிரசாரத்தையும் கண்டு முதலாளிகள் நடுங்குகின்றார்களே? உண்மையில் பொது உடைமைக்காரர்களைத் தீவிரமாகத் தூண்டுவதற்கு மில் முதலாளிகளின் பேராசையும் மதிகெட்ட தன்மையும்தான் காரணம் என்பதை மறுக்கமுடியுமா?!

அணுகுண் வைத்தியம்

டி. பி. நவநீதகிருஷ்ணன்

அறியாமையின் இருள் நீங்க ஞானத்தின் விரிகதிர் பரப்பிவந்த புராதன இந்தியாவின் பேரறிஞரில் ஒருவரான கானடா என்பார், பல நூற்றாண்டுகளின் முன்னரே, தமது மதிகூர்ந்த சிந்தனையின் வாயிலாகவே பொருள்களின் அணு வியலைக் கண்டார்; அணுக்களின் இயக்க முறையை யொட்டின கொள்கைகளையும் வெளியிட்டார்.

அறிவிலும் கலையிலும் புராதன இந்தியருடன் போட்டியிட்டு அவர்க்கு நிகராய் உயர்ந்தவர் எனத்தக்க பண்டை கிரேக்கரில் ஒருவரான டெமாக்ரிடீஸ் என்பார் கி. மு. ஐந்தாம் நூற்றாண்டில் தமது அணுக் கொள்கையை அறிவித்தார். இருபத்து மூன்று நூற்றாண்டுகள் கடந்தன.

1810-ஆம் ஆண்டில் ஜான் டால்டன் என்ற ஆங்கில ஆசிரியர் புதுவணுக் கொள்கை யொன்றை நிறுவினார். இவ்வுலகிலுள்ள பொருள்கள் யாவும் தொண்ணூற்றிரண்டு அடிப்பண்டங்கள் (Elements) என்றவற்றாலேயே அமைந்தவை எனவும், ஒவ்வொரு அடிப்பண்டமும் அதனதன் தன்மையினவாயுள்ள மிகு நுண் நொய்களாலானது எனவும், அந்நுண் நொய்கள் 'அணுக்கள்' எனப்படும் எனவும், அணுவைப் பிளத்தல் இயலாது எனவும், ஓரடிப் பண்ட அணுவானது இன்னோரடிப்பண்ட அணுவாய் மாற இயலாது எனவும், அவரது கொள்கை கூறுவது. எண்பத்தேழு ஆண்டுகள் சென்றன.

ஜே. ஜே. தாம்ஸன் என்ற ஆங்கில விஞ்ஞானி தமது ஆராய்ச்சிகளின் வழியே காணப்பெற்ற மின்னுருக்கள் (Electrons) என்றவை அணுவின் பகுதிகளாயிருத்தல் வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார். வேறு பல விஞ்ஞானிகளும் தாம் செய்த வேறு வகைச் சோதனைகளினின்று தாம்ஸனின் முடிவு சரியே யென நிச்சயப்படுத்தினர். எனவே, அணு பிளக்கப்பட்டு அதன் பகுதிகள் தனித்தனி வேறாய்ப் பிரிக்கப்படலாம் என ஏற்பட்டது. அணுவின் நுண் பகுதியானதொன்று காணப்பட்டமையின், அதன் மற்றப் பகுதிகளையும் வெவ்வேறாய் அடைதற்கான வழிகளைக் காணும்பொருட்டு மிகத் தீவிரமாய் ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு வரலாயின. அவற்றையொட்டி அணுவைப் பிளத்தல் அவசியமாயிற்று. மிகச் சிறிய அணுவைப் பிளந்து அதில் மிக உறுதியுடன் பந்தனப்பட்டுள்ள நொய்ப் பகுதிகளைத் தனித்தனி வேறாகும்படி தகர்க்கக் கூடிய கூர்மையான வல்லாயுதம் தேவையாயிற்று. கியூரி அம்மையாரின் சலியா ஆராய்ச்சியின் பலனாய்க் காணப்பெற்றிருந்த 'ரேடியம்' என்ற பொருளினின்று இடையறாது வீசப்படும் மூவகைக் கதிர்களில் ஒரு தரமான ஆல்பாக் கதிர்கள் எனப்பட்டவை அணுவை ஊடுருவிப் பாய்ந்து அதிலமைந்த நொய்ப் பகுதிகளைப் பெயர்த்தெறியத்தக்க ஆயுதங்களாய் உபயோகிக்கப்படலாம் என அணுவாராய்ச்சியாளர்க்குத் தோன்றிற்று. ஏற்ற ஆயுதங்களெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட அக்கதிர்கள் அணுக்களை நோக்கி எய்தப்பட்டன. அணுவினின்று இன்னொரு வகையான அணுப்பகுதி கிடைத்தது. அதற்குப் புரமுரு (Proton) எனப் பெயரிடப்பட்டது. ஆல்பாக் கதிர்களின் பிரயோகத்தால் இன்னும் பல ஆச்சரியகர சம்பவங்களும் நேரிட்டன. நைட்ரஜன் அணு மறைந்து ஆக்ஸிஸன், ஹைட்ரஜன் என்ற வேறு அடிப்பண்ட அணுக்களாய் மாறித் தோன்றின அற்புதமும் காணப்பட்டது. அவ்வாறான அடிப்பண்ட மாற்றத்திற்கு, 'பரவிகற்பம்' (Transmutation) என்று பெயர். பரவிகற்பத்தையொட்டி நேரிட்ட அணுச் சிதறல்களினின்று இன்னொரு வகையான அணுப்பகுதி அகப்பட்டது. அதற்கு 'நண்ணுரு' (Neutron) எனப் பெயரிடப்பட்டது. ஆகவே, பிளக்கவியலாதது என டால்டனால் கருதப்பட்ட அணு சிதறடிக்கப்பட்டது. டால்டனின் அணுக் கொள்கையைத் திருத்தவேண்டிய

தாயிற்று. அணுவின் உள்ளமைப்பைக் காணும் வழியே அணுவாராய்ச்சியின் நாட்டம் செலுத்தப்பட்டது.

விதி காணுதலிலும் சோதனையாற்றலிலும் சிறந்த பேரறிஞர் பலரது ஓயாத உழைப்பின் பலனாய், அணுவின் சிற்பநுட்பம் துலக்கமாயிற்று. அணுவொன்று புரமுருக்களும் நண்ணுருக்களுமாயினும், அன்றிப் புரமுருக்கள்மட்டுமேயாயினும் இறுகப் பதிக்கப்பட்ட நடுமுதல் (நியூக்ளியஸ்) என்ற பகுதியையும் அதைச்சுற்றி அதிவேகமாய் வட்டமிட்டு ஓடிக்கொண்டுள்ள மின்னுருக்களையும் கொண்டது என விளக்கப்பட்டது. அணுவின் நொய்ப் பகுதிகள், முறையே, வெவ்வேறு தொகைகளாயானவாறு அமைதலாலேயே வேற்றுமைப்பட்ட தொண்ணூற்றிரண்டு வகைகளாய் அணுக்கள் இருப்பன எனவும் நிரூபிக்கப்பட்டது. ஒரே வகையான அடிப்பண்டவணுக்களும் வெவ்வேறு தொகைகளான நியூட்ரான்களைக் கொண்டிருக்கலாம் எனத் திட்டமாயிற்று. அவ்வாறானவை இணைத்தாமங்கள் (ஐஸோடொப்புக்கள்) எனப்படுவன. ஓரடிப் பண்டத்தின் ஐஸோடொப்புக்கள் நிறையைத்தவிர மற்ற எல்லாத் தன்மைகளிலும் ஒத்திருப்பன. இயற்கையாகவே வாய்ந்த அணுபிளக்கும் கருவிகளைக் கொண்டு தெரிந்துகொள்ள இயன்ற விஷயங்களில் முக்கியமான பலவும் அறியப்பட்டுவிட்டன.

இயற்கையளித்த ஆல்பாக்கதிர்களைவிட அதிகமான சக்தியுடைய ஆயுதங்களைச் செயற்கையாய்ப் பண்ணும் முயற்சியில் விஞ்ஞானிகள் ஈடுபடலாயினர். ஆற்றல் மிக்க மின்சார இயந்திரங்களைக்கொண்டு மின்னுருக்களை அதிவேகமாய்ப் பாயும்படி செய்து அவற்றை அணுக்களினுள் செலுத்தலால் ஏற்படும் விளைவுகளைக் கண்டு அணுவைப் பற்றின தம் அறிவைப் பெருக்கிக்கொள்ளலாம் என அவ்விபுதர் எண்ணினர். தக்க இயந்திரம் காண ஆராய்ச்சிகள் செய்யப்படலாயின. பல வகையான இயந்திரங்கள் கட்டப்பட்டன. அவற்றிலொன்று சிறந்ததெனக் கருதப்பட்டது. அங்ஙனம் தேர்ந்தெடுக்கப்பட்டது சக்கர கூர்த்திகை (ஸைக்ளோட்ரான்) என்ற வகையினது. கவண் கயிற்றில் கல்லைவைத்துச் சுழற்றிவிட

வாழையடி வாழையாக
வந்த நம் கூந்தல் வளர்ப்புக்
கலையின் பொக்கிஷம்

ஜாப்கோ
ஹேர் குரோயர்

இளவயதில் ஏற்படும் நரையைப் போக்கி, உதிரும் கேசத்தை நிறுத்தி கூந்தலை நீண்டு வளரச் செய்யும்.

ஜயபாரதம் கம்பெனி
மல்லேஸ்வரம் - பெங்களூர்

லால், அது மிக வேகமாய் எறியப்படுகிற முறையையொட்டி ஸைக்ளோட்ரான்கள் வேலைசெய்வன. அதில், துரிதமாய் மாறி மாறிக்கொண்டுள்ள வன்மைமிக்க மின் சாரப் பாய்த்தலின் தொடர்பாய்ப் பொருந்துகிற வலிமைமிக்க காந்தப் புலத்திடை செல்லச் செல்லப் பெரிதாய்க் கொண்டுபோகும் வட்டப்பாதைகளில் மின்னுருக்கள் இன்னோரன்னவை மிக விரைவுடன் பாய்ந்தோடின பிறகு கடும் வேகங்கொண்டபடி வெளியே வீசி யெறியப்படுமாறு அமைக்கப்படுகிறது. அணு தகர்க்கிற பெரும் பீரங்கிகளான ஸைக்ளோட்ரோன்களை உபயோகித்தவாறு அணுவாராய்ச்சிகள் வலுத்தன. அவ்வழியே ஆற்றப்பட்ட சோதனைகளின் பலனாய், அடிப் பண்டமொன்றின் ஒரு வகை ஐஸோடொப்பை இன்னொரு வகையினதாய் மாற்றலாம் எனக் காணப்பட்டது. அவ்வாறான மாற்றத்தை யொட்டி அணு நிறை மாறுகிறது. அப்போது ஓரளவு நிறையுடனிருந்த பொருள் முற்றும் அழிந்தவாறாய் விடுகிறது. கண்கூடான அச்சோதனை முடிவு, இவ்வுலகிலுள்ள பொருள்களின் மொத்த நிறை மாறாதிருப்பது என்ற விஞ்ஞான மூல சித்தாந்தத்தை விரோதித்தவாறாயிருந்தது. சோதனைச் சான்றை மறுக்கமுடியாதவராய், விஞ்ஞானிகள் அந்த மூல சித்தாந்தத்தைக் கைவிட்டனர். ஆனால் அவ்வாறான சோதனைச் சான்று காணு முன்னரே விதியியல் விஞ்ஞானத்தில் சிறந்தவரான ஐன்ஸ்டீன் என்பார், மேற்கூறப்பட்ட விஞ்ஞான மூல சித்தாந்தம் தவறானது எனவும், இவ்வுலகிலுள்ள பொருள்களின் நிறையளவும் இங்குள்ள சக்தியினளவும் கூடின மொத்தமே மாறாதிருப்பது என்பதே சரியான சித்தாந்தம் எனவும் விதிமுறை வாயிலாகவே விளக்கியிருந்தனர். இன்னும், ஒரு கிராம் நிறையுடைய பொருள் முற்றும் சிதைவுறலால் தொண்ணூறு லக்ஷம் கோடானுகோடி எர்க்குகள் அளவான சக்தி விளைவிக்கப்படும் எனவும், அவ்வாறே, அந்த அளவான சக்தி மறைதலினின்று பொருள் அமைவுறலாம் எனவும் அவர் விதியியலாய்க் கணக்கிட்டுக் கூறினார். ஆகவே, அணுவின் நியூக்ளியஸ் கொண்ட நியூட்ரோன்களின் எண்ணிக்கையை மாற்றும் வழியே அபரிமிதமான சக்தி விளைவிக்கப்படலாம் என ஏற்பட்டது, ஆனால் நியூக்ளியஸின் அமை மாற்றங்களை நிரல்படச் செய்தற்கென உபயோகிக்கவேண்டிய கருவிகளில் மூட்டப்பட்ட சக்தியினளவும் மிக்கதாயிருந்தது. எளிதாக நியூட்ரன்களை விளைவிக்கும் முறை அறியப்படின் நியூக்ளியஸின் அமை மாற்றங்களை உண்டாகும்படிசெய்து பயனுறு அணுவியலான சக்தியைப் பெறலாம் எனக்காணப்பட்டது. அம்முறைகளைக் காணும் பொருட்டு விஞ்ஞானிகள் உக்கிரமான ஆராய்ச்சிகளில் முனைந்தனர். ஜே. ஜே. தாம்ஸன், அணுவினும் நுண்ணிய பகுதிகள் அதனுள் உள என நிரூபித்த பிறகான நாற்பது ஆண்டுகளினுள் மேற்கூறப்பட்டவாறு விஞ்ஞானம் முன்னேற்றமடைந்து கொண்டேவந்தது. விஞ்ஞான உலகில் புரட்சியியலான மாறுதல்கள் பல நேரிட்டுவந்தனவாயினும், சென்ற நூற்றாண்டின் மூல விஞ்ஞான சித்தாந்தங்களையே குலைத்து விஞ்ஞானத்தையே புதுப்பித்தவாறான அச்செய்திகள் பாமரவுலகுக்கு எட்டவில்லை.

1939-ஆம் ஆண்டு பிறந்து எட்டுமாதங்களாயின. இரண்டாம் உலகப்போர் மூண்டது. அறிவாக்கம் நாடி அணுவாராய்ச்சியிலீடுபட்டிருந்த விஞ்ஞானிகள் பலர், அழிவுப் பெருக்கத்தில் சிறந்த வல்லாயுதங்கள் அமைக்கும் வழிகளைக் காணும்படி ஏவப்பட்டனர். அணுவின் நுட்பத்தை ஆராய்ந்தவழியே பெற்ற சிறந்த விளைவுகளையொட்டி, போர்க்கருவிகளைக் கட்டலாயினர். சோதனை மன்றத்துப் பெருமையை நிலைநாட்டினர். நியூக்ஸியளின் அமை மாற்றத்தையொட்டி ஏற்படும் பொருள் சிதைவினின்றெழும் அபரிமித சக்தியை உபயோகித்தபடியாகும் அணு வெடிகுண்டுகள் அமைக்கப்பட்டன. விமானப் படைவீரர் அவற்றைத் தூக்கிக்கொண்டு பறந்துசென்று பகைவர் நாட்டில் போட்டனர். நகரங்கள் ஒழிந்தன; மாந்தர் மாய்ந்தனர்; போர் முடிந்தது.

நாற்பது ஆண்டுகளாய் அறிவை விரித்து வந்திருந்த அணுவாராய்ச்சிகளைப்பற்றிக் கேள்வியேனும் படாதிருந்தவர்க்கும் அணுவின் மகிமை பிரகடனமாயிற்று. ஆஹா! கொடுமை! கொடுமை!!

எனக் கூக்குரலிட்டனர் பலர். விஞ்ஞானத்தைச் சபித்தார்கள். அணுவெடி குண்டுகளுக்குச் சாதனமாயிருந்த ஆராய்ச்சி மன்றங்கள் மீது அவ்வணு வெடிகுண்டுகளையே போட்டு அவற்றைத் தரையோடு தரையாய்ப் போகும்படி செய்துவிட்டு, விஞ்ஞானத்தை அறவே ஒழித்தால்தான் உலகத்துக்கு க்ஷேமம் என்றனர். அப்பேரராவாரத்திடை, கேட்கப்பட்டன மென் குரலில் இச்சொற்கள்: 'அணுவாராய்ச்சியின் விளைவாய் இதுகாறும் உலகினோர்க்கு அளிக்கப்பட்டுள்ள நலங்கள் பல; இனியும் வழங்கப்படும்படியானஎண்ணற்றன உள.' அவ்வாறு குறிக்கப்பட்ட நலங்கள் என்பதைத் தெரிவிப்பதற்கே நான் இக்கட்டுரையை எழுதத் தொடங்கினேன் என்பதை அம்மென்குரல் எனக்கு நினைவூட்டுகிறது. இனி நான் எனக்கிட்டுக்கொண்ட அப்பணியைச் செய்ய முயல்கிறேன்.

அணுவினும் நுண்ணிய நொய்கள் அணுவினுள் உள்ளன என்பதைத்தெளிவாக்கி, அணுபிளக்கும் ஆராய்ச்சிகளின் வித்தை நட்டது, தாம்ஸன் செய்த அருஞ்சோதனையின் விளைவானது என மேலே கூறினேன். அச்சோதனையானது, அமுக்கம் மிகக் குறைந்த வாயுக்களினூடே மின்சாரத்தைப் பாய்த்தல் என்பதை யொட்டியது. தாம்ஸனின் சோதனை வழியைப் பின்பற்றிச் செய்த ஆராய்ச்சிகளின் விளைவாகவே, ராஜ்ஞன் என்ற விஞ்ஞானி புதிர்க் கதிர்களை (எக்ஸ் ரேக்களை)க் கண்டுபிடித்தார். எக்ஸ்ரேக்களைப்பற்றி இன்று பாமரரும் அறிவார். அவை வைத்தியத்தில் கையாளப் பட்டுவந்து பெரும் நலங்களைத் தந்துள என்பதை எடுத்துக் கூறல் அவசியமன்று. எக்ஸ் ரேக்களைப்பற்றி விரித்துரைத்தல் இக்கட்டுரையின் நோக்கமல்ல. நாடறிந்தவாறு பரவி அக்கதிர்கள் வைத்திய சிகிச்சை முறையில் ஒரு முக்கியப் பகுதியாய் இருந்துவருவன என்பதைக் குறிப்பிடின் போதியதாம். நோய்வாய்ப்பட்டு மிகவும் துயருற்றவர்க்கு எக்ஸ்ரேக்கள் ஆறுதல் அளித்த வழியே வழங்கப்பட்ட நன்மையினளவு அணு வெடிகுண்டின் நிமித்தம் விளைந்த தீமையைவிடப் பன்மடங்கு மிக்கதாம்.

அணு பிளக்கும் ஆராய்ச்சிக் கருவிகளாய்ப் பேருதவி அளித்தவை இரேடியத்தினின்று வீசப்படும் ஆல்பாக் கதிர்களே எனக் கூறினேன். வைத்திய முறையில் இன்று மேன்மை யடைந்துள்ள ரேடிய சிகிச்சை முறையைப்பற்றி நான் விளம்பரம் செய்யவேண்டியதில்லை. எவ்வாறுன சிகிச்சையாலும் கண்டிக்கப்படாதிருந்த புற்றுப்புண் (Concer) வாய்ப்பட்ட நோயாளிகள் ரேடிய வைத்தியத்தால் குணமடைகின்றனர். இவ்வகையில் தேறுதலுற்றோரின் தொகை அணு வெடிகுண்டால் கொல்லப்பட்டோரின் எண்ணிக்கையைவிட அதிகமானது.

அணுவாராச்சியை யொட்டிச் சிறந்த சாதனங்கள் பல அமைக்கப்பட்டன. அவ்வகைகளில் முக்கியமானதொன்று ஒரே பொக்குகை (வால்வு) அல்லது மின்னுருக் குழாய் (Electron Tube) எனப்படுவது. வானொலி பரப்பும் நிலையங்களிலும் அவ்வாறு பரப்பப்படும் ஒலியைக் கேட்பதற்கான கருவிகளிலும் முக்கியமாயிருப்பவை மின்னுருக் குழாய்களே. அவற்றை யொட்டிக் கதிர் விரியலைகள் (ரேடியோ அலைகள்) எனப்படுகிற மின்காந்த அலைகள் விளைவிக்கப்படலாம். அவ்வலைகள் பல வளவான நீளங்களினவாயிருக்கலாம். அவற்றில் நீளங்குன்றின் குட்டை யலைகளைக்கொண்டு பொருள்களைச் சூடாக்கலாம். சாதாரணமாக நாம் ஒரு பொருளைச் சூடேறும்படி செய்யும்போது, அச்சூடு அதன்மீது ஆரம்பத்தில் உறைக்கும் வெளிப்புறமே முதலில் சூடாகிறது. ஆனால், ரேடியோ அலைகளைக்கொண்டு சூடேற்றுவிக்கப்படும் பொருளினது உட்பக்கத்தில் முதலாகச் சூடு உண்டாகிறது. ஆதலால் ரேடியோ அலைகளின் வீச்சுக் குட்படுத்தி ஒருவர்க்குக் காய்ச்சல்காணும்படி செய்ய இயலும். அப்படிச்செயற்கையாய்க் காய்ச்சலுறும்படிசெய்து சிலவகை வியாதிகளைச் சொஸ்தப்படுத்தலாம். இற்றைச் சிறந்த வைத்தியசாலைகள் பலவற்றில் செயற்கைக் காய்ச்சல் தருதற்கான குட்டைரேடியா அலை நிருமிதங்கள் உள.

அணுமீது ஆராய்ச்சியாளர் பெற்ற வெற்றியின் சிறந்த அறிகுறியான செயற்கைத்திற பரவிகற்பம் (Artificial Transmutation) என்பதையொட்டி அருமை

யான வைத்திய முறைகள் சில காணப்பெற்றுள. இயற்கையாகவே கதிர்வீச்சுத் தீவிரம் (Radio-activity) வாய்ந்த இரேடியத்தினின்று வைத்தியமானது பெரும் விளைவுகளைப் பெற்றது. அம்மட்டுடன் நில்லாது செயற்கைத்திறபரவிகற்பத்தையொட்டி கார்பன், நைட்ரஜன், பாஸ்பரஸ், ஸோடியம், அயோடின், ஹைட்ரஜன் இன்னோரன்ன அடிப் பண்டங்கள் பலவும் கதிர்வீச்சுத் தீவிரம் அடைந்தபடி செய்யப்பட்டு, அவற்றினின்றும் நல்ல வைத்தியமுறைகள் பெறப்பட்டுள. ஸைக்ளோட்ரான் என்ற அணு பிளக்கும் இயந்திரத்திலாயினும், அணு வெடிகுண்டு முறயையொட்டிய யூரேனிய அடுக்கு (Uranium Pile) என்றதிலாயினும் அடிப்பண்டத்தை வைத்து அதைத் தகர்த்தலால் கதிர்வீச்சுத் தீவிரமுடைய அதன் ஐஸோடோப்புக்கள் விளைகின்றன. அவை சில நாட்களுக்கு இடையறாது கதிர்கள் வீசிக்கொண்டு இருப்பன. அக்கதிர்கள் வீசப்பட்டு வருங்கால் அவை மிளிரும் இடங்கள் தெளிவாய் ஆராயப்படலாம். உலகத்திலுள்ள ரேடியத்தின் அளவு மிகச் சொற்பமே. ஆதலால் அவ்வாறான ஆராய்ச்சிகளுக்கு ரேடியத்தை உபயோகித்து அதைச் செலவிடக்கூடாது. ஆனால் கதிர்வீச்சுத் தீவிரமுடைய அயோடின் முதலியவற்றைப் போதியவளவுக்கு உண்டாக்கிக் கொள்ளலாம். அங்ஙனம் கதிர்வீச்சு அயோடினை (Rodio Iodine) உடலின் பல பகுதிகளினுள்ளும் செல்லவிட்டு ஆங்காங்கு நடைபெற்று வருகிற நிகழ்ச்சிகளைப்பற்றித் திருத்தமாய் அறியலாம். அங்ஙனமான பரிசிலனையையொட்டி உடல் எவ்வகையிலும் பாதிக்கப்படாது. அவ்வழியே, எலியின் பல்லில் முதலினின்றேயிருந்து வந்த பாஸ்பரஸ் அணுக்கள் எவையெனவும், எலி சற்று முன்னரே உண்ட பொருளினின்று பல்லில் ஏறினவற்றினின்று அமைந்த பாஸ்பரஸ் அணுக்கள் எவையெனவும் வேற்

மெரீ பிஸ்கோத்

Merry

BISCUITS. (ERODE)

மெரி பிஸ்கோத் கம்பெனி

உயர்தர பிஸ்கோத்துகள் தயாரிப்பவர்கள், ஈரோடு.

றுமைப்படுத்திக் காணக்கூடிய நுட்பம் பெறலாம்.

உடலிலுள்ள தைராயிடு கிரைண்டு என்ற கிரந்தி கொண்டுள்ள அயோடின் அணுக்களையொட்டிய கோளாறுகளால் வளரும் பிள்ளைகளை ஒருவாறான வியாதி பீடிக்கிறது. அதற்கு, இதுகாறும் அயோடீனை ஊசியால் ஏற்றி வைத்தியர்கள் சிகிச்சை அளித்துவந்தனர். ஆனால் கோளாறுகளைப்பற்றின விவரங்கள் அறிய முடியாதிருந்தமையின், ஊசியால் ஏற்றவேண்டிய அயோடினின் அளவு முதலானவற்றைச் சரியாய்த் திட்டம் செய்ய முடியாதிருந்தது. ரேடியோ அயோடீனைக்கொண்டு அக் கோளாறுகளின் விவரங்களைத் திருத்தமாய் அறிந்து தக்கவாறாக அயோடீன் சிகிச்சையை அளிக்கலாம். நீரிழிவு வியாதியஸ்தருக்கு இன்ஸுலின் இஞ்சக்ட்செய்து வியாதியின் கடுமை கண்டிக்கப்படுகிறது என அனைவரும் அறிவார். ஆனால் சிலருக்கு இன்ஸுலின் இஞ்சக்ஷனால் பலன் ஏற்படுவதில்லை. ரேடியோ அயோடீனைக்கொண்டு அதற்கான காரணத்தைக் கண்டுபிடித்து பலன் உண்டாகும்படி இன்ஸுலின் இஞ்சக்ட் செய்யலாம். இரத்தத்தில் நுண்ணளவுக்கு இரும்பு கலந்துள்ளது எனவும் அவ்வாறான இரும்பு அணுக்களின் தொகையைப் பொறுத்துப் பலவித உடல் நிலைமைகள் ஏற்படுவன எனவும் பலர் அறிவார். ஆனால் அந்த இரும்பு அணுக்களையொட்டித் திருத்தமான விஷயங்கள் இதுகாறும் அறியப்பட்டில. ரேடியோ இரும்பின் கதிர்வீச்சுத் தெளிவைக் கொண்டு, இரத்தத்தில் இரும்பு சம்பந்தமாய் ஏற்படும் கோளாறுகளைத் திருத்தமாய் அறிந்துகொண்டு ஏற்ற சிகிச்சை செய்யலாம்.

ஸைக்ளோட்ரான், யூரேனிய அடுக்கு, இன்னோரன்ன கருவிகளைக்கொண்டு செய்யப்படும் கதிர்வீச்சுத் தீவிரமான ஐஸோடொப்புக்களை உபயோகித்துப் பலன் அடைதலைத் தவிர அக்கருவிகளின் இயக்கவழியே வெளிப்படும் நேர்முகக் கதிரங்களாலும் பயன் பெறலாம். புற்றுப்புண் போன்றவற்றின் சிகிச்சைக்கு நேர்முகக் கதிரங்களே எக்ஸ்ரேக்களையும் இரேடியக் கதிர்களையும்விடச் சிறந்தவை.

ஆகவே அணு வெடிகுண்டைத் தந்த ஆராய்ச்சிகளே வைத்திய முறையையொட்டிச் சிறந்த விளைவுகள் வழங்கியுள்ளன எனலாம். அணு வெடிகுண்டைக் காண ஆராய்ச்சிகள் மிகவும் வலுத்துவந்திருந்த சென்ற நான்கு ஆண்டுகளினுள், கதிர்வீச்சுத் தீவிரமுடைய பொருள்கள் அரிதாகவேயிருந்தன என்றபடியான நிலைமையினின்று அவ்வகைப் பொருள்கள் தாராளமாய்க் கிடைப்பன என்றபடியான நிலைமைக்குத் தாவி விட்டோம். அணு வெடிகுண்டையொட்டிக் கண்டுபிடிக்கப்பட்ட சங்கிலித் தொடர்பு அடுக்கு (Chain Reaction Pile) என்றது, நியூக்ளியஸ் அமை மாற்றத்திற்கான நியூட்ரோன்களை விளைவித்தலில் பத்து லக்ஷம் ஸைக்ளோட்ரோன்களுக்கு நிகரானது எனக் கூறப்படுகிறது. ஸைக்ளோட்ரோன் ஒன்று வைத்திய சிகிச்சையைப் பொறுத்து இரண்டு பவுண்டு ரேடியத்தின் கதிர்வீச்சுத் திறன் கொண்டது. 1940-ஆம் ஆண்டில் இவ்வுலகம் முழுதிலுமே இரண்டு பவுண்டு ரேடியம்தான் இருந்தது.

ராச்செஸ்டர் யூனிவர்ஸிடியில் அணுகுண வைத்திய ஆராய்ச்சிப் பிரிவினைத் துறையின் நடப்பாளரான (Director of Atomic Medical Research Department) டாக்டர் ஆண்டரூ, ஹெச். டௌடீ என்பார் சமீபகாலத்தில் ஆற்றின சொற்பொழிவில் கூறினவற்றுள் சில மொழிகளை உரைத்து இக்கட்டுரையை முடிக்கலாம் என எண்ணுகிறேன். அவர் கூறினார். "அணுவின் அபரிமிதமான சக்தியைப் பெற்று அதை ஏற்றவாறு ஆளலாம் என்பது உண்மையாய்விட்டது. அவ்வுண்மை நிலைநாட்டப்பெற்று அணுயுகமும் பிறந்துவிட்டது. இனிப் பிறகிடல் இல்லை. அணுதரும் மாணாற்றலை நலத்திற்கேற்றவாறு பயன்படுத்திக்கொள்ளும் பொறுப்பு எல்லா நாட்டினர்க்கும் பொதுவானதொன்று. அணுசக்தி நிமித்தம் நேரிடக்கூடிய அபாயங்கள் மிகுந்திருப்பன என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அந்தச் சக்தியை ஏற்றமுறையில் உபயோகித்தலால் விளையக்கூடிய நன்மையின் பேரளவு கற்பனையையும் மலைக்கச் செய்யும் வண்ணமானது."

யமுனைக் கரையிலே

ரா. ஸ்ரீ. தேசிகன்

காசியில் என் நண்பர் வீட்டில் தங்கினேன். அவர் எனக்குக் காட்டிய அன்பை என்றும் மறவேன். காசியில் காணவேண்டிய இடங்களையெல்லாம் பார்த்துவிட்டு வீடு திரும்பினேன். மணி ஒன்று இருக்கும். வெயில் கடுமையாய்க் காய்ந்துகொண்டிருந்தது.

"திருவேணியில் நீராட வேண்டுமானால் இல்லஹபாத்திற்குப் போகாமல் தாராகஞ்சுக்கு டிக்கிட்டு வாங்குங்கள். அங்கிருந்து நீராடுமிடத்திற்குப் போவது அதிகமான சிரமமாயிராது. ரயில் சாயங்காலம் ஆறு மணிக்குத்தான். ஊருக்குக் கிளம்புவதாயிருந்தால், வெயிலைப் பாராட்டாது மூன்று மணிக்கே புறப்படவேண்டும். ஏனெனில் நெருங்கிய கூட்டம் உம்மை முற்றுகை போட்டுவிடும். கூட்டத்தைப் பிளந்து கொண்டு போவது அணி வகுக்கப்பட்ட ஒரு பெருஞ் சேனையைப் பிளந்துகொண்டு போவதை ஒக்கும்" என்று அவர் புன்னகை பூத்தார். அவரோடு பேசிக்கொண்டிருக்கும்பொழுதே பொழுதும் மெல்லத் தேய்ந்துவிட்டது.

"புறப்படலாமே" என்றார்.

"இதோ" என்று பதில் சொன்னேன். அவரிடம் விடை பெற்றுக்கொண்டு ரயில்வே ஸ்டேஷனுக்குப் போகும் பாதையில் அடிபெயர்த்து வைத்தேன். என் நண்பர் குடியிருக்கும் இடத்திற்கும் ஸ்டேஷனுக்கும் குறைந்தது இரண்டு மைல் தூரமிருக்கும். நடந்துவிடலாமே என்ற எண்ணம் வந்தது. ஆனால் வெயிலையோ கண்கொண்டு பார்க்கமுடியவில்லை. அனல் வீசிற்று. அப்படியே என்னை வறுத்தெடுத்துவிடுமோ என்று அஞ்சும்படி இருந்தது வெயிலின் கொடுமை. ஊரெல்லாம் சுற்றினதால் மிகுந்த அயர்வு ஏற்பட்டிருந்தது. இந்தச் சோர்வில் நடந்தால், வெயிலின் வெப்பம் மூளையைத் தாக்குமோ என்ற பயம் என்னுள்ளத்தே கரந்துவந்தது. பாதையில் ஒரு சைக்கிள் ரிட்சா நின்றுகொண்டிருந்தது. ரிட்சாவில் அன்றுவரையில் நான் ஏறினதில்லை. ரிட்சாவில் ஏறலாமா? ஏறக்கூடாதா? என்ற சர்ச்சை என் மனதில் எழ ஆரம்பித்துவிட்டது. சாதாரண ரிட்சாவுக்கும், இதற்கும் வித்தியாசமிருக்கிறதே. நேரே நம்மைத் தள்ளினால்தானே சிரமம். சைக்கிள் இருப்பதினால் அதில் அதிகத் தொந்தரவு இருப்பதற்கு நியாயமில்லையே. என்ன இருந்தாலும் மனிதனை மனிதன் இழுப்பதுதானே என்ற உணர்ச்சி வந்தது. ஆனால் நான் ஏறி உட்கார்ந்தால் அவன் பிள்ளைகுட்டிகளுக்கு அன்றைக்கு வேண்டிய உணவுக்கு ஆகுமே என்ற மற்றொரு உணர்ச்சி இதை எதிர்த்தது. இவ்விரு உணர்ச்சிகளுக்கிடையே நான் திகைத்து நின்றேன். எனினும் என்னுடைய அயர்வு, எப்படியாவது இன்றிரவே தாராகஞ்சுக்குப் போகவேண்டும் என்ற ஆசை, வெயிலில் நடந்தால் வியாதி வெக்கை வருமோ என்ற அச்சம் எல்லாம் சேர்ந்து சதிசெய்து என்னை ரிட்சாவில் அமரும்படி செய்துவிட்டன.

வண்டியில் ஏறி உட்கார்ந்தேன். ரிட்சாகாரன் வண்டியைத் தள்ளினான். வெயில் சினந்து காய்ந்துகொண்டிருந்தது. அவன் உடம்பெல்லாம் வியர்வை அருவிபாய்ந்தது. அத்தனை கஷ்டத்திற்கும் நானா காரணமாக வேண்டும் என்று என்னை நொந்துகொண்டேன். சிரமத்திற்குமேலே அதிகமான ஊதியங் கொடுக்காதுவிட்டால் இந்தப் பாபத்தைத் துடைக்கமுடியாதென்று தேர்ந்தேன். என்னுடைய உடன் பிறந்தோனே என்னை வேடிக்கையாக இழுத்துச் செல்கிறதாக இருக்கட்டுமே என்ற எண்ணமும் வராமற் போகவில்லை. தேவாதி தேவனே வண்டி ஓட்டவில்லையா? அகில புவனரதத்தைச் செலுத்துகிறவனும் ஒரு சாரதிதானே. ரிட்சாகாரனா இவன்? ரிட்சாகாரன் இல்லை —ஆண்டவனே இந்த வடிவுகொண்டு இழுக்கின்றான் என்ற உணர்ச்சி வந்தவுடனே மனத்திற்குள்ளேயே அவனைக் கைகூப்பித் தொழுதேன்.

வண்டி ஸ்டேஷனுக்குப் போய்ச் சேர்ந்தது. ரிட்சாகாரனுக்குப் பேசின தொகையைக் காட்டிலும் அதிகம் கொடுத்தனுப்பினேன். அவன் மிகுந்த மகிழ்ச்சியோடு வீடு திரும்பிப் போனான்.

டிக்கிட்டுக் கொடுக்க இன்னும் ஒரு மணி ஆகும் என்றார்கள். இருந்தாலும் டிக்கிட்டுக் கொடுக்கிற ஜன்னலண்டை முன்னமேயே போய் நின்றேன். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் என்னைச் சுற்றி ஜனத்திரள்

சூழ்ந்து அலைக்குமேல் அலையாய் என்மீது மோதிற்று. டிக்கிட்டு வாங்கின பிறகு அவ்வலைகளை யெதிர்த்துப் போராடின சிரமத்தை நினைக்கும்பொழுது இன்னும் அச்ச உணர்ச்சி நரம்பில் பாய்கின்றது.

ரயில் வண்டியில் உட்கார்ந்தபொழுது தாராகஞ்சு என்ற பெயர் அந்த ஸ்டேஷனுக்கு ஏன் வந்தது என்று சிந்தித்தேன். மலைக் குகைகளிலும், செறிந்த காடுகளிலும் மறைந்த கங்கை, சமவெளிகளிலே—ஒரு தாரையாய்—பெருக்காய் அங்கே ஓடுகிறபடியால் அப்பெயர் அதற்கு வந்தது போலும்.

தாராகஞ்சுக்கு நான் போய்ச் சேர இரவு சுமார் ஒன்பது மணி இருக்கும். அன்றிரவு கங்கைக்கரை ஓரத்திலுள்ள உத்திராதி மடத்தில் தங்கினேன். அம்மடத்திலுள்ள புரோகிதருக்கு ஓர் அறிமுகக் கடிதம் வாங்கிக்கொண்டு போயிருந்தேன். அவர் எனக்கு வேண்டிய உதவியைச் செய்தார். என் நண்பர் வீட்டில் ஒரு பெருத்த விருந்தை உண்டதால் இரவு பசியில்லை.

வெறும் வயிற்றோடு படுக்கக் கூடாது இந்தப் பாலைச் சாப்பிட்டுவிட்டுத் தூங்குங்கள் என்றார் அப்புரோகிதர்.

பாலைப் பருகிவிட்டு, நிலாத் துயிலும் முற்றத்தில் அவர் தந்த ஜமக்காளத்தைப் பிரித்துப் படுத்தேன், அன்றிரவே நிலாப் படிந்த கங்கையைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் எனக்கு எழுந்தது. ஆனால் வந்த அயர்விலே படுத்தபடியே அதன் வனப்பை என் கற்பனைகொண்டு சித்திரித்துப் பார்த்தேன். அதன் புகலரும் ஓட்ட இன்ப அரவம் என் அகச் செவியில் ஒலித்தது. அதன் பரந்த கம்பீரமான தோற்றம் என் அகக்கண்முன் உலாவிற்று.

சிந்தனை அலைகள்மீது மிதந்து சென்றேன்: நிலவொளி காலைக் கதிரவனொளியில் கரைந்துவிட்டது. என் செவிகளில் நாயனத்தின் ஒலி இன்பமாய்ப் புகுந்தது. படுக்கை விட்டெழுந்தேன். கலியாணக் கோலங்கள் என்முன் விரிந்தன. அநேக மணைகள் போடப்பட்டிருந்தன. ஒவ்வொரு மணைமீது ஒரு ஸ்திரீ உட்கார்ந்திருந்தாள்.



பெரீஸ் பிஸ்கட்ஸ்
ஆரோக்கிய உணவு
PERRY & CO., USILAMPATTI.

பெரீ அண்டு கம்பெனி
உசிலம்பட்டி.

அவள் பக்கத்தில் அவள் கணவன் அமர்ந்திருந்தான். வரிசை வரிசையாகப் பெண்களும் புமான்களும் உட்கார்ந்திருந்தனர். அநேக கலியாணங்கள் நடந்தன. தம்பதிகளைப் புரோகிதர் ஆசீர்வதித்தார். கழுத்தில் பூ மாலைகள் ஆடத் தம்பதிகள் நின்றனர்.

இப்படிக் கலியாணக் கோலங்களோடு எதற்காக நிற்கின்றனர் என்று ஒருவரை அங்கே கேட்டேன்.

யமுனைக்கும் கங்கைக்கும் கலியாணம் நடக்கிற காட்சியைக் காணத் தம்பதிகளாகத்தான் போகவேண்டுமென்றார்.

ஒவ்வொரு கலியாணம் நடத்திவைத்ததற்குப் புரோகிதருக்கு நல்ல லாபம் கிடைத்திருக்குமே என்றேன்.

"புரோகிதற்கு எங்கே லாபம், இப்புரோகிதரும் பண்டாக்கள் ஆட்டிவைக்கிற பம்பரம்" என்றார்.

புரோகிதற்கு ஏதோ மாதச் சம்பளத்தைக் கொடுத்துவிட்டு எல்லா இலாபத்தையும் இவர்களே அடைகின்றனர். பண்டாக்கள் கங்கை புத்திரர்களாம். புரோகிதருக்குப் பணம் போய்ச்சேரவேண்டுமானால் ரகசியமாய்த்தான் தரவேண்டும் என்று என் காதில் முணுமுணுத்தார் மற்றொருவர்.

புரோகிதர் வீட்டிலிருந்து யமுனைக்கரை சுமார் ஒரு மைல் இருக்கும். வண்டிகளில் பூமாலைகளோடு தம்பதிகள் ஏறினார்கள். நானும் ஒரு வண்டியில் அமர்ந்தேன். யமுனை நதிக்கரைக்கு விரைவில் வண்டிகள் போய்ச் சேர்ந்தன. வானத்தின் நீலமே பூமியில் படிந்ததுபோலக் காட்சியளித்த அந்த நீல நீர் என் உள்ளத்தைக் கவர்ந்தது: இல்லஹபாத்தின் கோட்டைக்குப் பக்கத்திலுள்ள யமுனைக்கரையோரமாய் உள்ள கொம்புகளில்தான் தோணிகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு தோணியிலும் பல தம்பதிகள் உட்கார்ந்தனர். தண்ணீரைக் கிழித்துக்கொண்டு அன்னங்கள்போல அவைகள் சென்றன. இத்தோணிகளுக்கு முன் மற்றொரு தோணி போயிற்று. அத்தோணியில் நல்லிசை மிருதங்க ஒலிக்கேற்ப நாயனம் வாசித்துக்கொண்டிருந்தான். யமுனை நதியின்மீது ஓர் ஊர்வலம் போகின்றதோ என்று சொல்லும்படி அக்காட்சி இருந்தது. துடுப்போசை அந்நாயனத்திற்குத் தாளம் போட்டதுபோலிருந்தது. திடீரென்று மங்கல ஒலி அதிகரித்தது. திரும்பிப்பார்த்தேன். ஒவ்வொரு கணவனும் தன் மனைவியின் தலைமயிரை வாரிப் பின்ன ஆரம்பித்தான். ஒவ்வொரு கணவன் முகத்திலும் ஒரு தனித்த உவகை தாண்டவமாடியது. கணவன் தன் மயிரைத்தொட்டு வாரும்படி ஒரு பாக்கியம் கிடைத்ததே என்ற நினைப்பிலே அவளுக்கு நாணஞ்சேர்ந்த ஒரு பெருமிதம் எழுந்தது. ஒரு தொண்டு கிழவியின் பனிவெளிர் தலைமயிரை ஒரு தொண்டு கிழவன் பின்னுகிறபொழுது பக்கத்திலுள்ளவர்கள் சிரித்தனர். அக் கிழவன் உள்ளத்தில் எத்தனை பண்டை உணர்ச்சிகள் ஓடினவோ—யாருக்குத் தெரியும். வெகு ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த கலியாணக் கோலம் அவர்கள் மனக் கண்ணிற்குமுன் மின்னலடித்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

ஒவ்வொரு கணவனும் தன் மனைவியின் தலைமயிரின் நுனியைக் கத்திரித்துக் கையில் வைத்துக்கொண்டான். அதைத் திரிவேணியில் எறிந்தால் புண்ணியமாம். மேளதாளத்திலும் கலியாணக் கோலங்களிலும் ஈடுபட்ட அவர்கள் யமுனை ஓடுகின்ற அழகைப் பார்த்துக் களிக்கவில்லை.

தோணிகள் மெல்லப் போய்க்கொண்டிருந்தன. யமுனையின் நீலத்திலே என் கண்கள் பதிந்து கிடந்தன.

சட்டெனத் "திரிவேணி இதுதான் என்றார்" ஒருவர். நீல மேகத்தில் மின்னல் பாய்வதுபோலக் கங்கை யமுனையில் கலப்பதைக் கண்டேன். வேதகாலத்தில் முழங்கிய சரஸ்வதியைக் காணோம். எந்தப் பாலைவனத்தின் மணற் குவியலுக்கடியிலே அது கரந்து ஓடுகிறதோ—யார் அறிவார்! இவ்விரு நதிகளுக்கடியே அது கலக்கின்றதாம்.

யமுனையும் கங்கையும் சேர்கின்ற இடத்தில் இடுப்பளவு மட்டத்திற்குமேல் ஒரு சிறிய பாலம் அமைத்திருக்கின்றனர். அந்தப் பாலத்தின் ஓரமாய்த் தோணிகளைக் கட்டிவிடுகின்றனர். அப்பாலம் ஒரு படித்துறைபோலக் காட்சி அளிக்கின்றது, பாலத்திலிருந்து கீழே இறங்கினால் இடுப்புமட்டாழுந்தான். அங்கே நீராடும்பொழுது மயிர் நுனிகளைக் கணவர்கள் எறிந்தனர். கங்கைக்குப் பாலபிஷேகம் செய்தால் புண்ணியமாம். அதற்காகப் பால் விற்கின்றனர் அங்கே. அத்தேவிக்குப் பூவைச் சூடவேண்டும்; அதற்காகப் பூ விற்கின்றனர். பூ விற்கிறவர்களும் பால் விற்கிறவர்களும் வருஷத்திற்கு இத்தனை என்று பண்டாக்களுக்குப் பணம் கட்டவேண்டும், பாலத்தைச்சுற்றிச் சந்நியாசிகள்—காஷாயம் தரித்த சந்நியாசிகள்—எல்லாவற்றையும் துறந்த சந்நியாசிகள்—பணத்திற்காகப்

பறக்கின்றனர்கள். அம்பட்டன்மார்களுக்கு வேலைக்குக் குறைவில்லை. அவர்களும் பண்டாக்களுக்கு வருஷவர்த்தனை செலுத்துகின்றனர். எங்கே போனாலும் பிச்சையெடுக்கும் கோலந்தான். தோணியில் சேமக் கலத்தைத் தட்டிக்கொண்டே சில சந்நியாசிகள் யாசிக்கின்றனர். இல்லஹபத்து கோட்டையின் சுரங்கத்தில் புகுந்தால் போதும். பிச்சைக்காரர்கள் பிய்த்து அரித்துத் தின்றுவிடுவார்கள். பிச்சை எடுப்பது தாழ்மை என்று அவர்கள் ஓர்ந்தார்களில்லை. புனிதமான இடங்களை எல்லாம் பாழ்படுத்துகிற அறிவில்லாத ஜனங்களைப்பற்றி என்னென்று சொல்லுவது. ஒவ்வொரு க்ஷேத்திரமும் புண்ணியங்களை வாங்கும் ஒரு வியாபாரத் தலமாகிவிட்டது. கோயிலை ஒரு தொழிற்சாலையாக ஆக்கினவர்களை ஏசுநாதர் அடித்துத் துரத்தினது போல இவைகளை அடித்துத் துரத்திவிட்டால் நலமாயிருக்கும் என்று தோன்றிற்று.

இந்த இடத்தில்தான் பரத்வாஜர் இருந்தார் என்று சொல்லிக்கொண்டே பணத்தை யாசிப்பார்கள். கங்கைக்கரை முழுவதும் பண்டாக்கள் மயந்தான். கங்கைக்கரையில் மட்டுமா? யமுனை, சரயு, முதலிய புண்ணியத் துறைகளைத் தங்கள் தொழிற்சாலைகளாக ஆக்கிவிட்டனர்.

அத்தொழிற்சாலைகளின் முத்திரை பெற்றால்தான் மோக்ஷமாம். கங்கையில் பாலைக் கொட்டுதல், கங்கையில் பூவை எறிதல் வேதத்தின் உட்பொருள் அறியாத புரோகிதர்கள் சொல்லுகிறதற்கேற்ப ஏதோ மந்திரங்களை முணுமுணுத்தல், 'கிருஷ்ணார்ப்பணம்' என்று பண்டாக்கள் பணத்தைப் பறித்தல்—இத்தகைய நாடகக் காட்சிகள் தான் நடக்கின்றன.

யமுனையும் கங்கையும் சேர்ந்தோடுகிற தெய்வக் காட்சியின் வனப்பை மாந்திக் களிக்கும் மனிதர்களைக் காணோம். தெய்வ ஒளிகாணவேண்டிய இடங்களில் ஆடம்பரமான சடங்குகளின் சச்சரவுகளும் சந்தடிகளுந்தாம் நிகழ்கின்றன.

கலியாணக் கோலங்களோடு வந்தவர்கள் புரோகிதரோடு திரும்பிவிட்டனர். நான் தனியாய் ஒரு தோணியில் யமுனையாற்றின் மீது உலாவினேன். கண்ணுக்கெட்டின வரையில் ஒரே நீலந்தான். யமுனையில் அன்றாடிய கண்ணனின் நீல மேகத்தின் நிறந்தான் அதில் கரைந்ததோ—யார்தோ அறிந்திலேன். அந்நீலத்தை அப்படியே பருகிவிடலாமா என்று தோன்றிற்று. சூரியனுடைய கதிர்கள் யமுனை நீரின்மீது துள்ளி விளையாடிக்கொண்டிருந்தன. காற்று இன்பமாய் வீசிற்று. காற்றோடு குறுந்திவலைகள் மிதந்து வந்து என்மீது விழுந்தன. அச்சமயம் அமிர்தந்தான் சொட்டுச் சொட்டாய் விழுந்ததோ என்றெண்ணினேன்.

தோணி ஒரு கரையோரமாய் ஒதுங்கிற்று. கரைக்குப் பக்கத்தில் ஓர் ஆசிரமம் தோன்றிற்று. அதைப் பார்க்கவேண்டுமென்ற ஆவல் உண்டாயிற்று. தோணிக்காரனை அனுப்பிவிட்டு அங்கே சென்றேன்.

ஆசிரம வாயிலில் அமைக்கப்பட்ட ஆசனமொன்றில் ஒருவர் உட்கார்ந்து ஒரு புத்தகத்தைப் படித்துக்கொண்டிருந்தார். என்னைப் பார்த்தவுடன் முகமலர்ந்து "நீங்கள் யார்?" என்று அவர் கேட்டார். "நான் ஒரு யாத்திரிகன்"; என்றேன்.

"யமுனையின் அழகை மறந்து அதன் கரையை ஒரு தொழிற்சாலையாக ஆக்கிவிட்டீர்களே".

"அதனால்தான் அத் தொழிலைவிட்டு இங்கே நான் தனியாய் வசிக்கிறேன்".

"எந்தத் தொழிலை விட்டு"

"புரோகிதர் தொழிலை விட்டு"

"புரோகிதருக்கும் வேட்ஸ்வொர்த்துக்கும் என்ன சம்பந்தம். தாங்கள் கையில் வைத்திருக்கும் புத்தகம் வேட்ஸ்வொர்த்துத் தானே?"

"ஆமாம் என் கதையைச் சொல்லுகின்றேன் கேளுங்கள். என் தகப்பனர் ஒரு புரோகிதர். நான் வேதம்படித்திருக்கிறேன். எனக்கு என் தகப்பனர் புரோகிதத் தொழிலையும் கற்பித்தார். அவருக்கு ஒழிவுகாலம் இல்லாதபொழுது என்னை அனுப்புவார். அதனால் என் படிப்பைச் சரிவரக் கவனிக்க முடியவில்லை. மெதுவாகப் பீ.ஏ. பட்டம் வாங்கினேன்",

"பீ.ஏ. பட்டம் வாங்கியும் ஏன் புரோகிதத் தொழில் நடத்தினீர்கள்".

"சரியான வேலை கிடைக்கவில்லை. புல்லுக்கட்டுத்தான் கடைசியில் எனக்கு உதவிற்று. கங்கைக் கரையில் உட்கார்ந்தே என் காலத்தைக் கழிக்கலாம் என்று நினைத்தேன். அதற்குத் தகுந்த வேஷங்களையெல்லாம் போட்டுக்கொண்டேன். கழுத்தில் ருத்திராக்ஷம். நெற்றியிலும், மார்பிலும் கட்டுக்கட்டாய்விபூதி. ஒரு சிவப்பழமாய் விளங்கினேன். காசி விசுவநாதர் கோவிலில் கீதை பாராயணம் செய்ய உட்கார்ந்தேன். கையில்

புத்தகந்தான். ஆனல் பார்வையெல்லாம் எங்கேயோ. திரிகின்ற மனதைப்பற்றிச் சொல்லவேண்டியதில்லை.

"தரிசனம் செய்கிறவர்கள் எனக்குக் காசு போடுவார்கள். அவர்களுக்கு நான் விபூதிப் பிரசாதம் வழங்குவேன். ஆனல் பக்கத்தில் பாராயணம் செய்கிறவர்களுக்கு எத்தனை பணம் வந்திருக்கிறது என்று என் பார்வை அவர் மீதே விரித்திருக்கிற துணிமீது விழும். அவர்களுடைய கண்களும் என் துணிமீது பாயும் என்ற விஷயத்தை நான் சொல்லவேண்டியதில்லை.

"இன்னொரு அக்கிரமம் செய்தேன். என்னுடைய சுய நலத்திலிருந்து அது எழுந்ததன்று. ஆனல் அந்தச் செயலை நினைக்கும் பொழுது என் உள்ளம் பதைபதைக்கின்றது"

"என்ன அப்படிச் செய்துவிட்டீர்கள்?"

"புருஷன் இறந்த துயர் தாங்காமல் ஓர் இளம்பெண் எல்லாவற்றையும் துறந்துவிட்டுக் கங்கையில் விழுந்துவிடுவதாக வந்தாள். ஆனல் உயிரைவிடத் தைரியமில்லை. நாள் தேயத் தேய அவளுடைய துயரும் தேய்ந்துவிட்டது. வாழ்வு நடத்த வேண்டுமே. அதிகமான சிரமத்தை அடைந்தாள். எனக்குக் கிடைத்த பணத்தையும் அவளுக்குத் தந்தேன். கட்டிக்கொள்ளப் புடவையில்லை. ஒரு விரதத்திற்குத் தம்பதிகள் வேண்டியிருந்தார்கள். அத்தம்பதி பூஜையில் புடவை கிடைக்கும். ஒரு நிமிஷ நேரத்திற்கு அவள் எனக்கு மனைவியாயிருந்தாள். வேறு எண்ணமில்லை. அவளுக்குப் புடவையைத் தரவேண்டுமென்பதே. எனக்கு அவள் இணங்கியது அவள் வறுமையால்தான். நான் செய்தது கருணையால்தான். செய்தது பிழை பிழைதான். அதை நான் மறக்கவில்லை. அதை ஒளிக்கவில்லை. அந்தப் பெண் இப்பொழுது எந்நிலையில் இருக்கின்றாளோ? தெரியவில்லை. இராமேசுவரத்திலும் இப்படித்தான் நடந்தது.

"சுலபமாய் நரகத்திற்குப் போவதற்கு வழி எது தெரியுமா?" என்று ஒருவர் மற்

நான்கோ பிரிண்ட் இங்கு

இந்தியா, சென்னை, பீஹார், மைசூர், திருவாங்கூர் சர்க்கார்களாலும், சென்னையிலும், வெளியூர்களிலும் உள்ள பிரிண்டர்களாலும் மிகவும் உபயோகிக்கப்படுகிறது.

அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:

S. நாராயணன் & கம்பெனி,

1. கிண்டி ரோடு, அடையாறு, சென்னை.

ஒருவரைக் கேட்டார். அதற்குப் பதிலை அவரே அளித்தார். "புரோகிதத் தொழிலைத் தொட்டமாத்திரத்திலேயே நரக நீள்வாசல் துறந்துவிடும்" என்றார். கயையில் நடந்ததைச் சொல்லலாமா?"

"சொல்லுங்கள் கேட்கிறேன்"

"கயையில் நடக்கிற அக்கிரமங்கள் கோரமான அக்கிரமங்கள் தாம். ஜனங்களுடைய திடமான நம்பிக்கையைத் தக்க கருவியாக வைத்துக்கொண்டு வேண்டிய பணத்தைச் சம்பாதிக்கின்றனர். சிராத்த முடிவில் உடனே திருப்தி சொல்ல மாட்டார்கள். கொஞ்சம் செயலிருக்கிறது சிராத்தம் நடத்துகிறவர்களுக்கு என்று தெரிந்தால்போதும். அவர்களிடமிருந்து தக்க தொகையைப் பறிக்கிற வரையில் வாளாவிருப்பார்கள். இப்படிக் கிடைக்கிற பணம் அறநெறியில் செலவிடப் படுகிறதா? இல்லை. சிற்றின்பத்தில் கழிக்கின்றனர். அநேக பணக்காரக் குடும்பங்கள் அழிந்து போய்விட்டன. அவர்களிடத்தில் நான் புரோகிதத் தொழில் பார்த்தேன். எனக்கு மாதச் சம்பளம் தந்தனர். அவ்வாழ்வை நினைக்கும் பொழுதே எனக்கு நாணமாயிருக்கிறது. எல்லாப் புரோகிதர்களையும் நான் நிந்திக்கவில்லை. சுயநலங் கருதாத மஹான்கள் அவர்களிடத்திலும் உண்டு. அவர்களைக் கை கூப்பித் தொழுகின்றேன்,

ஆனால் பொய் சொல்லாமல் எனக்கு வாழ்வு நடத்த முடியவில்லை.

பணக்காரர்கள் வந்தால் அவர்களைப் புகழவேண்டும். இந்நிலை என் மனத்தை உறுத்திக்கொண்டே இருந்தது. மனத்திலோர் அமைதியில்லை. நடத்தையில் ஒரு தூய்மையில்லை. பொய் வஞ்சனை களவு இவைகள் பொதிந்த வாழ்வை மாற்றவேண்டும் என்ற நினைவு வந்தது. நம்மாழ்வார் பாடிய பாசுரம் என் மனத்திற்கு வந்தது.

"வம்மின் புலவீர் நும்மெய் வருந்திக்
கைசெய்து உய்ம்மினோ"
"வாய்கொண்டு மானிடம் பாடவந்த கவி
யேனல்லேன்
ஆய் கொண்ட சீர்வள்ளல் ஆழிப் பிரான்
எனக் கேஉளன்
சாய்கொண்ட இம்மையும் சாதித்து
வானவர் நாட்டையும்
நீ கண்டு கொள்ளென்று வீடும்
தரும் நின்று நின்றே"

என்று சொல்லிக்கொண்டு இசையோடு பாடினார். அக் கானச் சிறகுகள்கொண்டு நானும் விண்ணவர் நாட்டிற்குப் பறந்து சென்றேன்.

மீண்டும் அவர் சொன்னார்.

"நான் ஒரு தோட்டத்தை வகுத்துக் கொண்டேன். எனக்குப்போதுமான உணவு அதிலிருந்துகிடைக்கின்றது. வேட்ஸ்வொர்த் எனக்கு அமைதியைத் தருகிறார். என் கண்ணைத் திறந்தவரும் அவரே. அவர் தந்த கண்ணைக்கொண்டு முன்னே நோக்கினால் அவர் தந்த செவிகொண்டு ஒன்றைக் கேட்டால் எல்லாம் தெய்வ ஒளியோடு விளங்கும்."

"நீங்கள் சொல்லுவது உண்மைதான். கவிகள் உள்ளத்தோடு நோக்கினால்தான் உலகத்தில்அழகுதோன்றும். ரிஷிகேசுக்குச் சென்றவர் அங்கே என்ன இருக்கிறது. கல்லையும் தண்ணீரையும் தவிர" என்றார்.

இயற்கையின் செல்வத்திற்கிடையே அவருக்கு அக வறுமை வந்துவிட்டது. எதற்கும் ஒரு பாக்கியம் வேண்டாமா? மலை, காடு, ஆறு இவைகளின் வனப்பை அள்ளிப்பருக அவர் பாக்கியம் புரியவில்லை. இயற்கைச் செல்வத்தை உள்ளபடி அனுபவிக்க ஒரு பாக்கியம் வேண்டுமல்லவா என்றேன்.

"ஆமாம் என்றார்".

இதற்குள் இருண்டுவிட்டது. அன்றிரவை அங்கேயே கழித்துவிட நினைத்தேன். நிலவு ஒளியில் யமுனை தன் இச்சைப்படி ஓடிக்கொண்டிருந்தது. அவருடைய தோணிக்காரன் வந்தான். தோணியில் நாங்களிருவரும் உட்கார்ந்தோம். தோணி நகர்ந்தது. கீதகோவிந்தத்தின் மங்கல சுலோகத்தைப் பாடினார். அவர் பாடியபொழுது யமுனை நதியில் விளையாடின கண்ணன் உருவம் என் முன் எழுந்தது.

யமுனை நதிப் பரப்பின்மீது ஒரு சந்தடியில்லை. காலையில் நடந்த சடங்கொலிகள் எங்கேயோ மாயமாய் ஒரு கனவு உலகத்தில் இறந்துவிட்டன. ஓர் அமைதி அடைகாத்துவிட்டது. அவ்வமைதிக் கீழ் யமுனை ஆற்றின் மீது கால அலைகள்மீது செல்லுமாபோல நாங்கள் திரிந்தோம்.

இரவும் வளர்ந்தது; நிலவும் காய்ந்துகொண்டிருந்தது.



ஸோப்பு கண்டுபிடிப்பதற்கு முன்பு ஜனங்கள் தேய்த்துக் குளிக்க இயற்கை பொருள்களையே உபயோகித்துவர நேர்ந்தது. அவற்றிலொன்று சீனிக்காய்ப் பொடி. சீனிக்காய் மரத்தின் பழுத்த காய்களைப் பறித்து வெயிலில் உலர்த்திப் பொடியாக்கி, அந்தப் பொடியை ஜலத்திற் குழைத்து தேய்த்து வந்தனர். இன்றும் சிலர் சீனிக்காய்ப் பொடி உபயோகித்து வருவதுண்டு. ஆனால் ஹமாம் ஸோப்பு வந்ததோடு இதுபோன்ற பழய வழிகள் மறைந்து வருகின்றன. ஏனெனில், பழயகால பொருள்களின் சிறந்த அம்சங்களனைத்தும் கூடுதல் சௌகரியமும், சுகமும் அளிக்கும் விதத்தில், நறுமணங்கமழ்வதும் எளிதில் நுரையளிப்பதுமான ஹமாமில் நன்கு பொருந்தி யமைந்திருக்கின்றன.

ஹமாம்

உங்கள் ஸ்நானத்திற்குகந்த பெரிய ஸோப்பு

A TATA PRODUCT

டாம்கோ விற்பனை இலாகா:

19 A. வாணியர் தெரு, P. B. NO. 31 மதராஸ்.

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட், டாடாபுரம் & பம்பாய்

தொடர் கதை

சித்ரா

கே. சுந்தரம்மாள்

6

ஒரு செல்வந்தரின் மகன் ஓர் ஏழைப் பெண்ணை விரும்புகிறான். பெற்றோர்கள் சம்மதிக்கவில்லை. அப்பெண்ணிடம், தங்கள் மகனை அவள் மணக்க முடியாது என்று கண்டபடி ஏசி, திருட்டுக் குற்றம் சாற்றி ஜெயிலுக்கு அனுப்பிவிடுவதாகப் பயமுறுத்துகிறார்கள். தனது காதலனுக்கு நன்மை ஏற்பட வேண்டுமென்பதற்காக, தான் விஷம் குடித்து ஆற்றில் விழுந்து உயிர் விடுவதாகக் கடிதம் அனுப்பிவிட்டு, வடக்கே வெகுதூரம் சென்று ஓர் அனாதை ஆச்ரமத்தில் சேர்ந்து படிக்கிறாள். ஆனால் அவர்கள் நினைத்தபடி நடவாமல், ஒரே பிடிவாதமாக மணம்செய்ய மறுத்துவிடுகிறான் கதாநாயகன். இரண்டு வருஷகாலம் ஒரு மாதிரியாக, இருந்து வந்தான். பிறகு சித்தப் பிரமைபோலிருந்து படுக்கையாகப் படுத்துவிட்டான். எப்பொழுதும் 'மாலா என்னையும் அழைத்துச் செல்லு' என்ற வாக்யம்தான் அவன் வாயில் வந்து கொண்டிருந்தது. அதன்பிறகுதான் பெற்றோர்கள் உண்மைக்காதலின் தன்மையை உணர்ந்து, தங்களது மடமையை உணர்ந்து வருந்தினார்கள். அப்பெண் உயிருடனிருந்தால் தேடிப் பிடிக்கலாம். இறந்தவளை எப்படிக்கொண்டு வருவது என்று வருந்தும் சமயம், எதிர்பாராத விதமாக, ஆச்ரமத்தலைவியுடன் சுற்றுப்பிரயாணமாக அவ்வூர் வந்த மாலா தனது காதலனைப்பற்றிய நிலைமையை விசாரித்தறிந்து முதலில் அவ்விடம் செல்லத் தயங்கினாள். பிறகு காதலனுக்காக எவ்வித அவமானத்தையும் சகித்துக்கொள்ளுவது என்ற உறுதியுடன் அவ்வீட்டினுள் செல்லுகிறாள். எதிர்பாராத நல்வரவு கூறப்படுகிறது. மாலாவின் ஸ்பர்சம் பட்டதுமே, அவன் பிரமை நீங்கி விடுகிறது. பிறகு பெற்றோர்கள் மன்னிப்புடன் அவளை மருமகளாக ஏற்றுக் கொள்ளுகிறார்கள். இதுதான் காதலின் வெற்றி என்ற நாடகத்தின் சாராம்சம்.

பணமுள்ளவர்கள் ஏழைகளை நடத்தும் கொடுமைகளையும் பெண்களின் அடிமைத்தனத்தின் செய்கைகளையும் மிகவும் தெளிவாக நடித்துக்காட்டினார்கள். வாலிபர்கள் நடந்து கொள்ளவேண்டிய தத்துவங்களை வெகு நுட்பமாக நடித்துக்காட்டினான் பிரபாகரன். கதாநாயகியின் துன்பங்களை ஜனங்கள் கண்ணீர் விடும்படி சோகரஸம் ததும்ப நடித்தாள் சித்ரா. அன்று நாடகம் பார்க்க வந்த பிரமுகர்கள் ஒருவராகிலும் பாதியில் எழுந்து செல்லவில்லை. மாணவிகள் நடிக்கும் நாடகமாகத் தோன்றாமல் நாடகக்கலைக்கே பிறந்தவர்கள் போலிருந்தது நாடகம். சித்ராவின் நடனமும், ஹேமநளினியின் நடனமும் அதியற்புதமாக அமைந்தது. நாடகம்முடிவுற்றதும், கலெக்டர் பிரபாகரன், சித்ரா, ஹேமநளினி மூவருக்கும் தங்கத்தில் ஒரு வைரம் பதித்த மெடல்கள் பரிசாக அளித்து நாடகத்தைப் புகழ்ந்து பேசி, மாசிலாமணி நடத்தும் தொண்டைப்பற்றி வானளாவப் புகழ்ந்துவிட்டுக் கடைசியாகப் பிரபாகரனை நோக்கி "உனது குணம் சிறந்து விளங்குகிறது, இந்தச் சமயத்தில் கௌரவம் பார்க்காது நடிக்க வந்ததுபற்றி. அடிக்கடி உனது பிரசங்கத்தைப்பற்றிப் பத்திரிகைகளில் படித்திருக்கிறேன். உனது கொள்கை, சமூக முன்னேற்றத்திற்கும் ஸ்திரீ சுதந்தரத்திற்கும் வழிகாட்டியாகும். சித்ரா, உன்னுடையதான குடும்ப விவரங்கள் ஸ்ரீமதி மாசிலாமணியினால் அறியப் பெற்றேன். இன்று மேடைமீது மாற்றப்பட்டமாலை, உங்கள் வாழ்க்கையைப் பிணைக்கும் சின்னமாக அமைக்கப்பட்டது. என்றும் நீடூழி தம்பதிகளாக வாழ்ந்து சமூக முன்னேற்றத்திற்குப் பாடுபடக் கடவுள் அருள் செய்வாராக" என்றார்.

கரகோஷம் வானைப் பிளந்தது. பிரபாகரனின் தந்தையிடம் ஜமீன்தாரும் கலெக்டரும் பிரபாகரன் கொள்கையைப் பற்றிச் சிலாகித்து, அவனைப்பெற்ற பாக்கியசாலி என்று கொண்டாடினார்கள். அசட்டுச்சிரிப்புடன் மனதை வெளிக்காட்டாமல் ஏதோ பதில் சொன்னார்.

மேடைமீது பிரபாகரன் தோன்றினதுமே தாயாரின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. மாலை மாற்றும் தருணம் பல்லைக்கடித்துக் கோபத்தை அடக்கினாள். சித்ராவின் தாயாரின் மனம், மாலை மாற்றும் சமயம், இன்பம் துன்பம் இரண்டையும் சேர்த்து அனுபவித்தது. இப்பாக்யம்

உண்மையில் பெற்றால் சித்ராவின் பாக்யம் விகஸிக்கும் என்ற நினைப்பு ஆனந்தத்தையும், இச்செய்கைக்காக யஜமானியம்மாள் வீட்டிற்கு வந்து எவ்வித ஆர்ப்பாட்டம் செய்வாளோ என்ற நினைவு துன்பத்தையும் கொடுத்தன.

பிரபாகரனின் பெற்றோர்கள், சீக்ரமாக வரும்படி காரில் உட்கார்ந்து கொண்டு சொல்லி யனுப்பினார்கள். தனக்கு வரச் சற்றே தாமதமாகுமென்றும், அவர்கள் வீட்டிற்குச்சென்றுவிட்டு வண்டியை அனுப்புமாறும் சொல்லி யனுப்பிவிட்டான்.

யாவரிடத்தும் விடைபெற்றுக்கொண்டு, சித்ராவுடன் வண்டியினருகில் வந்ததும், ஒரு ஐந்து ரூபாய் நோட்டை எடுத்து ட்ரைவரிடம் கொடுத்து, "நேரமாகிவிட்டது நீ வீட்டிற்குச்செல். நானே வண்டியை ஓட்டிச் செல்லுகிறேன்" என்றான்.

"நீங்கள் நீடூழி வாழ்க" என்று கும்பிட்டு விட்டுச் சென்றானவன்.

முன் ஸீட்டிலேயே அவன் பக்கத்தில் உட்கார்ந்தாள் சித்ரா. இடது கையினால் அவளை அணைத்த வண்ணம் வலது கையினால் மட்டும் ஸ்டீரிங் வீலைப்பிடித்தவாறே வண்டியை ஸ்டார்ட்செய்தான். ஒரு குலுக்கலுடன் புறப்பட்டது வண்டி. பத்தடி சென்றதும் வண்டி திருப்பும்பொழுது மூலைச் சுவரில் மோதும்படியாக உரசிச் சென்றது. திடுக்கிட்ட சித்ரா,

"இப்படி வண்டி ஓட்டினால், ஒன்று போலீஸ் ஸ்டேஷன் செல்ல வேண்டும். ஒன்று ஆஸ்பத்திரி செல்லவேண்டிவரும். தாங்கள் இப்படி உட்கார்ந்து கொண்டு என்னை ....'நான் வண்டியை ஓட்டுகிறேன்" என்றாள்.

"ரைட்டோ, மெனிதாங்க்ஸ்" என்று இடமாற்றி அமர்ந்துகொண்டான். பிறகு "சித்ரா!" அவள் காதருகில் வாயை வைத்துக் கூப்பிட்டான்.

"என்ன?" என்றாள்.

"சபையறிய நமது பிணைப்பை ஊர்ஜிதப் படுத்தி விட்டார் ஐ. ஸி. எஸ். இனிமேல் கவலையில்லையல்லவா. அம்மா அப்பா இருவருமே இன்று என் நோக்கத்தைப் புரிந்து கொண்டிருப்பார்கள். வருகிற வைகாசியில் கல்யாணத்தை முடித்துக்கொண்டு உன்னையும் மெடிகல் காலேஜில் சேர்த்து விட்டு, சிறிய வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொண்டு, சுற்று வேலைக்குமட்டும் ஆளை வைத்துக்கொண்டு இருவரும் சமையல் முதலியவைகளைச் செய்து சாப்பிட்டு விட்டுச் சேர்ந்து காலேஜுக்குப் போகலாம். சாயங்காலம் பீச் முதலிய இடங்களுக்குச் செல்லலாம். அப்பொழுது உலகம் இன்பமயமாகத்தோன்றும். என் சித்ராவை அரை நிமிஷம்கூடப் பிரியமாட்டேன்" என்றான் உணர்ச்சி மிகுந்த இன்ப லாகிரியால்.

"ஆஹா! என்ன மனோராஜ்யம்? இன்று மேடைமீது நாமிருவரும் தோளின்மீது கைபோட்டு நிற்கும் பொழுது உங்கள் அம்மாவின் முகத்தில் பிடி கடுகை வீசினால் வெடித்துச் சாம்பலாகி யிருக்கும். கடைசி வரை என்னைப் பார்த்த பார்வை ஏழு ஜன்மம் மறக்க முடியாது. அளவற்ற குதூகலமடைந்த தங்கள் மனம் வீட்டிற்குச் சென்றதும் எந்தவிதமான இடியை ஏற்கப் போகிறதோ? வீட்டில் என்ன அமர்க்களம் காத்துக் கொண்டிருக்கிறதோ? கொஞ்சம் மனதைக் கட்டிப்பிடியுங்கள்." என்றாள்.

"சரி வீடு என்பதற்கே போகவேண்டாம், இப்படியே வண்டியுடன் சென்று கொண்டேயிருப்போம். மனிதனுக்கு வேண்டுவது இன்பம், அன்பு. இரண்டும் உருவானவள் நீ. வேறு என்ன வேண்டும்?"

"எதற்கும் ஒரு முடிவு ஏற்பட்டே யாக வேண்டும். வண்டி வாழ்நாள் முழுவதும் ஓடமுடியாது. காலத்தை எதிர்நோக்கி மனதைக் கட்டுப்படுத்துங்கள். என் வீடு சமீபித்துவிட்டது. விடைகொடுக்கத் தயாராயிருங்கள்" என்று சொல்லி முடிக்குமுன் வண்டி சித்ரா வீட்டு வாசலில் வந்து நின்றது.

அவனிடம் கெஞ்சி மன்றாடித் தன்னை விடுவித்துக்கொண்டு கீழே இறங்கி நின்று கொண்டாள்.

அவள் கையைக் குலுக்கி விட்டு, "நாளை லீவு தானே, வீட்டிலேயே இரு. சரியாக, மத்தியானம் பன்னிரண்டு மணிக்கு வருகிறேன். சரிதானே" என்றான்.

"உத்தரவு நமஸ்காரம்" என்று கைகுவித்தாள். அவளைப் பார்த்துக்கொண்டே செல்ல மனமில்லாமல், காரை ஸ்டார்ட் செய்தான். பத்தடிசென்றபின்கூட எட்டிப் பார்த்தான். கைக் குட்டையை வீசினான். கார்மறையுமட்டும் பார்த்துக்கொண்டிருந்து விட்டு, "தேவி! வீட்டில் அவருக்கு நிம்மதி ஏற்படவேண்டுமே!" என்று நினைத்த வண்ணம் உள்ளே சென்றாள்.

"வண்டியை ஷெட்டில் விட்டுவிட்டு உள்ளே வந்த பிரபாகரனை நோக்கி,

"ட்ரைவர் எங்கே?" என்று கடுமையாகக் கேட்டார் தந்தை.

"நாழிகையாய் விட்டதால் அப்படியே அவனை வீட்டிற்குச் செல்லும்படி நான் தான் சொன்னேன். அவன் கேட்கவில்லை. ஏன்?" என்றான்.

"சித்ரா உன்னுடன் தானே வந்தாள்?" என்று கர்ஜித்தாள் தாய்.

"அவளை அவள் வீட்டில் விட்டுவிட்டு வந்தேன்."

"ரொம்ப அழகு தான். அதற்காகத் தானே, எங்களுடன் வரவில்லை என்று சொல்லியனுப்பினாய். ஒரு வயது வந்த பெண்ணை இருட்டில் தனியாக அழைத்து வருவது நல்ல செய்கையா?"

"இதிலென்ன தப்பு? உண்மையில் முக்யமான மனிதர்களுடன் பேசிக்கொண்டிருந்தேன் நீங்கள் கூப்பிட்டனுப்பின சமயம், மாசிலாமணி தன்பொருட்டுச் சித்ராவை அழைத்துச் செல்லும்படி சொன்னாள். நடித்த பெண்கள் எல்லோரையும் அவர்கள் பெற்றோர் காத்திருந்து அழைத்துச் சென்றார்கள். சௌதா இருந்தால் சித்ராவை அழைத்து வருவாள். அதற்குப் பதிலாக நான் அழைத்து வந்தேன். இதில் என்ன தப்பு?"

"சௌதா அழைத்து வருவதும் நீ அழைத்துவருவதும் ஒன்றாகிவிடுமா? நீ செய்வது ஒன்றும் நன்றாகஇல்லை. நமது கௌரவமென்ன? இன்று யாரைக்கேட்டு மேடையேறி நடித்தாய்?"

"இதற்கு யாரைக் கேட்கவேண்டும்? 'பரோபகாரம் இதம் சரீரம்'. இந்தப் பணத்தினால் அநேக ஏழைப்பெண்களுக்கு கல்வி வசதி ஏற்படுகிறது. எதிர்பாராத விதமாக அப்பெண்ணுக்கு ஜ்வரம் வந்துவிட்டது. நான் முன்னே இதே பார்ட் எடுத்துக்கொண்டதினால் இப்பொழுது சாத்ய

நின்றுபோன மாதவிடாய்

குமாரி (TABLETS) மாத்திரையின் உபயோகத்தினால் நின்றுபோனது நீங்கும். வருங்காலத்திலும் கஷ்டங்கள் நேரிடா. கெடுதலின்றி விரைவில் நலம் கிட்டும். இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் ஆயிரக்கணக்கானவர்கள் உபயோகிக்கின்றார்கள்.

சாதாரண கேஸ்களுக்கு	....	ரூ 3
நீண்டநாளைய கேஸ்களுக்கு	....	ரூ 5
மிக ஆபத்தான கேஸ்களுக்கு	...	ரூ 8
கர்ப்பத்தடை (6 மாத உபயோகத்திற்கு)		ரூ 4

(வி. பி. அணா 12 கூட)

தயாரிப்பவர்கள்

Mrs. P. DEVEE F. D. S. (C. M.)

Tollygunge, CALCUTTA.

கீழ்க்கண்டவர்களிடமும் கிடைக்கும் :—

(1) ஹரி & ஸன், 93, சைனாபஜார் ரோடு, மதராஸ்.

(2) வாஸு & ஸன்ஸ், 187, மவுண்ட் ரோடு, மதராஸ்.

(3) ராஜா மெடிகல் ஹால், 31, தர்மராஜா தெரு, பங்களூர் கண்டோன்மெண்ட்.

(4) L. M. முகர்ஜி & சன்ஸ் லிட்., 167, துரம்டோலா தெரு, கல்கத்தா.

(5) Miss. D. D. பாண்டே, ஹரிநிவாஸ், கிங்ஸ்வே, தாதர், பம்பாய்.

(5) J. டிராத்&கோ, மஹாத்மா காந்தி ரோடு, கராச்சி.

மாயிற்று. இதற்கு இவ்வளவு கோபம் ஏன்? கேள்வி ஏன்?''

''பிரபாகரன்! எல்லாம் போகட்டும். மாலை போட்டாயே, அது நன்மையான செய்கையா? நமது கொள்கையில் மாலை எத்தகைய உரிமை பெற்றது என்பதை அறிந்தாயா? என் மானமே போயிடுத்து. நாளை ஊரார் பேசும் வசைச்சொல்? நமது கௌரவம்?''

''என்ன அப்பா! பேசாமல் கேட்டுக்கொண்டிருக்கிறீர்களே? உலகமே நாடக மேடை என்று வேதாந்திகள் பேசுவார்கள். நான் நடித்ததற்கு இவ்வளவு கோபித்துக் கொள்ளுவது நியாயமா? நாளைய பத்திரிகையில் திவான்பஹதூர் பிள்ளை ஏழைகளுக்காகத் தொண்டாற்றினான் என்று வானளாவப்புகழுரை வருமே. உங்களுக்கும் பெருமையில்லையா? ''என்றான்.

''புகழும் பெருமையும் இருக்கட்டும். அவ்வளவு பெண்களுக்கிடையில் நீ நடிக்க ஒப்புக்கொண்டது, அதிலும் நமது வீட்டுச் சமையல்காரி பெண்ணுடன் எனக்குப்பிடிக்கவில்லை. அந்தப் புகழும் பத்திரிகையில் காணலாம். நீங்கள் மாலை மாற்றினதும், ஐ. ஸி. எஸ். வாழ்த்துக்கூறினதும் சஹிக்கவில்லை. அந்த இடத்தில் ஒன்றும் சொல்லக் கூடாது என்று பல்லைக்கடித்துக்கொண்டு சிரித்துப் பேசினேன். ஒரு கன்னிப்பெண் கழுத்தில் மாலைபோடுவது அவளை நமக்கு உரிமை யாக்கிக்கொள்ளும் சக்திபெற்றது என்பது நமது வழக்கம். பிறகு அப்பெண் வேறொருவனுக்கு மாலையிட்டால் அவள் தூய்மையைப் பாதிக்கும். இப்பொழுது சிந்தித்துப்பார். சித்ராவிற்கு நீ செய்தது நன்மையா? தீமையா? என்பது விளங்கும்.''

''அவள் வேறொருவனுக்கு மாலையிடுவதாக இருந்தால்தானே அதைப்பற்றிச் சிந்திக்க வேண்டும் ''என்றான் அமைதியாக.

''என்ன?'' என்று இருவரும் ஏககாலத்தில் கத்தினார்கள்.

''எனக்கு உரியவள் அவள்தான். சும்மா மேடை யேறிப் பேசிவிட்டு, பிறகு சுயநலம் கருதும் இனத்தைச்சேர்ந்தவனல்ல நான். எனது கொள்கையைச் செய்கையில் காட்டியே திருவேன். சௌதாமினி விஷயத்தில் தீவிர முயற்சிஎடுத்து உங்கள் மனதையும் திருப்தி செய்வித்து, என் கொள்கைப் படியும், அவள் விருப்பப்படியும் நடத்தவில்லையா? அதுபோலத்தான் இதுவிஷயமும்''.

''சௌதாவிஷயம் உன் இஷ்டப்படி நடக்கவிட்டது உன்னை உத்தேசித்து அல்ல. ஒரே பெண். அவள் மனப்படி நடக்கவேண்டும். மேலும் அவன் கெட்டிக்காரன் என்றாலும் சம்பளம் மூன்நூறு வாங்கியபிறகேசம்மதித்தோம் என்பது நினைவிருக்கட்டும். அவள் நிலைமையில் அவள் இஷ்டம்நிறைவேறிற்று. சித்ரா மனப்படி நடக்கமுடியுமா?''

''ஏன் அவளும்பெண். இவளும்பெண். நிலைமைவேண்டுமானால் வித்தியாசப்படலாம். பெண்மனம் இருவருக்கும் ஒன்றுதான். இவள் இஷ்டப்படி நடக்கச் சுதந்திரமுண்டு''

''என்ன மேலே மேலே சொல்லிக்கொண்டே போகிறாய்? பாம்பிற்குப் பாலைவார்த்தால், அது விஷத்தைத்தானே கக்கும். அப்பன் செத்து, தாயாரும்பெண்ணும் சந்தியில் நிற்க, ஐயோ பாவமென்று அழைத்து வைத்து மானமாகக் காலங்கழிக்கும்படி செய்து, படிப்பதற்கும் வசதி செய்து கொடுத்தால், என் மடியிலேயே கையை வைத்துவிட்டாளே பாவி. என் மானம் கௌரவமெல்லாம் காற்றில் பறக்கவிட்டு, அந்தப் பன்னாடையையாடா நாட்டுப்பெண்ணாகக் கொள்ளுவேன். பெற்றவர்களுக்குச் செய்யும்கடமையாடா இது?'' என்று கத்தினாள்.

''ஏனம்மா கத்துகிறாய்? அவர்களைத்திட்டுகிறாய்? நீ அவர்களுக்கு உதவி செய்தது மெச்சத்தகுந்ததே. என்னிஷ்டப்படியும் செய்தாயானால் இன்னும் பெருமைதான் ஏற்படும்.''

''பெருமையையும் சிறுமையையும் ரொம் பகண்டுவிட்டாய். அப்பவே என் மனதில் சந்தேஹம் தோன்றினது. நிச்சயமாய்விட்டது. அந்தப்பெண் சுகன்யாவிற்குஎன்ன குறை? உன்மேல் உயிரையேவைத்திருக்கிறாளே?''

''அவளுக்கு ஒருகுறையுமில்லை. என்மனம் அவளை நாடவில்லை. காதலில்லாக்கல்யாணத்தினால் இருவருக்கும் துன்பமே. அவள் மனதிற்குப் பிடித்தவனாக நானே தேடி எடுக்கிறேன்''

''நீ என்ன தேடுகிறது. அவளுக்குப்பெற்றவர்கள் இருக்கிறார்கள். உனக்கும் அவளுக்கும் தான் கல்யாணம் நடக்கும். இது நீங்கள் பிறந்தது முதல் செய்ததீர்மானம். காதலும் கத்திரிக்காயும்? எல்லாம் கதைகளில் தான் காதலும் ஊதலும். நாங்கள் காதல் ஏற்படாமல் கல்யாணம் செய்து கொண்டதில் ஒரு சுகக்குறைவையும் காணவில்லை''

"அந்தக்காலம் வேறு. இந்தக்காலம் வேறு. வீணாக என் மனதைப் புண்ணாக்காதே. சுகன்யாவின் பெற்றோர்களே வரன் தேடிக் கொள்ளட்டும். சித்ராவைத்தான் நான் கல்யாணம் செய்து கொள்ளுவேன். ஏழ்மையை அனுபவித்தவள். உங்களுக்கு அடங்கி நடப்பாள். நானும் சந்தோஷமாய் வாழ முடியும்."

"என் ஜீவன் உள்ள வரையில் இது நடக்காது. உன்னுடன் வாதாடுவானேன்? நாளை அவளைக் கொடுக்கும் கொடையில் சொல்லாமல் ஓடும்படி செய்யமாட்டேன்? பிறகு பார்ப்போம் உன் காதலை."

"ஐயோபாவம்! காமு என்ன செய்வாள்? அவள் இப்படிச்செய்யச் சம்மதிக்கமாட்டாள். இவன் செய்கைக்காக அவளைத் திட்டாதே. நமது சொல்லிற்கு அவள் கட்டுப்படுவாள். வேறுவிதமான ஏற்பாடு செய்து விடலாம்" என்றார் தந்தை.

"நான்முன்னெச்சரிக்கைகொடுக்கிறேன். இதைப்பற்றி இப்படியே விட்டு விட்டால் தான் நன்மை. சித்ரா வேண்டாமென்றால் கல்யாணமில்லாமலேயே உங்கள் கடமைக்குக்கட்டுப்படுகிறேன். என்றாவது உங்கள் மனம் இரங்கினால் சித்ராவை அடைகிறேன். அல்லது உங்கள்மனப்படி நடக்கும்படிஎன் மனம் மாறினும் செய்கிறேன். ஆனால் வேறு ஒருவனுக்கும் சொந்தமாக மாட்டாள். மெடிகல் காலேஜில் சேரட்டும். அதற்கு வசதி நான் செய்துகொடுப்பேன். அல்லாது அவளைவேறுவிதமாக ஹிம்ஸிக்கத் துணிந்தால், நானும் துணிந்து, அவளுடன் கண்காணாவிடம் சென்று விடுவேன். பிறகு மரணம் ஒன்றைத்தவிர வேறு ஒன்றும் எங்களைப் பிரிக்க முடியாது" என்றான்.

"சரி. சரி. விடு இத்துடன். படிப்புமுடியுமட்டும் கல்யாணப்பேச்சு வேண்டாம். பிறகு பார்த்துக்கொள்ளலாம். பிரப்கர்! ஒன்று மட்டும் எச்சரிக்கிறேன். சித்ராவிஷயத்தில் நீ ஜாக்கிரதையாக நடந்து கொள்ளவேண்டும். வீணாக அப்பேதைப் பெண்ணின், பெயரையும் வாழ்வையும் கெடுத்துவிடாதே" என்று சமாதானம் செய்தார் தந்தை.

"அதுவிஷயங்கள் எனக்குச் சொல்ல வேண்டாம். தாங்கள் கவலைப்படவேண்டாம். சத்தியத்திற்கு நிச்சயம் மதிப்பு உண்டு" என்றான்.

"ஆமாம் புத்தியாகப் பிழை. சரி, காலைக் கையை அலம்பிவிட்டுச் சாப்பிடப்போ! அடி இலைபோடு" என்றார்.

7

மறுநாள் மத்யானம் சித்ராவைப் பார்க்கச் சென்ற பொழுது விஷயங்களைக்கூறி, தன்வீட்டின் பக்கமே வரவேண்டாமென்று எச்சரிக்கை செய்துவிட்டு, அவன் லீவுமுடியுமட்டும் தினம் சாயங்காலம் ஆறு மணி முதல் ஏழுமணிவரை சித்ரா வீட்டில் அவள் நடந்து கொள்ளவேண்டிய விஷயங்களை எடுத்துச்சொல்லி, தைரியமூட்டி வந்தான். அவன் ஊருக்குப்புறப்படும் தினம். இரவு பத்துமணிக்கு ரயில், சாயங்காலம் ஆறு மணிக்கு நண்பர்களிடம் விடைபெறுவதாகச் சொல்லிவிட்டுச் சித்ராவினிடம் வந்தான்.

சமையலுக்கு வேண்டிய முக்யசாமான் அவசியமாக வாங்கவேண்டியிருந்ததினால் கடைக்கு வந்த சித்ராவின் தாய் வழியிலுள்ள தனது வீட்டில் நுழைந்து, சித்ரா என்ன செய்கிறாள், ஏதாவது வேண்டுமா? என்று கேட்கலாமென்ற உத்தேசத்துடன் வந்தாள். சித்ராவின் அறைக்கதவு ஒரு விரல் அளவு இடைவெளி விட்டுச் சாத்தப்பட்டிருந்தது. உள்ளே தீபவெளிச்சம் தெரியவே வாசற்படியருகில் வரும்பொழுது பேச்சுச் சப்தம் கேட்டது. படியில் நின்ற வண்ணம் கதவின் சந்து வழியாக உள்ளே பார்வையைச் செலுத்தினாள். மறுகணம் திடுக்கிட்டுப் புல்லரித்தது அவள் தேகம்.

சித்ரா பிரபாகரனின் தோளின்மீது சாய்ந்துகொண்டிருந்தாள். அவளை அணைத்தபடி முகத்தருகில் குனிந்துகொண்டிருந்த பிரபாகரனின் கண்களிலும். நீர் நிரம்பியிருந்தது. சித்ராவின் கண்ணீர் அருவி போல் ஓடி மேலாடையை நனைத்தது.

"சித்ரா! உன்னை இந்த நிலையில் விட்டுப் பிரிய என் மனம் ஒப்பவில்லை, என்ன செய்வது? போகவேண்டியது அவசியமாகிறது. மனிதர்கள் நிறைந்த வீட்டில் உன்னை விட்டுப் போவதுபோல் தோன்றவில்லை. துஷ்டமிருகங்கள் நிறைந்த குகையினுள் விட்டுப் போவதுபோன்ற உணர்ச்சியே மிஞ்சுகிறது. கலங்கா என் நெஞ்சமும் கலங்குகிறது. அவர்கள் என்ன நிர்ப்பந்தம் செய்தாலும் கண்டிப்பாக மறுத்துவிடு. எனக்கு நன்மை செய்வதாக நினைத்து, உன் உயிருக்கு முடிவு தேடிக்கொண்டாயானால், நானும் உன்னைப் பின்பற்றுவது சத்யம்; என்ன?"

"ஐயோ! இது என்ன பேச்சு? நான் செய்யவேண்டியது கடமையன்றோ. தாங்கள்தான் என்னைக் கைவிடாமல் காக்க

வேண்டும். என்னுலானவரை முயன்று பார்க்கிறேன். மிகவும் மிஞ்சிவிடும் என்று தோன்றினல் தைரியமாக நீங்கள் இருக்கு மிடம் புறப்பட்டு வந்துவிடுகிறேன்'' என்று தேம்பியபடி கூறினள்.

''படித்த பெண். பயப்படக்கூடாது. தைரியமாகப் புறப்பட்டு வந்துவிடு. நம்மைப் பிரிக்க யாருக்கு உரிமையுண்டு'' என்று உணர்ச்சி மிகுதியினல் கண்களை மூடியவண்ணம் ஒருவரையொருவர் இறுகத் தழுவிக்கொண்டார்கள்.

இந்த நிலைமையைக் கண்ட சித்ராவின் தாயின் மனமும் கலங்கிற்று. கண்களில் நீர் துளித்தது. இந்தச் சமயம் உள்ளே செல்லுவதா? திரும்பிவிடுவதா? என்ற பிரச்னையில் சற்றுநேரம் சென்றது. பிறகு, 'சே, இப்படியே விட்டுச்செல்வது தும்பை விட்டு வாலைப் பிடிப்பதுபோலாகும். இன்று ஒரு வழி தீர்த்துவிட்டே செல்லவேண்டும்'' என்றமுடிவிற்கு வந்தவளாகப் படார் என்ற சப்தம் உண்டாகும் வண்ணம் கதவைத் திறந்தாள். சப்தம் கேட்டுத் திடுக்கிட்டுக் கண்விழித்தார்கள் இருவரும்.

தாயைக் கண்டதும் சர்ப்பத்தை மிதித்தவள்போல் பதறி விலகி நின்றுள் சித்ரா.

சித்ராவின் கையை எட்டிப் பற்றித் தன் பக்கமாக இழுத்து, தன்மீது அவள் தேகம் படும்படியாக நிறுத்தி, கையை இறுகப் பிடித்துக்கொண்டு, ''வாருங்கள் மாமி, நீங்கள் சொல்லப்போவதும், மனதில் நினைப்பதும் எனக்குத் தெரியும். தைரியமாகக் கேளுங்கள்'' என்ருன்.

கடுமையாகப் பேச வேண்டுமென்று நினைத்தவள், பிரபாகரனது, செய்கையையும், சொல்லையும், கம்பீரத் தோற்றத்தையும் கண்டதும் வார்த்தையே வெளிவர மறுத்துவிட்டது. ''பிரபாகர், இன்றைக்குத்தானு? தினம் வருகிருயா?'' என்ருள்.

''இதே நேரம் தினம் வருவேன். வீணை வாசிக்கச்சொல்லி ஆனந்தமாகக் கேட்பேன். சற்றுநேரம் உல்லாசமாகப் பேசிவிட்டுச் செல்லுவேன்.''

''அப்பா! ஏழையாகிய எங்களைச் சந்தியில் இழுப்பது நியாயமா? அன்றைக்கு உன் தாயார் பேசியபேச்சை மறந்துவிட்டாயா? தினம் என்னைக் கொத்திக்கொண்டிருக்கிருள். சித்ரா அவனைச் சந்திக்கமாட்டாள், பாட்டி இருக்கிருள் என்று சமாதானம்சொன்னேன். பாவிப்பெண்ணிற்குப் புத்தியில்லையே. எவ்வளவு சொன்னுலும் தெரியவில்லையே. நீ இப்படி வந்துபோவது வெளியில் தெரிந்தால், சித்ராவின் வாழ்நாள் பாழாகிவிடுமே. வயதுவந்த பெண்ணல்லவா''

''சித்ரா தலையைக் கவிழ்ந்தவாறு கண்ணீர் வடிய நின்றுகொண்டிருந்தாள். என்ன மாமி பயப்படுகிறீர்கள்? ஏழைகளைச் சந்தியில் இழுப்பது எனது நோக்கமல்ல. அவள் வாழ்நாள் என்னுடன் கழியும். சத்தியமாக நான்தான் அவளைக் கல்யாணம் செய்துகொள்ளப்போகிறேன். கவலையை விடுங்கள்.''

''உனக்குத் தான் என்ன தைரியம்? என்னெதிரிலேயே அவள் கையைப் பிடித்துக் கொண்டு நிற்கிருயே? அவளும் அச்சமில்லாமல் நிற்கிருளே. என் மனம் படும்பாடு ஈசனறிவார்.''

''ஏன் வருத்தப்படுகிறீர்கள். நாங்கள் ஜோடியாக நிற்பதை ஆனந்தமாகப் பார்த்துவிட்டுச் செல்லுங்கள். அதற்காகத் தான் நிற்கிறேள். சித்ரா! அட பைத்தியமே! எதற்கு அழுகிருய்?'' என்று அவள் தலைப்பை எடுத்து அவள் கண்களைத் துடைத்தான்.

''அவன் சொல்லும் செய்கையும் அவளுக்கு ஒருபுறம் சிரிப்பையும் ஒருபுறம் ஆத்திரத்தையும் கிளப்பின. இனி அவனிடம் பேசிப் பயனில்லை என்று நினைத்து, ''ஆஹா ஆனந்தமாகப் பார்த்தாய்விட்டது. ரயிலுக்குப் போகவேண்டாமா? வா போகலாம்'' என்ருள்.

கைக் கெடியாரத்தைப் பார்த்துக் கொண்டே, இன்னும் நேரமிருக்கிறது. நீங்கள் போங்கள், இன்னும் சில விஷயங்கள் பேசவேண்டியிருக்கின்றன. அதனுல் நான் பிறகு வருகிறேன்'' என்ருன்.

அந்தச் சமயம் மறுபேச்சின்றிச் செல்வதைத் தவிர வேறொன்றும் தோன்ருததினுல் சென்றுவிட்டாள்.

''கதவைத் தாளிட்டுவிட்டுத்தானே வந்தேன். யார் திறந்தார்கள்? பாட்டி கோவிலிலிருந்து வரவில்லையே'' என்ருன்.

''கதவை வெளியிலிருந்து திறப்பதற்கு எனக்கும் அம்மாவிற்கும் மட்டும் தெரியும்,'' என்ருள்.

அயோடிசால் IODISAL

(ரத்த சுத்தி மருந்து)

இது தேகத்தில் உஷ்ணம் அதிகமாகி அதனுல் ஏற்படக்கூடிய வெட்டை, கிரந்தி, மொழி, முடக்கு, கண்டசூலேகள், வாதம், வாய்வு, மேக ரோகங்களேயும், தோலேப்பற்றிய துர்நீர் சம்பந்தமான படை, சொறி, சிரங்கு, தேக அரிப்பு முதலியவைகளேயும் குணப்படுத்தி, தேகத்திற்கு ஆரோக்கியத்தையும் கொடுக்கும். ரத்தத்தைச் சுத்திசெய்து மலப்பிரவர்த்தியை ஒழுங்காக்கி இரத்த விருத்தியை உண்டாக்கும்

எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

* * * *

சைபால்

- CIBOL -

முகப் பரு, சேத்துப் புண், சொறி சிரங்கு, வேனல் கட்டி, தீப்பட்டபுண், முதலியவைகளுக்குக் கைகண்ட மருந்து.

பேபி-கிரைப்

BABY - GRIPE

குழந்தைகளுக்கு உண்டாகும் வாயு, வயிற்றுப் பொருமல், வயிற்றுவலி, அஜீரணம், மாந்தம், பல் முளேக்கும்போது ஏற்படும் வயிற்றுப்போக்கு முதலிய சகல வியாதிகளேயும் போக்கி நல்ல ஆரோக்கியத்தைத் தரும் சிறந்த திராவகம்.

தயாரிப்பவர்கள்

தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி, மதுரை

மதராஸ் சிடி, நெல்லூர், சிடட் & விசாகபட்டினம் ஜில்லாக்களுக்கு ஏஜண்டுகள்:

ராஜன் ட்ரக் ஸ்டோர்ஸ், கெமிஸ்ட்ஸ், பி. டி. மதராஸ்.

குண்டூர், கிருஷ்ணு, கோதாவரி ஜில்லா & நைஸாம் சமஸ்தான ஏஜண்டுகள்:

சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ், பெஜவாடா.

மைசூர் சமஸ்தான ஏஜண்டுகள்:

சேஷமஹால் பார்மஸி, பெங்களூர் சிடி.

"சரி அவள் வந்ததும் நல்லதுதான், இனி உன்னைத் தொந்தரவு செய்யமாட்டாள்."

"அப்படியல்ல, இனிமேல்தான் தொந்தரவிற்கு ஆரம்பம். இது வரை, அவள், என்னிடம் தாங்கள் எவ்விதம் நடந்துவருகிறீர்களென்று அடிக்கடி கேட்கும் பொழுது, தங்கள் நிழல்கூட என்மீது படாது என்றும், வீவிற்கு வரும்பொழுது ஒருநாள்தான் சந்திப்பதென்றும் சொல்லி வந்திருக்கிறேன். நேற்றுக்கூடக் கேட்டாள். நாடகத்திற்காக வந்தாரே தவிர பிறகு வரவில்லை என்று சொல்லிவிட்டேன். இன்று அவள் பார்க்கும் சமயம் நாம் இருந்த நிலைமை என் குட்டை உடைத்துவிட்டதல்லவா?"

"என்ன கேட்டாலும் தைரியமாக அப்படித்தான் என்று பதில் சொல்லிவிடு. அதெல்லாம் போகட்டும். சற்று வீணை வாசிக்கிறாயா?"

"மன்னிக்கவேண்டும். இப்பொழுதிருக்கும் மனநிலையில் வீணை வாசிக்க முடியுமென்று தோன்றவில்லையே."

"சரி வேண்டாம். சற்றுநேரம் பேசிக்கொண்டிருப்போம் வா" என்று மேஜையருகிலுள்ள நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான். மேஜையின்மீது கையை ஊன்றியவண்ணம் பக்கத்தில் நின்றாள் சித்ரா.

பர்ஸிலிருந்து, பத்துரூபாய் நோட்டுக்களாகப் பதினைந்து நோட்டுக்களை எடுத்து மேஜைமீது வைத்து "இதுபோதுமா?" என்றான்.

"இது எதற்கு? அம்மாவின் பணம், எனது ஸ்காலர்ஷிப் இரண்டுமே என் செலவிற்கு அதிகம். தவிர சென்ற தடவை தாங்கள் கொடுத்துவிட்டுச்சென்ற நூறும் அப்படியே இருக்கின்றது. இப்பொழுது வேண்டாம்."

"இல்லை. இதை எடுத்து வைத்துக்கொள். எப்பொழுதும் உன்னைவிட்டுப் பிரியும்பொழுது இவ்வளவு வேதனை தோன்றினதில்லை. பின்வரும் கெடுதலைக் குறிப்பதுபோல் உன்னை விட்டுச் செல்ல மனமே இல்லை. பயங்கர எண்ணமெல்லாம் தோன்றுகின்றன. ஆபத்தில் உதவும். நான் சொல்வதைக் கேள்; எடுத்துவை."

"சரி, உத்தரவு."

"சரி, ஜாக்கெட் ஏதாவது வேண்டுமா?"

பதில் பேசாமல் அவனை உற்றுநோக்கிய வண்ணம் நின்றாள். கண்களில் நீர் துளித்தது.

"ஏன் பதிலில்லை? கண்களில் நீர்? சித்ரா! என்மனம் இருக்கும் தாபத்தில் உன் தோற்றம் என்னை வதைக்கின்றது. விஷயத்தைச் சொல்லு" என்று அவள் கையை அழுத்திப்பிடித்தவண்ணம் கேட்டான்.

"ஐயோ! தாங்கள் நினைப்பதுபோல் துன்பக்கண்ணீரல்ல, இன்பக்கண்ணீர். உங்கள் அன்பை நினைக்கும்பொழுது இப்படி அளவிற்குமீறின அன்பிற்கு நான் பாத்திரவதியா? அதனால்தான் இவ்வளவு எதிர்ப்புக்கள். என்று தோன்றுகிறது. தற்சமயம், இரண்டு டஜன் சலவைபண்ணின சாரியும், ஒரு டஜன் ஸில்க் சாரியும், மூன்று டஜன் சலவை பண்ணின ஜாக்கெட், ஒரு டஜனுக்குமேல் ஸில்க் ஜாக்கெட் கைவசமிருக்கின்றன. சௌதா அவள்பாட்டிற்கு அனுப்புகிறாள். தாங்கள் வரும்பொழுதெல்லாம சாரியும் ஜாக்கெட்டும் இல்லாமல் வருவதில்லை. நவராத்திரி, தீபாவளி, கார்த்திகை இவைகளுக்கு உங்கள் அம்மா வேறு, சித்ராவிற்கு இது நன்றாக இருக்கும் என்று வாங்கிக்கொடுக்கிறார். என் நிலைமைக்கும், நான் உடுத்துவதற்கும் வெகுதூரம். ஸ்கூலில் யாவரும் ஆச்சரியப்படுகிறார்கள். தாங்கள் வாங்கி வரும் மாதிரி கண்ணைக் கவருகின்றது. எவ்விடம் வாங்கினாய் என்ற கேள்விக்குச் சௌதா அனுப்புவதாகச் சொல்லிவருகிறேன். தாங்கள் வாங்கும் விஷயம் அம்மாவிற்குமட்டும் தெரியும். இந்தத் தடவை, வாங்கிவந்த பச்சைநிற ஸில்க் சாரியை அன்று நாடகத்தில் உடுத்தியிருந்ததைப் பார்த்து, டீச்சர்கள் யாவரும் அந்தச் சாரி உனக்கு மிகவும் பொருத்தமாக இருந்தது. அன்று உன் அழகு, உங்கள் ஜோடி, எல்லார் மனதிலும் ஒரு கிளர்ச்சியை உண்டு பண்ணினது என்று சொல்லுகிறார்கள். இன்று உடுத்தியிருக்கும் கறுப்புச் சாரியும் ஜாக்கெட்டும் எனக்கு மிக மிகப் பிரியமாக இருக்கின்றன. புஸ்தகம், ஏழை மாணவி நிலைமையிலா என்னிடமிருக்கின்றன. தாங்கள் கொடுத்த பேனாவைக்கண்டு, இன்ஸ்பெக்டர் அம்மாகூட வியந்தார்கள். இப்பொழுதுகூட அரை டஜன் சாரி வாங்கி வந்துவிட்டு இன்னும் சாரி வேண்டுமா என்றால் இதற்குப் பதில் சொல்ல வார்த்தை கிடைக்காததினால் மௌனியானேன்"

"என்ன சாதுர்ய வசனம்? இந்த சாரி வாங்கவேண்டும் என்று சொல்லவில்லை, இப்படி உலவச்செல்லும் பொழுது கண்ணாடி அறையில் பிரித்துப் போட்டிருந்ததைக்கண்டதும், உன் உருவம் காட்சிதந்தது. மனக்கண்ணினால் உடுத்திப் பார்த்துவிட்டேன். மறு நிமிஷம் பணம் அவன் கையில், சாரி என்கையில். எனக்காகவோ உனக்காகவோ நாலைந்து தடவை உடுத்திக்கொண்டு பார்த்தாய்விட்டது. ரவிவர்மா படமெல்லாம் உனக்கு ஈடாகாது. உன்னைப் பார்த்துக்கொண்டேயிருந்தால் பசிதாகமே உண்டாகாது.

"நல்ல காரியம். இப்படிப் பணத்தைச் செலவழித்தால் உங்கள் பெற்றோர் கணக்குக் கேட்கமாட்டார்களா?"

"கௌரவம் ஒன்றையே கவனிப்பவர்களே தவிர கஞ்சபுத்தி கிடையாது. கௌரவமாக இருப்பதற்காகவே, என் செலவிற்கு ஏராளமான பணம் அனுப்புவார்கள். நான் டாம்பீகச் செலவைக் குறுக்கிவிடுவேன்".

"சாரியும் ஜாக்கெட்டுமாக வாங்கிவிடுவீர்கள்"

"இவையெல்லாம் அன்பிற்கீடாகுமா? ஏதோ அடக்கமுடியாத ஆவலினால் வாங்கிவிடுகிறேன்."

"எல்லாம் பணம் ஒன்று இருந்துவிட்டால்தான் நடைபெறும்."

"என்னிடமிருப்பதனால், உன்னிடமில்லாத குறையைப் பூர்த்தி செய்வதுதானே நியாயம்"

"அது விஷயம் உங்கள் ஹ்ருதயப் பண்பு. உங்கள் அம்மாவும், கௌரவம் ஒன்றைத் தவிர மற்ற விஷயங்களில் என்னிடம் அன்பாக இருக்கவில்லையா? ஆதியில் அவர்களின் உதார குணத்தினால்தானே நான் இந்நிலைமைக்கு வரமுடிந்தது. இன்னும் புஷ்பம் வாங்கினால்கூட வேலைக்காரி வசம் எனக்கு அனுப்புவார்கள். விசேஷ தினங்களில் அழைத்து வெகுமதிகள் கொடுப்பார்கள். இவைகளெல்லாம்பற்றிச் சிந்திக்கும் பொழுது, அவர் சொல்லுவதும் நியாயமான விஷயம்தானே. தங்களை அடைய வேண்டும் என்ற ஆவலைத்தியாகம் செய்வது கடமைதான் என்று தோன்றும்"

"சரிதான். அதற்காகத்தானே என் மனம் அஞ்சுகிறது. நீ இல்லையேல் என் வாழ்வும் இல்லை. எனக்குத் துரோகம் செய்வதுதான் உன் காதலின் தன்மையோ?"

"துரோகமா? ஐயோ! என்னை அவ்வளவு கேவலமாகவா நினைக்கிறீர்கள்? நான் அன்றும், இன்றும், என்றும் தங்கள் ஆதினம். வீணாகப் பெரியோர்களிடை விரோதம் வேண்டாமே என்று சொல்ல வந்தேன்?"

"சரி. நேரமாகிறது. என் மனத்திருப்தியுடன் உன்னைவிட்டுச் செல்லமுடியாது. போய்வரட்டுமா? தைரியமாக நடப்பாயா? இருக்கும் நிலைமையைப் பார்த்தால் உன் கல்யாணத்திற்கு ஏற்பாடு நடக்குமென்று தோன்றுகிறது. இந்தச்சமயம் சௌதாமினியிருந்தால் எவ்வளவு நன்மை? அவளுக்குக் கடிதம் எழுதட்டுமா இவ்விடம் வரும்படியாக?"

"ஏன் இவ்வளவு பயம்? அவள் ஸ்நானம் செய்யவில்லையென்று தெரிகிறது. இரண்டு மாதத்தில் வரவேண்டியவளே. இப்பொழுது முதல் தம்பதிகளைப் பிரிக்கவேண்டாம். நீங்கள் கவலையில்லாமல் சென்று வாருங்கள். நான் தைரியமாகக் கல்யாணத்தை மறுத்துவிடுவேன். சித்ரவதை செய்தாலும் சம்மதிக்கமாட்டேன். அதுதான் சொல்லிவிட்டேனே. கடைசியில் சொல்லாமல் புறப்பட்டுவிடுகிறேன், அதனால் வரும் அவச்சொல்லையும் ஏற்றுக்கொள்ளுகிறேன். உங்கள் அன்பிற்கு நான் எது செய்தாலும் கைம்மாறாகாதே"

"அன்பிற்கு அன்பேகைம்மாறாகும்"என்று எழுந்தான். அவளை அணைத்த வண்ணமே வாசற் கதவருகில் வந்தான், "சித்ரா!" என்றான். குரல் கம்மிற்று...

"பிரபு" என்றாள் பதில். (பிரபாகரனின் திரிபுப் பெயர்)

"உன்னைவிட்டு எப்படிச் செல்லுவேன்? ஏதோ ஆபத்து என்று எனக்குள் ஏதோ சொல்லுகிறது".

"எனக்கும் மனமில்லை. என்ன செய்யலாம்?"

"என்கூட வந்துவிடு. அவ்விடம் பரீக்ஷை எழுதலாம்."

"அது முடியாது; ஒருசமயம் அவர்கள் மனம் இரங்குவதாக இருந்தாலும் இச் செய்கை அதைச் சிதறவடித்துவிடும். வேண்டாம்; சென்று வாருங்கள். நான் தினம் நடக்கும் விஷயங்களை எழுதுகிறேன்."

ஒருவரின் உஷ்ணமான கண்ணீர் மற்றவர் கன்னத்தை ஸ்பர்சிக்க அன்பு முத்திரையுடன் தாளை நீக்கினான்.

"குட்நைட் சித்ரா"

"குட்நைட் பிரபு"

"என் உடலே செல்லுகின்றது. என்து ஜீவன் இதோ இங்கேயே" என்று அவள் கையைக் குலுக்கிவிட்டு, கன்றைப் பிரியும் பசுவைப்போல் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே சென்றான். அவன் தலை மறையுமட்டும் பார்த்துவிட்டு, கதவைத் தாளிட்டுக்கொண்டு அறைக்கு வந்தாள். மேஜைமீது அவன் வைத்துச் சென்ற நோட்டுக்களைப் பார்த்ததும் துக்கம் அடக்க முடியாமல் பீரிட்டுவந்தது. சற்றுநேரம் படுக்கையில் சாய்ந்து வாய்விட்டுத் தேம்பினாள். பிறகு எழுந்து நோட்டுக்களைப் பெட்டியில் வைத்துவிட்டுத் திரும்பும் சமயம் பாட்டி கதவைத் தட்டினாள் கண்ணைத் துடைத்துக்கொண்டு கதவைத் திறக்கச் சென்றாள்.

(தொடரும்)

MEHTA'S SPECIALITIES

Well-known for their efficacy and Medicinal values

1 **SUNDARI ELIXIR**
For all kinds of female irregularities in menses and a great uterine tonic.

2 **PHOSPHORUS OIL**
A great pain relieving oil ever prepared in annals of medicine.

3 **MASTANA PILLS**
Unique in the field, combining both Allopathic & Ayurvedic systems, curing general debility, Rheumatic pains, Hay fever & what not.

4 **DRAKHYASAVA WITH GOLD & MAKARDHWAJA**
A great Blood Purifier & digestive & Potential Tonic.

Stocked by all important Chemists & Druggists of South India

K. S. MEHTA & CO.

250, China Bazaar, MADRAS.

யூதர்! யூதர்! யூதர்!

யோகி சுத்தானந்த பாரதியார்

யார் யூதர்! ஏனையா அலறுகிறீர்? ஐயா சாக்ஷாத் ஏசு கிறிஸ்துவே யூதர்! இரத்தவெறியுடன் யூதர்மேல் கத்தி தீட்டினுனே அந்த மகா கோர ராக்ஷஸன் ஹிட்லர். ஒரு நாள் வெகு மிடுக்காக மெயின் காம்ஃபுடன் சர்ச்சுக்கு வந்தான். "நார்டிக் ஜாதிதான் உலகில் உயர்ந்தது; யூதர் கலப்பு அதைக் கெடுத்து மட்டமாக்குகிறது. யூதர் அடியோடொழிய வேண்டும்" என்ரெரு வெடிகுண்டைத் தூக்கிப் போட்டான். மெயின் காம்ஃபைத் தூக்கிக் காட்டினுன்!

"இந்தச் சபையில் உள்ள யூதர் வெளியேறுங்கள்-உடனே!" என்ருன்! உடனே அங்கே சிலுவையிலிருந்து தொப்பென்று குதித்த ஒரு மகானுபாவர் வெளியே ஓடினுர். "ஐயோ ஏசுநாதர் சர்ச்சைவிட்டு ஓடுகிருரே! பிடி பிடி" என்று நார்டிக் கிறிஸ்துவர் கூச்சலிட்டனர். "நானும் யூதன்!, நானும் யூதன்" என்று கூவிக் கொண்டே ஏசுநாதர் அந்தர்தானமாய் விட்டார். ஹிட்லர் திகைத்தான். பிறகு "நானிருக்கிறேன் எனது V 2 இருக்கிறது. பயப்படாதீர்கள்; என்று நார்டிக்ஜாதிக்கு அபயமளித்து" டான்ஸிக்கில் குண்டு போட்டான்.

இந்தக்கதை ஒரு போலண்டு பத்திரிகையில் வந்தது. இன்றுலகில் நடக்கும் முழு—மூடக்கொடுமைகளில் மதத்திமிர் பிடித்த சிலர் யூதரைப் படுகொலை செய்வதே தொழிலாகக் கொண்டுள்ளனர்.

போலந்திலும், பிரான்ஸிலும், ரஷ்யாவிலும் ஹிட்லாசுரன் யூத சமுதாயத்தைச் சித்திரவதை செய்தான்; பெல்சன்—படுகொலைகளை நீங்கள் கேட்டிருப்பீர்கள்; நாஜிப்படை ஒவ்வொரு யூதத் தெருவையும் பெல்சன்—கொலைக்களமாக்கியது. "டே யூதா! கொடு உன் பணமெல்லாம்! செய் கடுவேலை! ஏறு தூக்கு மேடை; போ ஒழிந்து" என்று நாஜி புலிகள் யூதரை வேட்டையாடிச் சுட்டுக் கொன்றன. நாஜிகள் யூதர் ஓடலில் புகுவர்; பண்டங்களைச் சூறையாடித் தின்பர். ஐயோ அநியாயம் என்று யூதர் அலறுவர்! "அநியாயமா? இதுதான் நியாயம்" என்று ஓடல் வாசலிலேயே யூதரைத் தூக்குப்போட்டுத் தீ வைத்து, மண்ணெண்ணெயும் ஊற்றி, யூதர் வெந்து சாவதுகண்டு கொக்கரிப்பர். கூட்டம் கூட்டமாக யூதரைக் கண்களைக் கட்டிப் போ முன்னே என்பர். ஒரு காட்டிற்கு இழுத்துச் சென்று எல்லாரையும் கொன்று குழியில் புதைப்பர். போலந்தில் நாஜிகள் செய்த யூதக்கொலைகள் போலப் பயங்கரம் கருடபுராணத்திலும் இல்லை: தாந்தேயின் நரகத்திலும் இல்லை; ஷேக்ஸ்பியரின் மாக்பெத்திலும் இல்லை.

ஹிட்லரின் வலது கையான ஹிம்லரே இலட்சக்கணக்கில் யூதரை வேட்டையாடிக்கொன்றிருக்கிருன், அந்தப்பாவம் நாஜிகளைப் பழிவாங்கிவிட்டது. யூதர்—கொலை நாஜிகளின் தற்கொலையாய் வந்து முடிந்தது. யூதர்—காலனுன ஹிம்லர் பொடாஸியம் ஸயனேட் உண்டு இறந்தான்.

ஹிட்லர் ஒழிந்தான்; ஆனல் இன்னும் யூதர் படுந்துன்பம் ஒழியவில்லை. இருப்பதா இறப்பதா என்ற நிலையிலுள்ளது யூதசமுதாயம். யூதருக்கு உரியநாடு யூதியா. அங்கே யூதர் இருப்பே பிறர் வெறுப்பாயிருக்கிறது. ஏனிந்தக்கொடுமை? இந்த அநியாயம்? யூதர் சரித்திரத்தை ஆராய்வோம்.

இந்தியா, சீனு, அரபியா—இம்மூன்றும் உலகின் புண்ணிய நிலங்கள். இந்நாடுகளில் கண்ணன், புத்தர், லவோதஸன், கொன்புத்ஸன், மோஸஸ், ஏசு, முகம்மது போன்ற மகான்கள் எழுந்து விளங்கினர்! இவர்களே மனிதசமுதாயத்தின் அத்யாத்மச் சிற்பிகள். நமது நாட்டில் ஊழி வெள்ளம் வந்ததும், மச்சாவதாரப்படகில் மனு தப்பியதும், அவர் உலகத்திற்குத் தர்ம சாஸ்திரம் அளித்ததும் தெரிந்த கதைகளே. அதேமாதிரி யூதர் வரலாருன பைபிள் பழைய ஏற்பாட்டிலும் கதை உண்டு.

சுமார் 5938 ஆண்டுகளுக்கு முன்பு தான் உலகை (ஆறுநாளில்) ஆண்டவன் படைத்ததாக யூத பைபிள் நம்புகிறது. ஆண்டவன் ஆதாமைப் படைத்து (ஆத்மா என்பதே ஆதாம் ஆனதுபோலும்), ஏவாளுடன் ஈடன் வனத்தில் வாழச் செய்தான். அல்லியும், தாமரையும்போல் அவர்கள் அழகாகப் பிறந்த மேனிக்கு வாழ்ந்தனர். அவர்களைக் கெடுக்கச் சைத்தான் புகுந்தான். விகற்பக் கனி யுண்ணச் செய்தான். உடனே மனத்திற் சனியன் புகுந்து இரு விகாரப் பேயாட்டமாடியது. உடனே காமக்குரோதங்கள் மனதைப் பற்றிக்கொண்டன; இருவருக்கும் கெயின், அபெல் என்ற புதல்வர் பிறந்தனர்; அண்ணன் தம்பி அபெலைக் கொலைசெய்தான். அந்தக் கொலைக்காரத்தனத்திலேதான் அவர்கள் சந்ததி வளர்ந்தது. மனித வாழ்வே பஞ்சமாபாதகக் காடானது. பாவம் பயங்கரத் தொத்துநோய்போலப் பரவியது. ஆண்டவன் ஊழிவெள்ளத்தை விட்டான்; பாப ஜன்மங்களை வெள்ளம் அள்ளி விழுங்கியது. அதிலிருந்து நோவா ஒருவனே நோவாது பிழைத்தான். அவன் அராரமலை (Ararat) மலையில் வசித்தான்; அங்கே ஆர்மீனிய நாடெழுந்தது. அவனால் ஆதாம் குலம் மீண்டும் தழைத்தது. யூதர்குலம் பல கிளைகளாகத் தழைத்தது. பொமீஷிய, இஸ்ரவேல், எகிப்து, அபிஸீனியா, நடு ஆசியா முதலிய இடங்களில் யூதர் ஆண்டனர். நெம்ரோது என்பவன் பாபிலோனை எழுப்பினான்; இங்கேதான் முன்னே பேபல் கோபுரம் கட்டி யூதர் விண்ணுலகிற்கு ஏறிச் செல்ல முயன்று வீணானார்கள். முற்காலம் பாபிலோன் தமிழ் நாட்டுடன் வியாபாரம் செய்தது; தமிழர் பலர் அங்கே குடியேறினர். யூதர் சமுதாயம் மறுபடியும் பாவக்காடானது; அவர்களைத் திருத்த கி. மு. 1921-ல் ஆப்ரஹாம் தோன்றினான். இந்த ஆப்ரஹாம் மரபு எத்தனையோ கொடிய இடர்களைத் தப்பிச் செழித்து வந்தது. இம்மரபில் எத்தனையோ படுகொலை அரக்கர் எழுந்து வாளாலும் தீயாலும் நோயாலும் நாட்டைச் சுடுகாடாக்கிப் பிணங்குவித்தனர். அவருள் இரண்டொரு அரக்கிகளும் உண்டு. அவ்வப்போது உத்தமவீரர் எழுந்து மரபைக் காத்தனர். இவருள் ஈசக், யாகோப், லெவி, யோசப், சாமுவேல், தாவீது, சாலமன் முதலியோர் சன்மார்க்கிகள். சாலமன் நல்ல ஞானி; அருட்செல்வன். தாவீது கட்டத்தொடங்கிய எருசலத்தை அவனே ஏழு ஆண்டுகளில் அழகாகக் கட்டிமுடித்தான். சாலமன் காலத்தில் ஏராளமான தமிழ் வணிகர் அங்கே குடியேறி வியாபாரம் செய்தனர்; தமிழர் தேக்குக் கப்பலை அரபி நாடு எதிர்பார்த்து நின்றது.

அவனுக்குப் பிறகு மறுபடியும் நாடு கொலைக்களமானது: பாபத் தீ படர்ந்தது. ஜோரம் என்பவன் தம்பிமார்களை வெட்டிக் கொன்று பட்டங் கட்டிக்கொண்டான். அவனைப் பிலிஸ்தியர் வீட்டோடெரித்துக் கொன்றனர். இப்படுகொலையிலிருந்து தப்பிய ஓஷோஸே அரசைப் பற்றினான்; அவனும் குடும்பத்துடன் படுகொலையானான். பிணக் கும்பலில் அவனது சவலைக் குழந்தை மயங்கிக் கிடந்தது. அதைக் கோயில் குருக்கள் கொண்டு வந்து வளர்த்து ஏழுவயதில் பட்டம் கட்டினார்; இக்குழந்தை பெயர் ஜேவா (Joas); இதைக்கொல்ல ஒரு ராக்ஷஸி முயன்றாள்; அவளும் கொலையுண்டாள். பிறகு வந்த மன்னர் கதையெல்லாம் இரத்தக்களரியும் கொலைக் கூத்துமே.

யாகோப் ஒருவனே உத்தமன்; அவன் மீதும் பொறாமை வாள் பாய்ந்தது; அவன் குழந்தைகள் கொலையுண்டனர்; அவருள் மோஸஸ் என்னும் குழந்தையே ஒரு பெண்ணின் கருணையால் பிழைத்தது. லெவி என்னும் அப்பெண்மணி, குழந்தையை ஒரு பெட்டியில் வைத்து நைல் நதி வெள்ளத்தில் விட்டாள். அக்குழந்தையை எகிப்து மன்னன் எடுத்து வளர்த்தான்; அவனே மோஸஸ் என்ற பெயரிட்டான்.

மோஸஸ் என்றால் வெள்ளத்திலிருந்து காக்கப்பட்டவன் என்பது பொருள். மோஸஸ் ஆத்மதீரன், போர் வீரன், ஆசார சீலன், சன்மார்க்க ஜோதி, தீவிரமான தேசபக்தன், தெய்வபக்தன். இவன் எகிப்தில் வளர்ந்தான்; ஓர் எகிப்தியன் ஒருநாள் ஓர் இஸ்ரவேலனை அடித்து அவமதித்தான். "எனது நாட்டானை அவமதிக்கிறாயா" என்று வாளால் ஒரே

வெட்டில் எகிப்தியனை வீழ்த்தினான் மோஸஸ். அதற்காக எகிப்தியர் அவனைக் கட்சிகட்டிக் கொல்லத் துரத்தினர்.

மோஸஸ் மாறுவேடம்பூண்டு ஜெத்ரோ என்ற பெரியார் ஆதரவில் ஒரு வனாந்தரத்தில் வாழ்ந்தான். அவர் மகளையே மணந்தான். பிறகு திருவருள் ஆணையால் இஸ்ரவேல் ஜனங்களைக் காக்க உரிமை முழக்கம் செய்தான்; பாலத்தீனில் கொடி நாட்டினான். ஆறுலட்சம் இஸ்ரவேலரை அவன் எகிப்திலிருந்து விடுவித்து யாத்திரையாகப் பாலஸ்தீனத்திற் சேர்த்தான். எகிப்தின் கொடுங்கோலை முறித்தான். அடிமை விலங்கை அறுத்தான். தன்னவர் தலைநிமிர்ந்து நடக்கச்செய்தான். மோஸஸ் தியான யோகி. சினாய் (Sinai) மலைக்குகையில் அடிக்கடி தியானித்து, அருள்வாக்கும் பெற்றுத் தன்னவருக்கு நன்னெறி வகுத்தான்.

அவன் வகுத்த நெறியே வழிவழியாக வழங்கிவந்தது. மோஸஸ் 180 ஆண்டுகள் வாழ்ந்து நேபோ மலையில் தியான பரனாயிருந்து உடலை உதறிச் சென்றான். இவனுக்குப் பிறகு இஸ்ரவேல் மரபு சீர்குலைந்து கலைந்து எப்படியோ தப்பிப் பிழைத்தது. என்றாலும் நாடு ரோம் அரசிற்கு அடிமையானது. ரோம் கவர்னர் ஏரோது ஆளும்போது தான் யோசேபு மேரியை மணந்தான். மேரிக்கு பெத்தல்ஹாம் மாட்டுக் கொட்டிலில் ஏசுநாதர் பிறந்தார். ஏசுநாதர் பிறவி ஞானி, தீர்க்கதரிசி, திருவருட்சோதி. அக்கால யூதசமுதாயம் ரோமருக்கு அடிமையாகிக் கெட்டழிந்திருந்தது. அதைக் காக்க எழுந்தார் ஏசுநாதர். அவர் கொடுங்கோலரசைத் தகர்த்து விண்ணரசை உலகில் நாட்டவே அன்புப் பொறுமையையும் ஆத்மஞானத்தையும் உபதேசித்தார். பலன்? தன்னவரே துரோகிகளாகி மகானைச் சிலுவை யேற்றினர். யூதாஸ் என்னும் சிஷ்யனே ஏசுநாதரைக் காட்டிக்கொடுத்தான். மற்றச் சிஷ்யர்கள் திக்கிற்கொருவராக ஓடி ஒளிந்தனர்,

பால், பீடர் ஆகிய இரண்டு சிஷ்யர்களே, வெகுகாலம் கழித்து, ஏசுநாதரின் உபதேசங்களைப் பரப்பி யூதக்கோயிலான ஸினகாலில் தெசமுகை நடத்திவந்தனர்.

கிறிஸ்து மதம் பிற்காலத்திலேதான் உருக்கொண்டது. அதற்காகக் கிறிஸ்து பக்தர்கள் செய்த தியாகமும் பட்ட சித்திரவதையும் பயங்கரமான கதைகள்.

இவ்வாறு தியாகத்தில் எழுந்து அன்புப் பொறுமையைக் கொள்கையாகக்கொண்ட கிறிஸ்து சமயம் யூதரை வெறுக்கத் தொடங்கியது; காரணம் யூதர் ஏசுநாதரைச் சிலுவையேற்றியதே.

உலக சரித்திரத்தில் யூதர்போலக் கஷ்டப்பட்டவர்கள் யாருமில்லை. பாலஸ்தீனம் யூதநாடே; அங்கே அவர்கள் இருக்கக் கூட முடியாமல் போட்டி வலுக்கிறது; யூதர், அரபியர் இருவரையும் தட்டிக் கொடுத்து முட்டுக்கடா விளையாட்டுக் காட்டி அன்னியர் ஆதிக்கம் செலுத்துகின்றனர். ஊர் இரண்டானால் மூன்றும் மனிதனுக்கு எளிதல்லவா?

உலகில் 1½ கோடி யூதர் இருக்கிறார்கள்; இவருள் போலந்தில் 3,000,000 பேர், ரஷ்யாவில் 3,000,000, ருமேனியாவில் மூன்று லட்சம், ஜர்மனியில் மூன்று லட்சம், அமெரிக்காவில் 44 லட்சம், பாலஸ்தீனத்தில் 4½ லட்சம், பிரிட்டனில் மூன்று லட்சம், பிரான்ஸில் 2½ லட்சம் பேர் வசிக்கிறார்கள். உலகமெங்கும் யூதர் வியாபாரம் நடத்துகிறார்கள். வியாபாரத்தில் யூதர் கெட்டிக்காரர்கள்; விரைவாகப் பொருள் சேர்க்க வல்லவர்கள். இவர்கள் தங்கள் சமயாசாரங்களில் கிறிஸ்துவர்களைவிட வைராக்கியமானவர்கள். மோஸஸின் சன்மார்க்கத்தைப் பின்பற்றுவோர். இவர்கள் யிட்டிஷ் (Yiddish) பாஷை பேசுவோர். அது ஹீப்ரூவும் ஜெர்மனும் கலந்தது. யூதர் தங்கள் சமயத்தை அந்தரங்கமாக வைத்துக் கொண்டு கால வெள்ளத்திலும் மார் நீச்சடித்து முன்னேறும் அறிவாளிகள். வைத்தியம், வியாபாரம், பாங்கு, ஓடல், சட்டத் தொழில், கல்வித்தொழில், அரசியல் அனைத்திலும் இவர்கள் மிகவும் முன்னேறியிருக்கிறார்கள். அமெரிக்காவில் யூதர் யந்திரத்தொழில் நடத்துகிறார்கள்; துணி வியாபாரத்தில் முதன்மை பெற்றிருக்கிறார்கள். முக்கியமாக லேவாதேவியிலும் வியாபாரத்திலும் ஓடல் தொழிலிலும் யூதரை யாரும் மிஞ்சமுடியாது.

லைப்பாய் பழக்கத்தையும் அவன் அறிந்திருக்கிறான்!

இப்பொழுது அவன் அதிக விஷயங்களைக் கற்றுக்கொள்கிறான். ஆனால் லைப்பாய் சோப்பைத் தினசரி உபயோகிக்கும் பழக்கம் தவிர, வாழ்க்கையில் அவனுக்கு வேறொன்றும் அதிக நன்மை செய்யப்போவதில்லை. பாதுகாப்பற்றவர்களை எல்லா இடங்களிலும் பீடிக்கிற அழுக்கு அபாயத்திலிருந்து தான் கற்பித்த புத்திமதிகள் அவனுக்குப் பாதுகாப்பளித்திருக்கிறதென்பதாக அவன் தாய் சந்தோஷமும், பெருமையும் அடையக்கூடும்.



லைப்பாய் ஒரு நல்ல சோப்பைக் காட்டிலும் சிறந்தது.

அது ஒரு நல்ல பழக்கம்.

L. 77-23 TM

LEVER BROTHERS (INDIA) LIMITED

யூதர் பணத்திலேயே குறிப்பாயிருந்து பணக்காரரானார்கள். பெருவாரியான யூதர் கிறிஸ்துவருடன் கலப்பு மணம் புரிந்து கொண்டனர். ஐரோப்பிய யூதர் ஐரோப்பிய நடை உடை பாவனை பேச்சுடன் வாழ்கிறார்கள். இன்னும் சில ஆண்டுகளில் எல்லாரும் கலந்தே போவார்கள்.

அப்படி அவர்கள் கலக்க விட்டால் நார்டிக் சாதி மட்டமாய் விடும் என்று ஹிட்லர் கூச்சலிட்டுக் கொலை வாள் வீசினான். அவன் நாஜித்தலைவனாக வந்ததுமே பீர் ஸெல்லரில் தானே குண்டு போட்டு யூதர் மேல் சாட்டி, பல யூதரைப்படுகொலை செய்தான். ஊரில் எந்தக்கலகம் நடந்தாலும் யூதரைக் கொன்றான். யூதர் சொத்து சுகங்களைப் பறிமுதல்செய்தான். அவர்களை நாடு கடத்தினான். ஏய்ன்ஸ்டன் போன்ற அறிவாளிகள் கூட அமெரிக்காவிற்கு ஓடினர்.

ஹிட்லர்-போரில் போலந்து, பிரான்ஸ், ருமேனியா, பல்கேரியா, உக்ரேன், ரஷ்யா நாட்டில் கணக்கற்ற யூதர் நாஜி பீரங்கிக்கு இரையானார்கள். பலர் பிற நாடுகளுக்குச் சென்று குடியேறினர்.

அடக்குமுறையால் மனிதனை மனிதன் ஒடுக்கமுடியாது. அடக்க அடக்க ஆத்திரம் கிளம்பிப் புரட்சி வளர்ந்து அரசையே கவிழ்த்துவிடும். யூதசமுதாயம் இன்று மனங் கொதித்துக்கொண்டிருக்கிறது.

தாய் நாடான பாலஸ்தீனத்தை யூதர் கைப்பற்றக் கிளர்ச்சி செய்கிறார்கள். இதில் யூதசமுதாயம் முழுதும் தீவிரமாக முனைந்து நிற்கிறது. இந்த இயக்கத்திற்கு ஃஜோனிஸம் (Zonism) என்பர். இது 1895-ஆம் ஆண்டு ரஷ்யாவில் உருக்கொண்டது. டாக்டர் தியோடர் ஹெர்ஃஜில் என்பவரே இதை உருவாக்கினார். 20,00000 அங்கத்தினர் அதில் சேர்ந்தனர்.

1898-ல் முதல் ஃஜோனிய மகாநாடு கூடிப் பாலஸ்தீனில் சுதேச ராஜ்யம் நாட்ட உறுதிபூண்டது. முதலில் பிரிட்டிஷார் இதை மறுத்துப் பிறகு யூதரைத் தட்டிக்கொடுத்தனர். யூதர் பெருவாரியாகப் பாலஸ்தீனத்தில் குடியேறினர். இன்று அங்கே சுமார் 5 லட்சம் யூதர் இருக்கிறார்கள்.

ஃஜோனியத் தலைவர் வேஃஜ்மான் சிறந்த அறிஞர், வீரர், காரிய சக்திபெற்ற தீரர்.

பழைய காரணங்களைக்கொண்டு இனி யூதரை அவமதிக்க முடியாது. ஷேக்ஸ்பியரின் ஷைலக் இனி இல்லை. யூதரை இலக்கியங்களில் தாக்கி இழிவுறுத்துவதும் யூதச்சேரியில் அடைத்து அடக்குவதும் இனிச் செல்லாது. நமது நாட்டில் தீண்டாமை ஒழிய வேண்டும்; ஐரோப்பாவிலும் அரபியாவிலும் யூத வெறுப்பொழியவேண்டும்.

யூத மதத்திலிருந்தே கிறிஸ்துமதமும், இஸ்லாமும் உருவாயின. ஸ்பினோஃஜா, டிஸ்ரேலி, ஹெர்ட்ஸ், வாஸ்ஸர்மான், எல்ரிஷ், ஏய்ன்ஸ்டன், ஃப்ரூட் (Freud) பெர்க்ஸன் போன்ற மகா மேதாவிகள் யூத மணிகள். யூதரிடம் நல்ல கட்டுப்பாடிருக்கிறது.

பாலஸ்தினம் 10,430 சதுர மைல் உள்ளது. அதில் 1,50000 பேர் இருக்கிறார்கள். அராபியர் 10 லட்சம், யூதர் 5 லட்சம். யூதர் தமது தாய் நிலத்தில் கொடிபோடப் பார்க்கின்றனர்; அராபியர் மறுத்துப் போராடுகின்றனர். அரபியரும் கட்சி கட்டி எதிர்க்கின்றனர். இரண்டுபேருக்கும் நடுவே தராசு முனையில் பிரிட்டிஷ் ஹைகமிஷனர் தம் காரியத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார். இடையே ரஷ்யாவும் புகுந்து திருவிளையாடுகிறது.

சூயஸ் கால்வாய் பிரிட்டிஷ் வியாபாரத்தின் உயிர்நாடி. மேலும் அந்தப் பக்கமே பெட்ரோல் செல்கிறது. எங்கே வியாபாரம் வலுக்குமோ அங்கே யூனியன் ஜாக் ஆடாமல் என்ன செய்யும்?

இன்றுலகப் பிரச்னைகளில் பாலஸ்தீனப் பிரச்னையும் மிகச் சிக்கலானது. பாலத்தீனம், ஜார்டன், ஈரான், இந்தியா, பர்மா, மலேயா, ஆஸ்திரேலியா—ஆகிய ஆசிய நாடுகளாலேதான் ஐரோப்பாவுக்குப் பிழைப்பும் பெருமையும்.

இங்கிருக்கும் சுதேசிகளோ சுதந்தர தாகங்கொண்டு குமுறுகிறார்கள். அவர்களை நயமாக வசப்படுத்தவே இப்போது பிரிட்டிஷார் தூது நடக்கிறார்கள். இப்போது நடக்கும் சமாதான நாடகம் அணுகுண்டுப் புயலுக்கு அங்குரார்ப்பணமாகாமல் கடவுள் காக்கட்டும்.

"விடுதலை"

எம். எஸ். கமலா

"மிருணு! நான் சொல்வதைக் கொஞ்சம் கேளம்மா! எத்தனை படித்தாலும்......'மலையிலே வளர்ந்தாலும் உரலிலே தான் மசியவேண்டும்'. இதற்குமேல் நமக்குப் படிப்பு வேண்டாம். என் ராஜா! என் முகத்தைப் பார்த்து........."

"அதைத்தவிர்த்து என்ன வேண்டுமானாலும் கேட்கிறேன். படிப்பு விஷயத்தில் மாத்திரம்............" என்றுள் குழிவிழுந்து, கொந்தளித்துச் சிவந்திருக்கும் கண்களை மெள்ளக் கசக்கியபடியே பதினான்கு வயது சிறுமி. அவளால் பேசக்கூட முடியவில்லை. வெகு ஆயாசத்துடன் மெல்லிய குரலில் பேசினாள்.

"அம்மா! கொளந்தே சாப்பிட்டு பத்து நாளுக்கு மேலல்லவா ஆயிடுச்சு. இப்படி உறிச்ச நார்கணக்கா உளுந்துகிடந்தா வளர்ரகொளந்தே........."

"நீ வாயை மூடிக்கொண்டு போறயா? இல்லையா? தேவானே!" என்று தன் அகங்காரம் முழுவதையும் சொற்களில் கொட்டினாள்.

"உனக்கேன் ராசா! அம்மாம் கோவம் வருது? நான் என்ன சொல்லிபுட்டேன்? எல்லாரும் காந்தி மவான் பட்டினி கிடக்காரு. அவரு கேட்டதை கொடுக்கமாட்டேன்ன சருக்காருகாரருடனே கத்தியில்லாமெ, ரத்தம் சிந்தாமெ, சத்தியாக்கிரவம்னு சண்டை போடற வளி அதுதான்னு சொல்ல கேட்டிருக்கேன். அம்மாம் நாள் சோறு இல்லாமெ எப்படி இருப்பாருன்னு ஆச்சரியமாயிருக்கும் ஏம் மனசுக்கு. இப்ப கண்கூடா உன்னைப் பாத்தால்லா தெரியுது. சண்டைபோட்டு மண்டையைப் பொளந்துகிட்டாலும், கட்டுக் கட்டிக்கினு சுத்திவரலாம். நீ உரும் வவுத்துடனே உசிரேகையிலே பிடிச்சிகிட்டு. உளுந்துகிடந்தா எங்க வவுத்துப் புளு செத்துப் போவுதுடா ராசா!" என்றுள் கண்ணீர் வடிந்தபடி தேவானே!.

"போடி! பொளப்புகெட்டவளே! நான் படிக்கணும்னு அம்மா அது முடியாதுங்கராங்களே! அதுக்கு சொல்லேன்" என்று புரள முடியாமல் பலவந்தமாய் மெல்லப் புரண்டு சுவரின்புறம் திரும்பிக் கொண்டாள்.

"அம்மா! நீங்க செய்யறதும் நல்லாயில்லீங்க, ஒருநாளு ரெண்டு நாளு சொல்லிப் பாக்கணும். அதுதான் உசிரையானாலும் வுடுவேன். எளுத்துப் படிக்கிறதெ உட மாட்டேங்குதே! அது இஷ்ட பிரகாரம் உட்டா இம்மாங் கயிஷ்டமில்லையே!" என்றுள். பரிதாபமும் பணிவும் அன்பும் சொற்களில் தொனிக்க. சுயம்பிரபாதேவி ஒன்றும் தோன்றாமல் பெண்ணையே உற்றுப் பார்த்தாள்.

உருண்டு திரண்டிருந்த தோள்களின் மேலே எலும்புகள் தூக்கிகொண்டிருந்தன. குமுதமலர்களைப்போன்ற குறுகுறுத்த கண்கள் குழிவிழுந்து, கன்னங்கள் ஒட்டி வயிறு முதுகுடன் ஒட்டி, களைமிகுந்த மிருணாலினியின் முகம், களைகுன்றிச் சவத்திற் கொப்பாயிருந்தது. மூச்சு வெகு நிதானமாய் வந்துகொண்டிருந்தது.

அச்சமயம் 'அமிர்தபாஷிணி' பள்ளியின் தலைவி ஜோத்ஸ்னாதேவி "குமாரி மிருணாலினி!" என்றழைத்தபடி உள்ளே வந்தாள். மிருணாலினிக்குப் பேசச்சக்தியில்லை. மெள்ள "ஊம" கொட்டினாள். சடக்கென்று திரும்பி தன் உபாத்தினியைப் பார்க்கமுடியவில்லை. ஜோஸ்த்னாதேவி பரபரப்புடன் கவலை தோய்ந்த கண்களால் ஆவலுடன் மிருணா அருகில்சென்று, மெள்ள அவளை நேர் முகமாய்த் திருப்பினாள். மிருணா கண்ணீர் சோர உபாத்தினியைப் பார்த்தாள்.

"குமாரீ! ஏன் இப்படியாகிவிட்டாய்?" என்று தன் கண்களில் துளிக்கும் நீரைக் கைக்குட்டையால் ஒற்றிக்கொண்டாள். சுயம்பிரபாதேவி கூண்டிலடைபட்ட கைதி நியாயஸ்தலத்தில் எதையும் சொல்லச் சக்தியற்றுத் திகைத்து நிற்பதைப்போல் அமர்ந்திருந்தாள்.

"எவ்வளவு நாளாய் மிருணாலினிக்கு உடம்பு சரியில்லை?" என்றுகேட்ட உபாத்தினிக்கு,

"அது ஏன் கேக்கரீங்கோ! கொளந்தே பாசாயுடுச்சின்னு தெரிஞ்சதும் அது பின்னும் படிக்கணும்னுச்சு. அம்மாவுங்க அதுக்கு ஒப்பல்லே! அதுவும் கெஞ்சி, கூத்தாடி, அளுது, புரண்டு என்னவெல்லாமோ சொஞ்சுட்டுச்சு. அமமாவுகோ 'ஊஹூம்'

அதுக்கு மாத்திரம் ஒத்துக்கல்லே. நகை வேணும்னு பண்ணித்தாரேன். புடவை வேணும்னு வாங்கித்தாரேன்னுங்க. அதுக்கு ரோசம் பத்திகிட்டு வந்திடுச்சு. ஓம் பொடவெ, ரவிக்கே, நகை, நட்டு, எனக்கு வாணும். படிச்சா படிப்பேன். இல்லா வுட்டா செத்துப் போறேன்னுட்டு, பச்சை தண்ணியெ மாத்திரம் குடிச்சுகினு பத்து நாளுக்கு மேலாய் கிடக்குதுங்க. பாயுடன் பாயா ஒட்டிக்கிட்டு. இப்பகூட செத்தெ முந்தி இதே பாட்டுதான் படிச்சுபுட்டு அந்த பக்கம் திரும்பிடுச்சு. பேசமுடியல்லே! மேல்மூச்சு வாங்குது. ரோசம் தாங்கல்லே. பேச்சு பீறிகிட்டு வந்திடுச்சு.........''

''அம்மணீ! இப்படியும் அவிவேகமுண்டா? குமாரி மிருணாலினியைப் போன்ற புத்திசாலியான பெண்கள் எந்த ஆயிரத்திற்கோ ஒருத்திதான் இருக்கமுடியும். பதின்மூன்று வயது நிரம்பும்போது எந்தப் பெண் பிரவேச பரீக்ஷை (S. S. L. C.) பாஸ் செய்வாள். குழந்தை மிகவும் கெட்டிக்காரி. அவளுக்குக் கலாசாலையிலேயே உபகாரச் சம்பளம் கொடுக்கிறார்கள். எங்கள் பள்ளியில் அவளுக்குவேண்டிய புஸ்தகங்கள் அளிக்கப் போவதாய்த் தீர்மானித்துள்ளோம். இச்சந்தோஷச் செய்தியைச் சொல்லத்தான் நான் வந்தேன்'' என்று, ''குமாரி! பட்டினி கிடந்து எம பட்டணத்திற்குப் போனால் என்ன உண்டு? உன் வழிக்குத் தீரமுடன் போராடி உன் அன்னையைத் திருப்பினால் அல்லவோ நீ சமர்த்தை''என்று அவள் நெற்றியில் வந்து பரவும் கேசராஜங்களைப் பாசமுடன் தள்ளினாள்.

சுயம்பிரபாதேவி இயந்திரம்போல் தன் மகளின் முதுகை வருடியபடியே ''மிருணா! மிருணா!! உனக்கு இத்தனை பிடிவாதம்... படிப்பின்மேல் இருக்கிறதென்பதை இன்றுதான் அறிந்தேன். நீ ஆகாரம் உட்கொள்ளம்மா. கலாசாலையில் சேருவாயாம்'' என்றாள். அன்புடன் வருடும் அன்னையின் கைகளுக்குப் பெண்ணின் முதுகெலும்புகள் இடறின. சுயம்பிரபையின் ஜீவநாடி நடு நடுங்கியது.

''தேவானே! டாக்டரய்யாவை அழைத்துவா!'' என்று சொல்லிவிட்டுப் பெண்ணை எடுத்துத் தன்மேல் சாத்திக்கொண்டாள். அவள் கண்களிலிருந்து மளமளவென்று நீர் வடியத் தொடங்கியது.

''அப்படியானால் கலாசாலைக்கு எழுதட்டுமா?'' என்று ஆவலுடன் ஒவ்வொரு மூச்சுக்கும் ஒவ்வொரு எழுத்தாய் உச்சரித்தாள்.

''நீங்கள் செய்தது சுத்தமாய் நன்னா இல்லை. அவள் விருப்பப்படி நடக்காமல் உயிருக்கே உலைவைத்துவிட்டீர்கள்......'' என்றாள் காரமாய் ஜோத்ஸ்னாதேவி.

''......................''

''இத்தனை சிறியவயதில் எத்தனை நன்றாய்ப் படிக்கிறாள்? இவளைப்போல் ஒரு குழந்தையை............'' என்னும் போதே டாக்டர் வந்தார்.

''என்ன சுயம்பிரபா! நீ உலகத்தை ஒரு கையால் பிடித்து ஆட்டக்கூடியவள் என்று நினைத்திருந்தேன். இன்றுதான் உன் சமர்த்துத் தெரிகிறது. அநியாயமாய்க் குழந்தையை............'' என்று மிருணாலினியைப் பார்த்தார். உதட்டைப் பிதுக்கியபடியே ''அசட்டுப்பெண்ணே! இப்படி ஹடம்செய்யலாமா?'' என்று ஒரு இன்ஜக்ஷன்செய்து, ''ஆரஞ்ச் ஜூஸூம் குளுகோஸ் வாட்டரும் இரண்டு நாட்களுக்குக்கொடு, பிறகு வேறு ஆகாரம் கொடுக்கலாம்'' என்று சொல்லிச் சென்றார்.

*　　*　　*

கலாசாலையில் மிருணாலினி சேர்ந்து இரண்டாண்டுகளாகப்போகிறது. பரீக்ஷைகள் முடிந்துவிட்டன. அன்று ஹாஸ்டலில் இருக்கும் சில மாணவிகள் தங்கள் தங்கள் ஊருக்குச் சென்றால் மறுபடியும் அங்குப் படிக்க வருகிறோமோ இல்லையோ என்றஞ்சியவர்களாய், கலாசாலை அதிபருக்கும் மற்றும் ஆசிரியர்களுக்கும் நேயர்களுக்கும் தேனீர் விருந்தளித்தனர். அதற்கு மிருணாலினி சென்றாள். முதல்நாள் அவளிடம் நோட்ஸை வாங்கிக்கொண்டு சென்ற வாஸந்திகா மிருணாலினியைக் கண்டதும் அவளருகிலிருக்கும் மேஜைமேல் நோட்ஸை வீசி எறிந்துவிட்டுச் சென்றாள். அவள் ஆச்சரியத்துடன் புஸ்தகத்தையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தாள். அச்சமயம் அவளை அதிரச்செய்தன வாஸந்தியின் சொற்கள். ''எங்கம்மா அவளுடன் சகவாஸம் செய்யக்கூடாதென்று சொல்லிவிட்டாள். அவள்...'' அதற்குமேல் சொன்னது காதில் படவில்லை. சிறிது நேரத்திற்குப்பின் ''அவர்கள் வீட்டுக்கு...'' என்று கேட்டது. மிருணாவின் மனம் விண்டே விட்டது. தன்னுடன் சேர்ந்தால் என்ன வந்துவிடும் என்று யோசித்தபடியே அமர்ந்திருந்தாள். உலகமறியாத ஒரு உத்தமச் சிறுமி வேதனையுடன் தன்னை மறந்து உட்கார்ந்திருந்தாள். தேனீர் மேஜையைச் சுற்றிலும் ஒவ்வொருவராய் வந்தமர்ந்தனர்

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்
ஹம்பி வெங்கட்ரமணய்யா & சன்ஸ்.

லிவர்க்யூர் பிராஞ்ச் ஆபீஸ்
பெரியதெரு
கும்பகோணம்.

Liver Cure Branch Office
Parekh Mansion
Sandhurst Road, (West)
BOMBAY.

வந்தவர்களில் முக்கால்வாசி ஜனங்களும் "மிருணாளினி வரவில்லை?" என்றுதான் கேட்டனர். சமயத்திற்குச் சரியாய் மிருணா வந்தமர்ந்தாள். ஒவ்வொருவரும் அவளைச் சுற்றி வளைத்துக்கொண்டு "எப்படி எழுதியிருக்கிறாய்? பிரஸிடென்ஸி பஸ்ட்தானே!" என்று கேட்டனர். அவள் வாடிய முகத்துடன் "கடவுள் சித்தம் எப்படியோ" என்று சொல்லியபடியே சிறிது நேரமிருந்து வீட்டுக்குச் சென்றாள். அவளுக்குப் பாதங்கள் பூமியில் படியவில்லை. காற்றைப்போல் கடுகியோடி, கையிலிருந்த புஸ்தகத்தைப் புஸ்தக ஷெல்பில் வைக்கச் சென்றாள். அடுத்த அறையில் தன் தாய் பேசுவது கேட்டது. அப்படியே மேஜைமேல் இரண்டு கைகளையும் ஊன்றிக்கொண்டு நின்றாள். நிற்கமுடியவில்லை.

"தயாராம்ஜீ; சில நாட்கள் பொறுத்துக்கொள்ள வேண்டும்"

"பொறுத்துக்கொள்வதா? எத்தனை நாட்கள்?? நீதான் சொல்லு பிரபா???(1460) ஆயிரத்து நானூற்று அறுபது நாட்கள்...... (208) இருநூற்று எட்டு வாரங்கள்...... நாற்பத்தெட்டு மாதங்கள். நான்குவருடங்கள் பொறுத்தாயிற்று. பொறுமைக்கும் வரம்புண்டல்லவா?" என்றான் படபடத்த குரலில் தயாராம்.

"பிழை என்னுடையதல்லவே!" என்றாள் பரிதாபமாய் சுயம்பிரபா.

"இதையறியாமல் ... அறியாத ...நீ...எப்படி இருபதினாயிரம் முன்கூட்டியே வாங்கினாய்?" என்றான் கட்டிப்பான குரலில்.

"வேண்டியிருந்தது. நீங்களும் இச்சை கொண்டு...உங்களுக்கு விருப்பமிருந்ததால் ...உங்களுடைய உரிமைப் பொருளாய்... பதிவு செய்துகொள்ள..." என்றாள் வெட்டிப்பேசிக்கொண்டே.

"இவ்வளவுதானா? இன்னும் உண்டா பிரபா?? ஸ்திரீசாகசம்..."

"ஸ்திரீ சாகசமல்ல. ஸ்திரீயின் கொந்தளிக்கும் ரத்த ஒலி...பெண்மையின் பொங்கும்..."

"ஆனால் நீ இப்பொழுது சொல்வது..."

"நான் என்ன சொன்னேன்...பக்குவமாகாத...கனியாத கனியை..."

"எனக்குத் தெரியாது. நாளைக்கு நான் குமாரி மிருணாளினியின் அருகில்"

198072

"எப்படி என் குழந்தையிடமே நான் இதைச் சொல்வேன்.........ஐயோ......"

"நான் ரூபாய் கொடுக்கும்போது...நாளை இத்தனை நேரத்திற்கு வருவேன்" என்று சரசரவென்று கதவைத் திறந்துகொண்டு சென்றான். அவள் அப்படியே கட்டிலுடன் கட்டிலாய்ச் சாய்ந்துவிட்டாள். மிருணுவுக்குத் துக்கம் பீறிக்கொண்டு வந்தது. மாமா, அத்தான், மச்சான் என்று தன் தாயிடம் வரும் இத்தனைபேர்கள் யார்? அத்தானும், மச்சானும் வெவ்வேறு பாஷை பேசுவானேன்? தன் வீட்டிற்கு... ...தன் சகவாசத்தைப்.........வெறுக்கும்படி தன் வீட்டில் நடப்பதென்ன? அவளுக்கு எங்கிருந்தோ துக்கம் குமுறிக் குமுறி வந்தது. தன் தாயை மிரட்டிச் செல்லத் தயாராமுக்கு என்ன அதிகாரம்? தான் பட்டினி கிடந்து, கலாசாலையில் சேர்ந்து கருத்துடன் படித்தும், தன்னைக் கண்யமாய்ப் பார்த்துக்கொண்டிருந்த தன் நேசிகளுக்குள் திடீரென்று தன்மேலிருந்த அன்பு அகலும்படி தன்னிடம் தோன்றிய வித்தியாசம்......தன் சகவாசத்தை வெறுக்கும்படி செய்ய ஏற்பட்ட குறை.........இப்படி மண்டையை உடைத்துக் கொண்டிருக்கும்போது தயாராம் சொல்லிச் சென்றது அவளை என்னவோ செய்தது. தன் உள்ளப்பொருமலை அடக்கிக்கொண்டு தன் அறைக்குள் ஓடினாள். யோசனையில் கொதிக்கும் ரத்தத்தில் சொல்லாயுதங்கள் தட தட கட கட வென்று வேக, வெறுப்புடன் வெதும்பிக் கொண்டிருந்தாள். உலகம் முழுவதும் சாந்தியாய்த் தூங்கும்போது உலகமறியாச் சிறுமி உள்ளத்துடிப்புடன் புரண்டுகொண்டிருந்தாள்.

* * *

கண்களை மூடிக் கட்டிலில் சாய்ந்தவள்தான் சுயம்பிரபாதேவி. புரண்டுகொண்டிருந்தாள். அப்பொழுதுதான் தன்னை விட்டுச் சென்ற தயாராமைப்பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தாள். அவள் மனோ கர்ப்பத்தில் மடிந்து கிடந்த எத்தனையோ சம்பவ சித்திரங்கள் மேலெழும்பிக் கூத்தாடத் தொடங்கின.

இதே வயது பதினைந்துதான். ஏழையான தந்தை. அவர் சக்திக்கேற்றபடி ஏழைச் சிறுவன் ஒருவனுக்கு விவாகம் முடித்து வைத்தார். "லக்ஷ்மீ லக்ஷண ஹீனம்ச குல ஹீனேச ஸரஸ்வதி!" என்பதைப்போல் பணமற்ற தன்னிடம் பரத்தையருக்கு இருக்கவேண்டிய அதி அற்புத சௌந்தர்ய பொக்கிஷம் நிரம்பிக்கிடந்தது. பாழாய்ப்போன விதி சதிசெய்யக் கங்கணம் கட்டிக் கொண்டது. எதை அழித்துப் பாழ்செய்வது? அவளிடமிருப்பது ஒரு மஞ்சள் சரடு. அதைப் படக்கென்று அறுக்கத் திட்டம் போட்டது. போட்டு இழுத்தது பாசக் கயிற்றைப் பஞ்சநாதன் கழுத்தில், அறுபட்டது மஞ்சள் கயிறு மாதவியின் கழுத்திலிருந்து. கிழத் தந்தை காணச் சகியாத கோலத்தைக் கண்டு வயிறெரிந்து வாயைப் பிளந்தார்.

மாதவி திக்குத்தெரியாத உலக வீதியில் அணைப்பாரற்று, கேட்பாரற்று விதிதேவனின் கையில் விழுந்த விதியற்ற கைம்பெண் ஆனாள். விதிதேவனுக்குக்கூடக் கைம்பெண் என்றால் விபரீத அசட்டை. இல்லாவிடில் பஞ்சநாதன் இறந்தபின் பாழும் பசிக் கொடுமையைத் தாளாது வீடு வீடாய் ஏறி, வயிற்றிற்கு இத்தனை கேட்டால் கடின சித்தம் படைத்த கல் உலகில் காமப் பித்தர்கள் குறுக்கிடுவானேன்? விதியும் சதியும், சரியான ஜோடி வீரர்கள். சண்டையிடத் தொடங்கிவிட்டால்.........அவர்களிடையில் சிக்குண்ட அசக்தை...அபலை...ஆதரவற்றவள்......கைம்பெண்.........என்ன செய்ய முடியும்?

மனோ தைரியத்தைவிடாமல், மானத்தை இழக்காமல்......மானமாய் வாழ வழி தேடினாள். கூலிக்குச் சென்றாள். கூலிக்காரர்கள் கேலி பேசிக் கூட அழைத்தனர். அதைத் துறந்தாள். ஹோட்டலில் வேலைக்குச் சென்றால் பணப்பெட்டியின் முன் அமர்ந்து பாறையாகிவிட்ட பட்டரின் மனம் இளம் மங்கையின் தளதளப்பான மினுமினுப்பின்மேலே தவழ இச்சைகொண்டது. "அடகஷ்டமே! எல்லாத் தொழிலும் வெகு சுலபம். ஆனால் பாழாய்ப்போன இந்த வயிற்றைக் கழுவுவது உலகில் இத்தனை கஷ்டமான தொழிலா?" என்று அருவருத்துக்கொண்டே உலகில் போற்றப்படும் புனிதத் தொண்டாகிய சேவகியாகி (பிக்ஷுணி) கோயிலில் பூத் தொடுத்துக் கொடுத்து, கடவுள் சேவைசெய்தாகிலும் கட்டையைக் கடைத்தேற்றி, காமுகர்களின் கண் அம்புகளிலிருந்து தப்பித்துக்கொள்ளலாமென்று பரம சந்தோஷத்துடன், பகவானை நம்பி, மனிதர்களால் கட்டப்பட்டு, கல்லால் பிரதிஷ்டை செய்யப்பட்ட கற்கோட்டைக்குள் நுழைந்தாள். கடவுளை நம்பிச் சென்றவிடத்திலும் காமுகர்களின் கண்ணம்புகள் சுடவந்தன.

"ஐயோ! கடவுள் சந்நிதானம்......புனித விடம்.........புகலிடமென்று வந்தேனே!" என்றோலமிட்டாள். அக்கடவுளும் கசடர்

களால் கல்லால் பிரதிஷ்டை செய்யப்பட்டதுதானே! இவள் வந்தாள் கஷ்டவுலகில்!

வயல் வெளியில் ஒய்யாரமாய்ப் பறக்கும் பஞ்ச வர்ணக் கிளியைப் பஞ்சரத்தில் அடைத்துப் பால் வைத்தாலும், அன்புடன் எதையளித்தாலும், வெகு நாட்கள்வரை, மூக்காலும் நகத்தாலும் கூண்டின் கம்பிகளைப் பிருண்டிக்கொண்டிருக்கும். இடைவெளி கிடைத்தால் பறந்தோடத் துடிக்கிறது. ஏன், பஞ்சரத்தில் சுகமில்லையா?

சில நாட்கள் கூண்டைப் பிருண்டிய கிளியே பிறகு அதைத் தன் கூண்டாக நினைத்துத் திருப்தியடைகிறது. பறந்தோடும் எண்ணத்தைத் துறந்து, இத்தனை நாள் தன்னை வைத்தடைத்த சத்துருவாய் நினைத்த அந்த மனிதனையே மித்திரனாய் நினைக்கிறது. அவனைப்போல் தானும் பேசத் தொடங்குகிறது. அதைப்போல் அல்லல்படும் நெஞ்சத்திற்கு அடைக்கலம் வேண்டியிருந்தது. உடலுழைத்துக் கஷ்டப்படும் ஊர்க் கிழவியை வந்தணுகினாள். பாழாய்ப்போன அழகு செய்யும் அவதியை நினைத்து நினைத்து அலறினாள். உலக வீதியில் நிர்ப்பயமாய் ஒரு நிமிஷத்தைக் கடத்தமுடியாத தன் நிலையைச் சொல்லித் தரை நனையக் கண்ணீர் சோரவிட்டாள்.

பரந்த வெளியில் பயமற்று இரைதேடச் சென்ற கிளி பஞ்சரத்தை நோக்கிப் பறந்து வந்துவிட்டது. ''பைத்தியக்காரப்பெண்ணே! உலகில் வயிற்றைக் கழுவுவதுதான் கஷ்டம். அதற்காக வாங்கவேண்டிய பொருள்களுக்கு விலையுண்டு.........விற்கவேண்டிய பொருளுக்கு விலையில்லை. கோடியும் பெறும், ஓர் அரசையும் வாங்கலாம். அதற்கேற்ப அழகும் இருக்கிறது. அதை வைத்துக்கொண்டே அலண்டு ஓடினால்............ அழைத்திடுபவர் யாருமில்லை...'' என்றாள்.

எதை வெறுத்து, உண்மைக்காகவும், சத்தியத்திற்காகவும் பொய்யான உலக வீதியில் மூன்றாண்டுகள் முரண்டு ஓடினளோ, அந்த......வெறுத்த ... தைக் கைக்கொண்டு பொய்யைப் பகட்டான போர்வையாய்ப் போர்த்து. மெய்யான நடவடிக்கையில் இறங்கினாள். அன்று கண் ஜாடையைக் கண்டால் கதறி ஓடினாள். இன்று கண் ஜாடையால் கணக்கற்ற பணத்தைத் திரட்டுகிறாள். அந்தோ உலகமே! உன் நேர்மை இத்தனைதானா?

* * *

அந்த ஊரில் சுயம்பிரபா வந்து ஈரெட்டாண்டுகள் ஆகிவிட்டன. வரும்போது இயற்கைச் சோபை ஒன்றையே மூலதனமாய் எடுத்து வந்தாள். இன்று அந்த ஊரின் அழகு ராணி சுயம்பிரபாதேவி. மூன்றடுக்குச் சலவைக்கல் மாளிகை. எல்லா வேலைகளுக்கும் சிப்பந்திகள். அழகுக் குவியல் அவளையே உரித்துக்கொண்டு வந்திருக்கும் 'மிருணாளினி குமாரி' பதினான்கு வயது நிரம்பிய பாவை. தாயின் மறையும் யௌவனம்; பெண்ணின் துளிர்க்கு யௌவனம். ஒரே மேடைமேல் சந்தித்து த்வம்த்வ யுத்தம் செய்தன. பார்ப்பவர் கண்களைப் பளிச்சென்று பறித்தன. தாயை விரும்பிவரும் ரஸிகர்கள், மலர்ந்தும் மலராமலும் மனதை மயக்கும் மங்கையை விரும்பி, பந்தயக் குதிரைமேல் பணம் கட்டுவதைப்போல் கட்டத் தொடங்கினர். நிழலைக் காட்டியே விலை பேசி வலை வீசும் வித்தையில் தேறின சுயம்பிரபை கஷ்டமில்லாமல் கைநீட்டி நாட்களையோட்டினாள். குமாரி மிருணாளினி பதினைந்தாம் படியிலேறிப் பறக்கவிட்டாள் தன் சௌந்தர்யக்கொடியை. முகராத மலர். வண்டினங்கள் வந்து மொய்க்கக்கூடாத அரும்புப் பருவம். வித்தையின்மேல் சிரத்தை. விபரீத உலகப் போக்கை அறியாத அமாயிகை, மலராத மொட்டின்மேல் வண்டு வந்து வட்டமிட்டுக் கூவும்போது அதனருகிலிருந்த இலைகள் அசைந்து துள்ளின. சுயம்பிரபைக்கு இக்காட்சி சுறுக்கென்று தைத்தது. மார்பில் அழுத்திக் கொண்டிருந்த கையைத் தட்டென்று அருகில் போட்டாள். அவளருகில் படுக்கையில் கிடந்த சிதார் அவள் கைபட்டதும் அபச்ருதியை அங்கலாய்த்தது.

திடுக்கட்டுக் கண்களைத் திறந்தாள். அவள் மெய் சிலிர்த்தது. சுருதி கூட்டாத சிதார் அலறுவதைப்போல் மிருணாளினி அலறினாள்.........அதை நினைக்கக்கூட அவளால் முடியவில்லை. விளக்குகள் பட்டப் பகல் போல் எரிந்து கொண்டிருந்தன. ''தேவானே!'' என்று கூவியபடியே திருதிருவென்று நாற்புறமும் பார்த்துக்கொண்டெழுந்தாள். சிதாரின் அபஸ்வரம் அவ்வறையில் நிறைந்து, எதிரொலித்துச் சுயம்பிரபையை நடுங்கச் செய்தது.

''ஏம்மா! குழந்தையும் ஒண்ணும் வேண்டாம்னு படுத்திருக்குது. நீங்களும் படுத்திருக்கீங்க. ஆக்கின சோறு ஆறி கிடக்குது. காச்சின பாலு.........''

''உன் பாலும் வேண்டாம். ஒண்ணும் வேண்டாம். குழந்தை என்ன பண்ணறான் பாரு?''

ரெக்ஸோனா

சரும அழகை உண்டாக்குகிறது

...சரும சுகத்தை பாதுகாப்பதன் மூலம்

ஆம், ஏனென்றால் ரெக்ஸோனா சுறுசுறுப்பாய் உற்சாகமூட்டிச் சரும சுகத்தைப் பாதுகாக்கிறது — சரும சுகத்திற்குச் சரும சௌந்தரியமே உண்மையான அடிப்படை — சரும அழகைக் கொடுக்கும் பாத்தியதை தனக்கேயுண்டென்று ரெக்ஸோனா உண்மையாகச் சொல்லக்கூடும்.

இதை எப்படி ரெக்ஸோனா செய்கிறது? சரும வியாதியைப் போக்கும் கிருமி நாசினியாகிய *கேடில் என்னும் மருந்து அதிற் சேர்ந்திருப்பதால் அது அவ்வாறு செய்கிறது. சரும உபத்திரவங்களும், சரும மாசுமறுக்களும் அடிக்கடி அதிகமாய் உண்டாகும் இடங்களுக்கும் — சருமத்தின் ஒவ்வொரு அடிப்பாகத்திற்கும் — சுகமளித்துச் சுத்தம்செய்கிற கேடில் என்னும் மருந்தை ரெக்ஸோனாவின் விரைவில் உண்டாகும் நுரை கொண்டுபோய்ச் சேர்க்கும் சக்திவாய்ந்தது.

ரெக்ஸோனா, குடும்ப சோப்

அழகான, பசுமைவாய்ந்த, விரைவில் நுரையைத் தரும் இந்த சிறந்த ஒப்பற்ற சோப்பின் குணங்களைக் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் புகழ்ந்து கூறுவார்கள். . . சரும அழகைத்தர அது அதிக சிறந்த சக்திவாய்ந்திருப்பதால் ஸ்திரீகள். . . ஆரோக்யமான சருமத்தின் அவசியத்தை எல்லா ஜனங்களும் அறிந்திருப்பதால் மனிதர்கள் . . . குழந்தைகளுக்கு இதைக் காட்டிலும் சிறந்த பாதுகாப்புடைய சோப் வேறு இல்லை மருந்திடப்பட்ட ரெக்ஸோனாவின் நுரை உடலெரிச்சலைச் சாந்தப்படுத்துகிறது. ரணங்களை ஆற்றிக் காப்பாற்றுகிறது — குழந்தையின் சருமத்தைக் குளிர்ச்சியாகவும், சுகமுடையதாகவும் செய்கிறது சரும சுகம் நிச்சயமாக ஏற்படக் குடும்பம் முழுவதும் ரெக்ஸோனாவை ஒழுங்காய் உபயோகிக்க வேண்டும்.

★ரெக்ஸோனாவிலுள்ள கேடில் கிருமி நாசினியாகிய ஒரு ஒப்பற்ற கலப்பு மருந்து. சரும சுகத்திற்கு அதிக சக்திவாய்ந்தது; குணமளித்துப் போஷிக்கும் தைலம் சேர்ந்தது. சுகத்தையளித்துக் காப்பாற்றும் தன்மையுள்ள கேடில் யாவராலும் மதிக்கப்பட்டு, விஞ்ஞானிகளால் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

ரெக்ஸோனா ஆயின்ட்மென்டை உபயோகியுங்கள். வெட்டுக் காயங்கள், புண்கள், கட்டிகள், கரப்பான் ரணங்கள், முகப்பருக்கள், அரிப்புகள், சணைப்புகள், கடிகள், மச்ச மறுக்கள் முதலிய எல்லா சரும வியாதிகளுக்கும் ரெக்ஸோனா ஆயின்ட்மென்டை உபயோகியுங்கள்.

R.P. 29-23-40 TM

REXONA PROPRIETARY LIMITED

"இப்பத்தானே? கண்ணை மூடி, படுத்திருக்குது"

"இப்பத்தானா? இத்தனை நேரம் என்ன பண்ணிக்கொண்டிருந்தாள்?"

"தலைநோவாம். படுக்கையில் நிலைகொள்ளாமெ உச்சு அச்சுன்னு புரண்டுகொண்டேயிருந்தது. கண்கள் கோவைப் பழம் போல் செவேன்னு சிவந்திருக்குது. இம்மாம் நேரம் நான் கிட்டவே உக்காந்திருந்தேன். இப்பத்தான் கண்ணை மூடிச்சு. எளுந்து உங்களை பார்க்க வந்தேன். வாத்தியமும் வாசிக்கிறது கேட்டது. நீங்களும் கூப்பிட்டீங்க"

"சரி, நீ போய் சாப்பிடு......" என்று யோசனையிலாழ்ந்தாள். 'மலரக் காத்திருக்கும் மலரை இதற்குள் ஏன் இப்படி வட்டமிட்டுப் பாழ்படுத்தப் பார்க்கின்றனவோ வண்டினங்கள்?" என்று சொல்லிக்கொண்டே தேவானை அங்குப் பளிங்குத் தொட்டியிலிருக்கும் அல்லி மொட்டுக்களையும் மண் தொட்டிகளில் மலராமலிருக்கும் மொக்குகளைச் சுற்றி வட்டமிடும் வண்டுகளையும் பார்த்துச் சொல்லிக்கொண்டே சென்றாள். சுயம்பிரபா திடுக்கிட்டுத் தேவானையை நிமிர்ந்து பார்த்தாள். அவள் சுயம்பிரபையைத் திரும்பிப் பாராமல் சென்றாள். சுயம்பிரபைக்குத் தோன்றியது. "ஆம், மலராத மொட்டைச்சுற்றி ஏன் வட்டமிடவேண்டும்? அதை விரிப்பவர்கள் யார்? அந்த மதம்கொண்ட வண்டினங்களல்லவா சொல்லவேண்டும்". அதற்குள் யாரோ மாடிப்படிகளில் ஏறிவரும் சப்தம் கேட்டது. அவள் நடுங்கியபடி திரும்பிப் பார்த்தாள். அவள் மனம் ஏனோ சொல்லறியாப் பயத்தால் நடுங்கியது. "பிரபா" என்றழைத்துக்கொண்டே அடுத்தவீட்டு அபிராமசுந்தரி அவ்விடம் வந்தாள். அவள் பயந்த முகத்தில் அசட்டுப் புன்னகையை வரவழைத்துக்கொண்டு "நீயா வா! உன் வீட்டுக்கு வரவேண்டுமென்றுதான் இருந்தேன். என்னமோ சங்கடம் எழுந்திருக்க முடியவில்லை. நாளைக்கு வருகிறேன்" என்றாள். உண்மையாகவே பிரபாவின் முகம் பார்க்கப் பயங்கரமாயிருந்ததால் அபிராமி வந்தவழியைப் பார்த்துக்கொண்டு சென்றாள். தாயும் மகளும் உள்ளம்வேக உருண்டுகொண்டிருப்பதைப் பார்த்து உதய சூரியனும் வெளிவந்தான்.

* * *

விடிந்தது. விதிதேவனின் விவரமற்ற தண்டனையை நினைத்துத் துக்கத்துடன் பொருமிக்கொண்டே எழுந்தாள் தாய். ஏழு, எட்டு ஒன்பது, பத்தும் அடித்துவிட்டது மணி. மிருணாலினி எழுந்திருக்கவில்லை. சுயம்பிரபா "மகள் எழுந்துவிட்டாளா?" என்று அடிக்கொருமுறை அவள் அறைவாயிலில் போய் எட்டிப் பார்த்தாள். இரவு முழுதும் அழுது அழுது சோர்ந்து, விடியும்போது கண்களை மூடினாள் மிருணா. அவள் மனக் களைப்பும், சரீரக் களைப்பும்சேர்ந்து அவளை நல்ல தூக்கத்தில் ஆழ்த்தியது.

தாயோ எனில், அன்று தன் உண்மையை அறிவிக்க உள்ளக்கிடக்கையை மறைத்துக்கொண்டு, உவப்புடன் பாரதவீரன் கர்ணன் முன் கையேந்தி நின்று, அவன் சக்தியை, வீரத்தை, தீரத்தை சூரத்தனத்தை, ஒரு முறைக்குமேல் தோற்றுவிக்கக் கூடாதென்று, இரந்துவேண்டிய குந்தியின் நிலையில் சுயம்பிரபா இருந்தாள். கடவுள் எத்தண்டனையை வேண்டுமானாலும் விதிக்கலாம். தன் குழந்தையிடமே......உலகை மறைத்துவிட்டோமென்று நினைத்து, மறைத்து வைத்திருக்கும் ரகசியத்தைச் சொல்லவேண்டுமென்றால் அதைவிடக் கடின தண்டனையுமுண்டா? தாயும் மகளும் மனப்போருடன் மல்(ல)யுத்தம் செய்துகொண்டிருக்க மங்கள நாயகனான ஆதவனும் மேற்குமுகத்தைப் பார்க்க ஓடினான்.

மிருணாலினி தன் அறையில் தலை வெடிக்கும்படியான யோசனையிலாழ்ந்து கலங்கிய மனதுடன் கட்டிலில் சாய்ந்திருந்தாள். சுயம்பிரபா அதிவாஞ்சையுடன் அவளருகிலமர்ந்து "மிருணா! கொஞ்சம் நான் சொல்வதைக் காதுகொடுத்துக் கேளம்மா! எத்தனை படித்தாலும்...இந்தப் பாழாய்ப்போன உலகில் பெண்களை மானத்துடன் வாழ..."

"அம்மா, என்னபேச்சு அது? மானத்துடன்...வாழ்ந்து மானத்திற்காகப் போரிட்டு ...மானமாய் மரணமடைந்த மங்கையர் திலகங்கள் பிறந்த மஹா தியாகபூமியில் பிறந்து வளர்ந்த உன் வாயிலா இம்மாதிரி பேச்சுக்கள்?"

"என் அன்பு மிருணா! உனக்கு உலகம் எப்படி இருக்கிறதென்று ... உன்மனதி ... ஊம்... உனக்குத்தெரியாது"

"ஏன் தெரியாதம்மா! உலகம் உருண்டையாய்த்தானிருக்கிறது. திடீரென்று

புரண்டு உருண்டுவிடுகிறது" என்றாள் எரிச்சலுடன்.

"மிருணா! ஏடாகோடியாய்ப் பேசாதையேன்: என் நிலையைச் சற்றுக்கேள்" என்றாள் பரிதாபமாய்.

"என்ன கேட்கவேண்டும் சொல்?"

"இன்றிரவு......தயாராம்......வருகிறார்... ...அவருக்கு உன் பாட்டைக் கேட்கவேண்டுமாம்......" என்று சொல்லும்போதே "பிரபா!" என்று அவன் கீச்சுக்குரலுடன் அழைத்துக்கொண்டே அவ்விடம் வந்துவிட்டான். மிருணாவின் மனதில் முதல் நாளைய சம்பவமெல்லாம் அலைகள் பொங்கி மடிந்து வீழ்வதுபோல் தடால் தடாலென்று எழும்பிச்சாய்ந்தன. கட்டிலில் சாய்ந்திருந்தவள் சட்டென்றெழுந்து கீழே குதித்துக் கட்டிலின் கால்களில் சாய்ந்து நின்றுகொண்டாள். அவள் மூளை மின்சார விசையைப்போல் சுற்றத் தலைப்பட்டது. தயாராம் பிரபாவின் முகத்தைப் பார்த்தான் கொடுக்கல் வாங்கல் விளங்க. பிரபா தன் அசகாய நிலையைத் தோற்றுவித்து, நிர்மலமாய் மகளைப்பார்த்தாள். அவள் தன்யோசனை மிகுந்த பார்வையைத் தயாராம்பால்ஓடவிட்டாள் தாக்ஷிண்யமற்று. அங்கிருந்த மூவரும் மூன்று உயிரோவியங்களோ என்னும்படி மௌனமாய்க் கண்களை மாத்திரம் சுழற்றிக்கொண்டிருந்தனர். அந்த ஆழ்ந்த கம்பீரமான மௌனத்தைச் சுயம்பிரபா கலைத்தாள்.

"மிருணா! வீணையை எடுத்து வாசியம்மா" என்று கெஞ்சிய குரலில் தன் முழுவேண்டுகோளையும் தெரிவித்துக் கூறினாள். அவள் தாயைப் பார்த்தாள். அவள் கண்கள் நீர் நிரம்பிப் பயத்தால் துடித்துக்கொண்டிருந்தன.

"தேவானே!" என்றாள். மகள்புறம் திரும்பி "மிருணா;" எனறாள் பரிதாபமாய். வீணையுடன் தேவானைவந்தாள். அதை வாங்கிக்கொண்டு அப்படியே அமர்ந்தாள் மிருணா. மெள்ள வீணையை மீட்டினாள். கேதார கௌளராகம். அந்த ராகத்தில் தயாராம் ஆழ்ந்தானோ இல்லையோ அறியோம். ராகம் என்னவோ அவ்வறையைச் சுற்றி எதிரொலிக்க ஆரம்பித்தது. மெள்ள அவ்விடத்தைவிட்டு நகர்ந்தாள் சுயம்பிரபா. எங்கிருந்தோ மேஜையின்மேல் வாசனை வத்திகள் புகைகிளம்பி, நாதத்துடன் சேர்ந்தது. அவள் தன் வலிமை......அகங்காரம்......துக்கம்.......வெறுப்பு.........இத்தனையையும் தந்தியில் மீட்டினாள். அந்த இந்திரஜாலத்தில் தயாராம் வியப்புடன் லயித்தாலும், அவ்வப்பொழுது 'ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தின்மேல் கண்' என்றபடி மிருணாவைத் திருப்தியற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான். ஒருவிதமாய்ப் பாட்டும் முடிந்தது. அவள் கையும் ஓய்ந்தது. நெற்றியில் துளிக்கும் வியர்வையைத் துடைத்துக்கொண்டே அவன் முகத்தைப் பரிதாபமாய்ப் பார்த்தாள்.

"மிருணா!" என்று பல்லை இளித்தபடி அவளருகில்போய் அமர்ந்தான்.

அவள் நகர்ந்துகொண்டே "என்ன?" என்பதைப்போல் பார்வையைக் கேள்வியில் திருப்பினாள்.

"உனக்காக எத்தனை நாள் காத்திருப்பேன்?" என்றான் ஒளி மங்கிய ஓட்டைப் பற்களைக் காட்டி.

"எனக்காக ஏன் காத்திருக்கிறீர்கள்?" என்றாள் எரிந்து விழுந்து.

ஏன் காத்திருக்கிறானோ சொல்ல வாய் வரவில்லை. எதற்காகக் காத்திருக்கிறான்? என்னவென்று சொல்வது? சற்றுநேரம் திகைப்புடன் மலைத்து அந்த அழகிய சிறுமியை உற்றுப் பார்த்தான். மில்டனையும், பைரனையும், நெட்டுருப்போட்டு ஆங்கிலத்தில் அக்கிரஸ்தானம் பெற்ற அந்தக் குழந்தைப் பெண் அவன் கண்ணோட்டத்தின் அர்த்தத்தைக் கிரகித்தால்தானே! அது ஒரு மேத மாடிகல் தியரியோ. அல்லது ஹைபர் போலவோ என்று ஆச்சரியத்துடன் பார்த்தாள். அவள் கணக்குமூளை திரங்களை நாடி வீரமுடன் சென்றது.

"எதற்காகக் காத்திருக்கிறீர்கள்?"

திருடவந்தவனைக் கைப்பிடியாய்ப் பிடித்து எதைத் திருடவந்தாய்? என்று கேட்டால் எப்படி விழித்துத் தடமாடுவானோ அப்படித் தடமாடிக்கொண்டே "உங்கம்மா என்னை அநியாயம் செய்கிறாள்" என்றான்.

"எங்கம்மா அநியாயம் செய்கிறாளா? நான் தவறுசெய்தால் எங்கம்மாளிடம் சொல்லித் தண்டிக்கலாம். எங்கம்மா தவறு செய்யும்படி என்ன வந்தது? அப்படியொன்றும் செய்யமாட்டாளே; அவள் நியாயம் உங்களுக்கு அநியாயமாயிருக்கிறதோ? என்றாள். அவள் மனம் சொல்லியது "மிருணா! அவன் எங்களை அநியாயம் செய்கிறானோ? நாங்கள் இவனை..." என்று. உதட்டைக் கடித்து யோசனைசெய்து கொண்டே,

"தயாராம்! நாளை இரவு வாருங்கள். உங்களுக்குத் திருப்தியான விடையளிக்கிறேன்" என்று "தேவானை!" என்றழைத்தபடியே வீணையைக் கீழே வைத்து, அழுகிய பிணத்தை அசட்டையுடன் பார்த்துச் செல்லும் மிருகராஜனைப்போல் சென்றுள். அந்தப் பத்தரைமாற்றுப் பசும் கிளியை ஆவலிரக் கண்களை அகலத் திறந்து பார்த்தான். அவள் முகம் மிகவும் சோர்ந்திருந்தது. கூண்டிலடைபட்ட பறவை எங்குப் போகப் போகிறதென்று நினைத்தபடி பெருமிதத்துடன் தலையை ஓர் ஆட்டம் ஆட்டிச் சென்றுன்.

*　　　*　　　*

அவன் சென்றதும் தாயின் அருகில் ஓடி 'ஓ' வென்றலறி அழுதாள். "மிருணு! மிருணு!! மிருணு!!! என்று தாயும் கண்ணீர் வடித்தாள். அவள் நிர்மாணித்த யோசனைக் கட்டிடங்களில் அவள் தலைகீழாகப் போய் விட்டாள். தன் குழந்தையின் துக்கத்திற்குத் தானே காரணமென்றறிந்த எந்தத் தாயின் உள்ளம்தான் குமுருது. வாழ்க்கை முழுவதும் துக்கமடைந்த தனக்கு ஆனந்தமில்லாவிடினும் நஷ்டமில்லை. ஆனுல் சிறகை அடித்துக்கொண்டு பறக்கும் தும்பியைப்போன்ற தன் மகளுக்கு துக்கத்தையளிப்பது எத்தனை கொடியது? தன் குழந்தைக்குச் சுகமளிப்பதற்காகத்தானே தான் இத்தனை கஷ்டப்படுவது? தன் முயற்சி முழுவதும் அவளுக்குத் துக்கத்தையளித்தால் தான் செய்யவேண்டியதென்ன? மெள்ளப் பெண்ணின் நீர்வடியும் கன்னங்களை நடுங்கிய கைகளுடன் வருடினுள்.

"அம்மா! நம் வீட்டின்மேல்......தலைமேல் ......வீழ்ந்திருக்கும்......"

"மிருணு! புன்முறுவல் பூத்து குலுங்கும் உன் முகத்தில் கண்ணீர் வடியும்படி செய்த என் இதயம் இரும்பு இதயமா? உன் சுகத்தைத்தானே நான் எப்பொழுதும் விரும்புவது? உன் சுகத்திற்கு நான் எப்பொழுதும் குறுக்காய் வரமாட்டேன், அழுகிருயா கண்மணி!" என்று ஒரு சூடான முத்தமளித்தாள். அவளிடம் குளிர்ந்த முத்தமேது? வேகும் உள்ளம், துக்கத்தால் துடிக்கும் உதடு, குமுறிக் குமுறி விடுவதால் சூடான மூச்சு. அந்தக் கனல் நிறைந்த முத்தத்தில் பரிதாபத்தால் எரிந்து வேகும் தாயின் உள்ளம் ஒளிந்திருப்பதை அவள் அறிந்தாளோ இல்லையோ? இவள் தாயின் அன்பு, கூண்டாக அவளைப் பந்தித்துப் பிணைந்த, அவளை ...அவளுக்கு இறகு அளித்து 'விர்'ரென்று பறக்க இடமளித்தது.

செயற்கையில் நிரம்பி, கள்ளமும், கபடமும் நிறைந்த இந்த நாகரிக உலகம் பெரிய கூண்டாகத் தோன்றியது அந்தச் சிறுமிக்கு. நடந்தவற்றை நினைத்து நினைத்து வேகும் அவளுக்கு என்ன தெரியும்? குலுங்கிக் குலுங்கி அழத்தான் தெரியும். அந்த இளம் உள்ளம் எந்த எண்ணங்களுடன், எவ்வித சிந்தனைகளுடன் வேதனையடைகிறதோ? திறந்த வழியில் பரந்த உலகில்...தேம்பித் தேம்பி அழுதாள். தாயின் மனதில். "வெயிலையும், காற்றையும், ஏன் பின் தொடர்கிருய்? பின்தொடர்ந்து முடியுமா? செய்த பாபத்திற்கு ஜன்மம் முழுவதும் துக்கத்துடன் குறுகிப் போகவேண்டியதுதான் உனக்குரிய தண்டனை. உன்னைப்போன்ற பாபியின்மேல் விதி யென்றும் தயையை எண்ணுது" என்று அவள் மனமே அவளைத் தூற்றிற்று. தாயும் மகளும் மௌனமாய்க் கண்ணீர் வடித்தனர். சிறிது நேரத்தில் எழுந்தாள் பெண். வெறிபிடித்தவள்போல் வீட்டின் ஒவ்வோர் இடத்தையும் கூர்ந்து பார்த்தாள். பார்த்தபின் இடியும், மின்னலும், மழையும், நின்ற நிர்மல ஆகாயம் போல் அவள் மனது பிரகாசமாயிருந்தது. அமைதியாய்ப் பெட்டி பேழைகளையெல்லாம் எடுத்துக் கட்டினுள். மணி மூன்று அடித்துவிட்டது. இடிந்த மண் சுவர் போல் சாய்ந்துகிடத்த தாயருகில் வந்து "அம்மா! எழுந்திரு!" என்றுள். தாய் வாய் திறவாமல் அவளைப் பார்த்தாள் அபராதினியைப்போல்.

"வீட்டைத் திறந்து வைத்துவிட்டுப் போவோம். நீ அவனிடம் பெற்ற கடனுக்காக...பெற்ற பெண்ணை ... வேண்டாம் ... அப்படி வயிற்றைக் கழுவவேண்டாம். நீ வயிற்றைக் கழுவ ... வாழ்க்கையை விலை பேசினுய். நான் உழைப்பிற்கு விலைபேசி உன்னை ரக்ஷிக்கிறேன். புறப்படு" என்றுள்.

சுயம்பிரபைக்கு ஒன்றும் தோன்றவில்லை. "மிருணு, இதேவயதில் உலகத்தில் நேர்மையுடன் வாழப் போராடி இக்கதிக்கு வந்தேன்..."

"அம்மா! இதேவயதில் வாழ்வதற்காக எல்லாவற்றையும் துறந்து இந்தப் பாப பஞ்சரத்தில் அடைபட்டு......வாழ்க்கையை ஆனந்தமாய் நடத்தினீர்கள். வேண்டாம் இந்தப் பிழைப்பு. உங்களை ரக்ஷிக்க நான் இவ்வூரைத் துறக்கிறேன். முடிவில்லாப் பாபக் கடலுக்குக் கரையை ஏற்படுத்துவோம். அக்கரையில் நம் பாபத்தையெல்லாம் பறக்கடிக்கும் சுகம் இருக்கிறது. என்றைக்காகிலும் அக்கரையை அணுகுவோம்" என்றுள் கம்பீரமாய்.

குலுங்கிக்குலுங்கி அழும் சுயம்பிரபையின் மனதில்கூட அந்த ஆசை மெல்லிய திரையிட்டுக் கண்ணுமூச்சி ஆடிக்கொண்டுதான் இருந்ததுபோலும்! அப்பேர்ப்பட்ட ஆசையில்லாவிடில் துக்கப்பட்டுக்கொண்டே பிழைக்க யாராலாகிலும் முடியுமா?

"கண்ணே! உன் இஷ்டத்திற்கு என்றும் குறுக்காய் நிற்கமாட்டேன். ஒருவரையும் குறுக்கிடவிடமாட்டேன். உன் தாயானதற்கு உன் சுகமே எனக்கிவ்வுலகில் வேண்டியது" என்ருள் நாத்தழுதழுக்க சுயம்பிரபாதேவி.

"வண்டி வந்துவிட்டது, புறப்படுங்கள். இந்தப் பாப வாழ்க்கையிலிருந்து "விடுதலை" பெறுவோம்" என்று தாயின் கைகளைப் பற்றிக்கொண்டு வீட்டைவிட்டிறங்கி வண்டியில் ஏறினுள்.

வயல் வரப்பில் குறுக்காய் வீழ்ந்து பற்பல விதமாய் ஓடும் அந்த அதிகாலை புகைத்தொடரில், அருகில் மெள்ள மெள்ள, தாளம் போட்டுக்கொண்டோடும் கிருஷ்ணை அவள் மேல் விந்தை வெளிச்சங்களை வீசிக்கொண்டிருந்தது. ஆகாயம் முழுவதும் சாந்தமாக இருக்கிறது. மேகக்கூட்டங்கள் ரத்தத்தால் நனைந்து வீழ்ச்சியடைந்த வீரனைப்போல் அசையாமல் வீழ்ந்துகிடந்தன. பயங்கரமானயுத்தம் நடந்தபின் நிலவும் அமைதி, கிழக்கு மூலையில் தென்படுகிறது, கடந்துபோன காலத்திலிருந்து கிழித்துக்கொண்டு, வந்த எண்ண அம்புகளைப்போல் 'விடுதலை, பெற்ற அவர்களைக் குளிர்காற்று நடுநடுங்கச் செய்கிறது.

லாக்ஸாமிண்ட்

இனிய தித்திக்கும் சுகபேதி பெப்பர்மிண்ட் மாத்திரைகள்

தயாரிப்பவர்கள்:- ஸெல்டோனு பார்மகல்ஸ்

ஏஜெண்டுகள்:— தாதா & கம்பெனி, சென்னை.

எங்கும் கிடைக்கும்

கனவுகள்

எஸ். கிருஷ்ணமூர்த்தி

1 —

அது ஓர் முன்நிலவுநாள். வெண்மதியின் குளிர்ந்த கிரணங்கள் சாக்கிய தேசத்தின் தலைநகரான கபிலவஸ்துவின் பொன் நிறத் தூபிகளுக்கு முலாம் பூசின.

மகாராஜா சுத்தோதனரும் ராணி மாயாதேவியும் அப்பொழுது அரண்மனை அந்தப்புரத்தில் இன்பக் கேளிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். ராணிக்கு ஏதோ கோபம். ஆனால் அது வார்த்தைகளாக வெளிவரவில்லை. அரசர் மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தார்.

''மாயா, இன்று இமாலயத்திலிருந்து...''

''யாராவது அரசர்கள் கப்பங்கட்ட வந்தார்களாக்கும்......''

'' உனக்கு என்ன கோபம் ''

''ஆமாம், இமாலயத்தின் எழில்வாய்ந்த பிரதேசங்களைக் காணவேண்டுமென்று எவ்வளவு தடவை தங்களிடம் கூறிவிட்டேன், எப்பொழுதுதான் அழைத்துக்கொண்டு போகப்போகிறீர்கள். அரசவேலைகள் ஓய்ந்தபின்தானா? அப்படியானால் அலை ஓய்ந்தபின் சமுத்திரஸ்நானம் செய்தாற்போல் தான்!''

''மாயா அதைக்கூறத்தான் வாயெடுத்தேன், அதற்குள்ளாக வார்த்தைகளைக் கொட்டிவிட்டாயே ... அடுத்த மாத ஆரம்பத்தில் கட்டாயம் உன்னை இமயமலைக்கு அழைத்துச் செல்கிறேன். சரிதானா ... இங்கே என்னைப்பார்...''

இதேசமயத்தில் அந்தப்புரத்திற்குள் ஓர் இளந்தென்றல் கோபமாகப் புகுந்தது. காதலன் வாராமையால் தவித்துக்கொண்டிருந்துவிட்டு அவனைக் கண்டதும் கோபித்துப் பிணங்கும் காதலியைப்போல் அங்கிருந்த குத்து விளக்கின் ஒளி மருண்டது. அடுத்த வினாடி ஒன்றுபட்ட காதலர்கள் இதயம்போல் காற்றினிலே கலந்தது. பரமாத்மாவுடன் ஜீவாத்மா ஜோதியாகி மறைவதுபோல் என்றுகூடச் சொல்லலாம்.

— 2 —

இரவு நடுநிசி இருக்கும். கபில வஸ்து இருட் கடலில் மூழ்கியிருந்தது. சுத்தோதனர் காற்றிற்காக வெளித் தாழ்வாரத்தில் உலவிக்கொண்டிருந்தார். மாயாதேவி ஆழ்ந்த நித்திரையிலிருந்தாள்.

சுத்தோதனர் ஒளிப் பிழம்புகளான வானத்துத்தாரகைகளை எண்ணுவார்போல் ஆகாயத்தை நோக்கினார்.

அவர் உள்ளம் இமயமலையையும் அன்று தான் அங்கிருந்து தம்மைக் காணவந்த அந்த ஆறு யோகிகளைப் பற்றியும் சிந்தித்துக்கொண்டிருந்தது.

''அவர்களோடு பேசிய முழு விபரத்தையும் மாயாவிடம் சொல்லவில்லையே. சொல்ல ஆரம்பித்தபொழுதே பேச்சு வேறு விஷயமாகவல்லவா திரும்பிவிட்டது. இப்பொழுதே மாயாவை எழுப்பிச் சொல்வோமா?''

வானத்திலிருந்த பார்வையைத் திருப்பி உள்ளே மகாராணி படுத்திருக்கும் பக்கம் செலுத்தினார் சுத்தோதனர். அறையை இருள் கவிந்திருந்தது. வெளி விளக்கின் உதவியால் அந்த அறையிலிருந்த விளக்கை ஏற்றினார். பிறகு மாயாவிடம் சொல்லலாம் என்று தமக்குத் தாமே கூறிக்கொண்டு படுக்கையில் படுத்தார்.

படுத்தாரே ஒழிய அவருக்கு உறக்கம் பிடிக்கவில்லை. மறுநாட் காலையையே அவர் மனது எதிர்பார்த்துக்கொண்டிருந்தது.

— 3 —

அன்று அத்தாணி மண்டபத்தில் அரசர் கொலு வீற்றிருக்கும்பொழுது ''இமயமலையிலிருந்து தங்களைக் காண ஆறு யோகியர்கள் வந்திருக்கிறார்கள்'' எனறு வாயிற் காப்போன் வந்து கூறினான்.

அரசர் விரைந்து சென்று அவர்களை வணங்கி அரச சபைக்கு அழைத்துவந்தார்.

யோகசாதனத்தால் அந்த ஞானிகளின் உடலமைப்புத் துவளும் மின்னல் போன்றிருந்தது. முகத்தின் ஒளி! பதினாயிரம் சந்திரர்களை யோகாக்கினியில் உருக்கி ஆறு முகங்களாகச் செய்ததோ என்ற ஐயத்தை எழுப்பியது. சபையிலிருந்த யாவரும்பயம் நிறைந்த மரியாதையுடன் கை கூப்பினர்.

அரசர் அவர்களுக்கு ஆசனங்கள் அளித்து, அமரச்செய்து, தம் தலை நகரை நோக்கி வந்ததின் காரணத்தை வினவினார்.

அந்த அறுவரில் ஒருவர் கூறினார்:

"உலகத்தில் துன்பத்திற்கெல்லாம் ஆதி காரணம் என்னவென்று கண்டுபிடிக்க வேண்டும் என்ற ஆசைதான் நாங்கள் நாடு தோறும் சுற்றிவருவதற்குக் காரணம். அங்கங்கே சத்தியத்தின் பெருமையையும் பிரசாரம் செய்துவருகிறோம். ஜோதிடக் கலையிலும் கனவின் பலாபலன்களை உரைப்பதிலும் எங்களுக்குக் கொஞ்சம் பரிச்சயமுண்டு. ஒரு நாள் ஏதோ ஒரு குரல், சாக்கிய தேசத்தில் உங்கள் தலைவர் தோன்றப் போகிறார். அவரை எதிர்கொண்டழைக்கச் செல்லுங்கள், என்று ஆக்ஞாபித்தது. நாடுதோறும் சுற்றிக்கொண்டு இந்த நகரை அடைந்தோம்."

அரசர் அகமகிழ்ந்து, தங்கள் தலைவரை என் நாடு பெற்றெடுக்கப்போகின்றது என்று கேட்க என் மனம் ஆனந்தத்தால் பொங்குகின்றது. "யோகதேவர்களே, என் மனதில் வெகு நாளாக உறுத்துகின்ற கவலை ஒன்றிருக்கின்றது. சாதாரணமாய் அரசர்களுக்கெல்லாம் ஏற்படுகின்ற கவலைதான்! வெகுகாலமாக ஆண்டுவந்த இந்தப் பரந்த நாட்டை ஆள்வதற்கு ஏற்ற புத்திரனைப் பெற்றேன் இல்லை. பூர்வ ஜன்ம வினையின் விளைவென்றால் அதற்குத் தகுந்த சாந்திசெய்ய வேண்டுமென்பது என் அவா. என் ஜாதகத்தையும் ராணி மாயாதேவியின் ஜாதகத்தையும் கண்டு தோஷ பரிகாரங்களைத் தெரிவிக்கவேண்டும்" என்று வேண்டினார்.

"மனிதர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமான கவலை. அரசன் நாடாளப் புத்திரன் வேண்டுகிறான். யோகியர் குருவை நாடி அலைகிறார்கள்," என்று கூறிக்கொண்டே முதலில் பேசிய அந்த யோகி மற்றவர்களைப் புன் சிரிப்புடன் நோக்கினார். பிறகு அரசரை நோக்கி "நாளைக்குப் பார்த்துக்கொள்ளலாமே" என்றார்.

அரசன் இணங்கி அவர்களை ஒரு தனி இல்லத்திற்கு அனுப்பினான்.

— 4 —

மறுபடியும் அரசன் புரண்டு படுத்தான். இமைகளைத் தூக்கம் மிதிக்கவில்லை.

"அந்த ஞானிகள் இமயத்திலிருந்து வந்ததற்கும் மாயாதேவி இமயத்தின் இயற்கைக் காட்சிகளைக் காணவேண்டுமென்பதற்கும் என்ன ஒற்றுமை! நாளையதினம் அவர்கள் அம்மலை அரசின் பெருமையை உரைக்கும் பொழுது அங்கே சீக்கிரம் செல்லவேண்டுமென்று எப்படித் துடிப்பாள்! அப்பொழுது அவள் அழகு..."

திடீரென்று எழுந்த மாயாவின் முனகல் சப்தம் அரசரின் சிந்தனைப் பிரவாகத்தைத் தேக்கியது.

"மாயா, ஏன் முனுகுகின்றாய், ஏதாவது கனவு கண்டாயா" என்று பரிவுடன் கேட்டார் அரசர்.

"நான் எங்கிருக்கிறேன், அரசே, என் அருகில் வாருங்கள்"

"நான் உன் அருகில்தானே இருக்கிறேன்; எழுந்து உட்கார்" என்று கூறிக்கொண்டே அவளை அணைத்து உட்காரவைத்தார்.

"கொஞ்சம் தண்ணீர் தரட்டுமா, உடம்பை என்ன செய்கிறது, ஏன் இப்படி மூச்சுவிடுகிறாய்?"

மாயாதேவி ஆயாசத்துடன் "ஏதோ கனவு" என்றாள்.

"என்ன கனவு, ஞாபகமிருக்கிறதா?" என்றார் அரசர் புன்சிரிப்புடன்.

மாயாதேவி சொன்னாள்: "ஆறுமுகங்கள் கொண்ட யானை ஒன்று வானத்திலிருந்து மெதுவாக இறங்கிவந்தது. அதைச்சுற்றி எத்தனை விதவிதமான வர்ண நக்ஷத்திரங்கள்! ஆனால் அவைகள் கொஞ்சதூரம் வந்துவிட்டு நின்றுபோயின. ஆனால் அந்த யானை மாத்திரம் என்னையே நோக்கி வந்து சின்னதாகி என் வயிற்றிற்குள் புகுந்துகொண்டுவிட்டது. அந்த யானைதான் சின்னதாக ஆனபொழுது எவ்வளவு அழகாக இருந்தது! அதன்மீது என்ன ஒளி!"

அரசர் இடி இடியென்று சிரித்துக்கொண்டே 'பிறகு சற்று நேரம் கழித்து வயிற்றிற்குள்ளிருந்து வெளியே வந்து உன்னைத் துரத்தியதாக்கும், நீ முனகிக்கொண்டே ஓடினாயா" என்றார்.

ராணி இடைமறித்து "உங்களுக்கு எப்பொழுதுமே பரிகாசம்தான்" என்று பிணங்கினாள்.

"சரி, மேலே கனவு என்னவாயிற்று? சொல்" என்றார் அரசர்.

"அதற்குள் தான் தாங்கள் என்னை எழுப்பிவிட்டீர்களே".

அரசர் மாயாதேவியிடம் அன்று இமயத்திலிருந்து வந்த துறவிகளைப்பற்றிப் பிரஸ்தாபித்தார். "இந்தக் கனவின் பலனையும் நாளைய தினம் அவர்களிடமிருந்து கேட்டுத் தெரிந்துகொள்ளலாம், தூங்கு" என்றார்.

ராணி படுத்துக்கொண்டாள். மறுபடியும் நிசப்தம் நிலவியது.

அந் நள்ளிரவின் அமைதியைக் கலைத்துக் கொண்டு, நித்யத்வத்தை நாடும் துறவி உலக பந்தங்களிலிருந்து தன்னை விடுவிக்க வேண்டுமென்று கடவுளை நோக்கிக் கதறுவதுபோல் பசி பொறுக்காமல் தாய்ப் பாலுக்காக அழும் குழந்தையின், ஒலி யொன்று கேட்டது.

''அரசே, அது என்ன சப்தம்'' என்று மாயாதேவி அரசனை நோக்கிக் கேட்டாள்.

''ஏதோ குழந்தை அழுகின்றது, தூக்கத்திற்கு இடைஞ்சலாக இருக்கின்றதா, காவலாளியைப் போய்ப் பார்க்கச் சொல்கிறேன்'' என்று எழுந்தார் சுத்தோதனர்.

''இல்லை. போகவேண்டாம், குழந்தையின் அழுகை ஒலியைக் கேட்கவேண்டுமென்று எவ்வளவோபேர் தவம் கிடக்கிறார்களே, அதிலும் ஓர் இன்பம் இருக்கிறது, நன்றாக அழட்டும், கேட்கலாம்'' என்றாள் மாயா தேவி.

அரசர் மௌனம் சாதித்தார்.

''அரசே, அந்தக் கனவின் பலனை இப்பொழுதே போய்த் தெரிந்துவர முடியாதா, அதை அறிய என் மனது துடிக்கிறதே'' என்றாள் மாயாதேவி.

அரசர் ஒரு காவலாளியை அழைத்துத் தீபங்களைத் தயார் செய்யச் சொன்னார்.

— 5 —

அரசர் அத்துறவிகள் தங்கி இருந்த வீட்டை அடைந்தபொழுது அவர்களை அங்கே காணவில்லை. பிரமித்துப்போய் அரசர் திடுக்கிட்டு நின்றார். காவலாளிகளை அழைத்து விசாரித்தார். ஒருவருக்கும் ஒன்றுமே தெரியவில்லை. தனக்குத் தெரியும் என்று சொல்வதுபோல் ஓர் ஓலை காற்றால் தள்ளப்பட்டு அரசர் காலில் மோதியது.

விளக்கின் ஒளியில் அதை எடுத்துப் படித்துப் பார்த்தார்.

அதில், ''சுத்தோதனா,உலகம் உய்யச் செய்ய ஓர் உத்தமன் உன் மகனாகப் பிறக்கப்போகிறான். ஆனால் உன்னுடைய பரந்த நாட்டை அவன் ஆள்வான் என்பது வீண் கனவு. உலகமே போற்றும் துறவியாகி நாடெல்லாம் அலைந்து வாழ்க்கையின் துயருக்குக் காரணம் என்னவென்று அறிந்து எங்கள் தலைவனாக அவன் ஒளிர்வான்'' என்று எழுதியிருந்தது.

''என் கனவு இனிமேல்தான் ஆரம்பமாகிறது'' என்று தமக்குத்தாமே கூறிக்கொண்டார் சுத்தோதனர்.

''சரியான போக போக்கியங்களுடன் வாழச்செய்து துன்பமும் துயரும் என்னவென்றே தெரியாத நிலையில் அவனை வைத்துவிட்டால் எப்படி அவன் துறவியாவான்'' என்று சிந்தனை செய்துகொண்டே அரசர் திரும்பிச் சென்றார்.

— 6 —

அந்த மாதம் சென்றது.

அடுத்தமாதத்தில் ஒரு நாள் அரசர் ஏதோ யோசனையில் ஆழ்ந்து மஞ்சத்தில் வீற்றிருந்தார்.

அப்பொழுது அருகில் வந்த மாயாதேவி ''எந்த நாட்டைப் பிடிப்பதற்கு யோசனை செய்கிறீர்கள், இனி என்னைத் தனியே விட்டு விட்டுப் போகக் கூடாது'' என்றாள் கொஞ்சலாக.

''மாயா, இமயமலைப் பிரயாணத்தைப் பற்றித்தான் யோசனை செய்துகொண்டிருக்கிறேன், இன்னும் இரண்டு நாட்களில் கிளம்பலாமா'' என்றார் அரசர்.

''இப்பொழுது வேண்டாம், கொஞ்சநாட்கள் கழித்துப் பார்த்துக்கொள்ளலாம்'' என்ற மாயாவின் பதில் அரசரைத் திகைக்க வைத்தது.

''ஏன் மாயா?''

மாயா பதிலே சொல்லவில்லை.

'' அப்பொழுதே அழைத்துக் கொண்டு போகவில்லை என்ற கோபமா? ''

'' இல்லை '' என்று தலையை அசைத்தாள் ராணி.

''பின் ஏன்வர மறுக்கிறாய்?''

அரசருக்குப் பக்கத்தில் உட்கார்ந்தாள் மாயாதேவி. தயங்கித் தயங்கி ''அரசே, தங்களுக்குக் குழந்தை பிறக்கப்போகிறது '' என்று முகம் வெட்கிக் கூறினாள்.

அவள் கூறி முடித்ததும், அந்த ஆறுயோகிகளும் அன்று ஓலைச் சுவடியில் எழுதியிருந்ததை உரக்கப் படிப்பதுபோல் இருந்தது சுத்தோதனருக்கு.

கருப்பையிலிருக்கும் இச்சிசுவிற்கு இமயத்தின் காற்றே உதவாது என்று தமக்குத் தாமே கூறிக்கொண்டார் சுத்தோதனர்.

'' உத்யான வனத்துப் பளிங்கு மண்டபத்தில் இனி தங்குவதற்கு ஏற்பாடு செய்கிறீர்களா'' என்றாள் மாயாதேவி.

''சரி'' என்றார் சுத்தோதனர்.

"லக்ஸ் டாய்லட் சோப்பால் தினமும் நான் அழகுபடுத்திக்கொள்ளும் முறை இதுவே" என்று புஷ்பவல்லி சொல்கிறார்
LUX TOILET SOAP
லக்ஸ் டாய்லட் சோப்பின் நுரையை தாராளமாக சருமத்தின் மேல் தடவுகிறேன்...
சுத்தமான, குளிர்ந்த ஜலத்தில் கழுவுகிறேன்...
பின்பு, உலர்ந்த மிருதுவான துண்டினால் முகத்தை துடைக்கிறேன்
சினிமா நட்சத்திரங்கள் விரும்பும் அழகையளிக்கும் சோப்
உங்கள் சருமத்திற்கு ஏன் புது சோபையை அளிக்கக்கூடாது? புஷ்பவல்லியின் சுலபமான அழகுபடுத்திக்கொள்ளும் முறையை 30 நாட்கள் கையாளுங்கள்—லக்ஸ் டாய்லட் சோப்பின் சுத்தம்செய்யும் திறமையையும், குளுமையளிக்கும் குணத்தையும் கண்டு மகிழ்வீர்கள். இதன் மணமுள்ள சுறுசுறுப்பான நுரை உங்கள் சருமத்தை மிருதுவாகவும், பட்டுப்போல் மழமழப்பாகவும் செய்கிறது. இதுவே சினிமா நட்சத்திரங்கள் விரும்பும் அழகையளிக்கும் சோப்—உங்கள் வதனத்தின் வனப்பையும் இச் சோப்பினால் காப்பாற்றிக் கொள்ளுங்கள்.
LTS. 139-23-40 TM
LEVER BROTHERS (INDIA) LIMITED

அடைக்கலம்

வேங்கடலட்சுமி

ஆதித்யனின் குடிசையிலிருந்து சமுத்ரம் கூப்பிடுதூரத்திலேயே இருந்தது. அங்கே கடலலைகளின் ஆரவாரம் ஓயாமல் கேட்டுக்கொண்டே இருக்கும். ஆனால் அந்தகனான ஆதித்யனுக்கும் அவன் இளமனைவி சுபகுப்தைக்கும் அது சகஜமாய்ப் போய்விட்டது. நிர்மானுஷ்யமான அவ்விடத்தில் எப்பொழுதும் விடாமல் ஒலித்துக்கொண்டேயிருந்த அவ்வலைகளின் இரைச்சல் அவர்களுக்கு ஏதோ ஒரு பெரிய துணைபோல் தோன்றியது.

சுற்றிலும் நெடுத்தூரத்துக்குப் பரவியிருந்த மணற் பரப்பு. அதற்கப்பால் வானம் வளைந்து பூமியைத் தழுவும் பாரிசத்தில் நுரையிட்டுப் பொங்கிய நீலக்கடல். அவ்விடத்தில் தினந்தோறும் அதிகாலையில் கதிரோனின் செங்கோளம் உதித்தெழும்புவதைப் பார்த்துப் பூரிப்பாள் சுபகுப்தை. அவனுடைய ரேகா விசித்ரங்கள் பட்டுக் கடலின் மேற்பரப்பில் விதம் விதமான வர்ண ஜாலங்கள் எழுவதைக கண்டு அவள் மனதில் பலவிதமான கற்பனைகள் உருக்கொண்டெழும்.

சுபகுப்தை ஒரு கட்டழகி. தாழங் குருத்தின் உட்புறம் போன்ற பொன் மேனி. நாற்புறமும் சுழன்று கண்டோரின் உயிரையும் உடலையும் ஒருங்கே கொள்ளை கொள்ளும் நீலமணிக்கண்கள். பின்கழுத்தில் சுருள்சுருளாய்ப் படிந்து கணைக்காலையும் தாண்டிய கருங்குழல் கற்றைகள், அக்குழலை வாரி முடிக்கவோ, அன்றிப் பின்னலிடவோ அவளுக்குத் தெரியாது. இயற்கையன்னையின் இளங்கன்னி அவள். இடையில் ஒரு பாவாடையும், மார்பில் ஒரு கச்சையுமணிந்து, அதன்மேல் ஒரு சாதாரண மேலாக்கும் அணிந்திருப்பாள். தவிர, அவளுடலில் வேறு ஒருவிதமான அணிகலனும் கிடையாது. கடற் கரையிலிருந்து பொறுக்கி ஒரு கயிற்றில் கோத்து அணியப்பட்ட இரண்டொரு கிளிஞ்சல்களும் சிப்பிகளும் அவளுடைய சௌந்தர்யப் பிரியத்தை விளக்கின.—நவரத்னங்களையணிவதைக் காட்டிலும் அவற்றையணிவதில் பெருமையடைந்தாள் சுபகுப்தை.

அவர்களுடைய இருப்பிடத்திலிருந்து சற்றுத் தூரத்திலிருந்த ஒரு குட்டைக் கரையிலிருந்து களிமண் பிசைந்து எடுத்து வருவாள் சுபகுப்தை. அந்தகனான ஆதித்தியன் தன் கைகளால் அம்மண்ணைத் தடவித் தடவி உருட்டி, அழகுபெற அமைத்த பொம்மைகளாகச் செய்வாள். அவற்றை அமைப்பதில் அவன் கரங்களுக்கு ஓர் அலாதியான லாகவமும் திறமையுமிருந்தன. தன் கணவன் கைகளிலிருந்து விதம் விதமான உருக்கொண்டெழும் பொம்மைகளைக் கண்டு கரைகாணாக் களிப்பெய்துவாள் சுபகுப்தை. கிண்ணங்களில் வர்ணங்களைக் குழைத்து, அவைகளுக்குச் சாயமேற்றிவிடுவாள். பிறகு அவைகளை எல்லாம் வரிசையாய் வெய்யிலில் உலரவைத்துவிட்டு எண்ணிப் பார்ப்பாள். ஒவ்வொரு சமயம் அவளுள்ளத்தில் பொங்கிய உவகையூற்றுக் கலீரென்ற சிரிப்பாக மாறி வெளிப்படும். அதைக் கேட்டுத் தனக்குள்ளேயே புன்னகை கொள்வான் ஆதித்யன்.

— 2 —

அன்று வானப்பட்டாடையில் பிறைமதி வெளிப்படும் தினம். அவளைச் சுற்றிலும் வானத்தில் கோலமிட்டிருந்த நட்சத்திரங்கள் பொறியிட்டுக் கண்ணைச் சிமிட்டி மின்னி மினுக்கிக்கொண்டிருந்தன. தாரகைகளின் மங்கியவெளிச்சத்தில் குமிழிட்டுச் சுருண்டெழுந்து கரையில் மோதிய அலைகள் வெள்ளி உருக்கென்ன மின்னிக் கண்பறித்தன.

வழக்கமாய் அன்றும் பிறைமதியைக் காணக் கடற்கரை சென்றிருந்தாள் சுபகுப்தை. ஆனால் ஏனோ தெரியவில்லை. மிகவும் சீக்கிரமாகவே திரும்பிவிட்டாள்.

திறந்த வெளியில் இருகைகளையும் மடித்துத் தலைக்குயரம் வைத்தபடி ஆகாசத்தை நோக்கிப் படுத்திருந்தான் ஆதித்யன், அன்று அவன் மிகவும் களைப்படைந்திருந்தான். அடுத்த எட்டாவதுதினம் வைசாக பௌர்ணமி. அன்று வாதாபிபுரத்தில் நடைபெறும் திரிபுரஸம்ஹார உத்ஸவத்துக் கூட்டத்தில் கணக்கற்ற பொம்மைகள் விலை போகும். அதற்காகவே சில தினங்களாக முனைந்து வேலைசெய்துகொண்டிருந்தான் ஆதித்யன். சீக்கிரமாக உறக்கம் வந்துவிட்டது அலுப்புக் காரணமாக.

யாரோ வேகமாக நடந்துவரும் அரவம் அவனை எழுப்பியது. வியப்புமூண்டவனாய் "யாரது?—சுபகுப்தையா?" என்றான்.

"ஆம், — நான்தான்," என்று கூறிக்கொண்டே அவனருகில் உட்கார்ந்தாள் அவள்.

"ஏன் இவ்வளவு சீக்கிரம் வந்துவிட்டாய்? உனக்கும் இன்று சீக்கிரமாகவே உறக்கம் வந்துவிட்டதா?" என்று கேட்டுக்கொண்டே அவளை அன்போடு தழுவியவனாய் அவளது வனப்பு மிகுந்த சிரத்தைத் தனது மார்பில் சாய்த்துக்கொண்டான்.

அவள் ஒன்றும் பேசவில்லை. ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தாள்.

நெடுநேரம் வரையில் அவள் பேசுவாளென எதிர்பார்த்த ஆதித்யன் அலுத்துப் போனான். ஒருவேளை அப்படியே தூங்கிவிட்டாளோவென்று சந்தேகித்தான்.

அவன் பேச எத்தனிக்கும் தருணத்தில், "ஒரு மரக்கலம் கரைநோக்கி வருகிறது" என்று தெரிவித்தாள் சுபகுப்தை. அவள் கரங்கள் அவன் கழுத்தைச் சுற்றித் தழுவின. ஆச்சர்யத்தில்மூழ்கிப்போனான் அவன். ஒரு வினாடி ஒன்றும் பேசாமல் மௌனமாயிருந்தான்.

ஆச்சர்யப்படக்கூடிய விஷயம்தான் அது. இதுவரையில் அவர்கள் அங்கே மரக்கலம் வரக்கண்டதில்லை. துறைமுகம் அங்கிருந்து நெடுந்தூரத்திலிருந்தது. கலங்கரை விளக்கமும் அங்கே சமீபத்திலில்லை. அப்படியிருக்க மரக்கலம் அங்கு வருவானேன்? ஒருவேளை கடலில் திசை தப்பிவிட்டதோ என்னவோ?

பலபல யோசித்தார்கள் இருவரும். மரக்கலத்தின் வருகை சுபகுப்தைக்கு மட்டற்ற மகிழ்ச்சியைக் கொடுத்தது. வேற்று மனிதர்களைக் காணலாமென்பது அவள் அவா. அந்த அவாவில் அவள் மனம் கூடுவிட்ட பறவைபோன்று துள்ளிப் பறந்து குதூகலித்தது.

ஆனால் ஆதித்யனின் எண்ணம் வேறு விதமாயிருந்தது. மரக்கலத்திலிருப்போரிடம் தன்னுடைய நேர்த்தியான பொம்மைகள் சிலவற்றை விற்று, அவற்றிற்குப் பதிலாக அவர்களிடமிருந்து உணவுப் பொருட்களும் வஸ்திரங்களும் பெறலாமென எண்ணினான் அவன்.

மறுதினம் பகல் தன் வேலையையெல்லாம் முடித்துவிட்டு, அப்பொழுதுதான் அழகு பெறச்சாயம்திட்டிய இரண்டு நேர்த்தியான பொம்மைகளைக் கையிலெடுத்துக்கொண்டு கடற்கரையை நோக்கிப் புறப்பட்டாள் பாலிகை. அவள் மரக்கலத்திலிருப்போரிடம் எவ்வாறு பேசவேண்டுமென்றும், பொம்மைகளின் மதிப்புக்கிடாக அவர்களிடமிருந்து வேறு என்னென்ன பொருள்கள் பெற்றுவரவேண்டும் என்றும் சொல்லி அனுப்பினான் ஆதித்யன். ஒரு சிறு குழந்தையைப்போன்ற உற்சாகத்துடன் கையிலேந்திய பொம்மைகளைத் தழுவியபடி கடற்கரையை நோக்கித் துள்ளி நடந்தாள் சுபகுப்தை.

*　　*　　*

கதிரவனொளியில் தூரத்தில் வரும் கட்டழகியைக் கண்ணுற்றபடி வியப்பில் மூழ்கியவனாய் மரக்கலத்தின் மேற்றட்டில் நின்றிருந்தான் வாதபியின் இளவரசன் கீர்த்தி வர்மன். காட்டுமானைப்போல் துள்ளிவந்த அப்பொற்கொடியாளின் வனப்பு அவனது கண்களை ஆச்சரியத்தினால் விரியச் செய்தது.

"அவள் கையில் என்ன? எங்குச் செல்கிறவள்? பொம்மைகளல்லவா அவை? ஆம்! என்ன ஆச்சர்யம்? மரக்கலத்தை நோக்கியல்லவா வருகிறாள்! யார் இப்பேரழகி? இங்கே எதற்காக வருகிறாள்?" இவ்வாறு எண்ணமிட்டான் அவன். சற்று நேரம் சென்றது.

அருகேவந்து வணங்கினான் ஒரு பணிமகன்.

"அரசே! யாரோ பொம்மை செய்து விற்கும் பெண்ணாம்! கையில் மிக நேர்த்தியான பொம்மைகள் இரண்டு கொண்டுவந்திருக்கிறாள்! உங்களை நேரில்காண விரும்புகிறாள்!"

"சரிதான், அழைத்துவா!" என்று உத்தரவிட்டான் இளவரசன்.

சற்று நேரத்திற்கெல்லாம் அவனெதிரே மின்னல்போல் வந்து நின்றாள் சுபகுப்தை. அங்குக் காணப்பட்ட ஆடம்பரங்களையும் இளவரசனின் விலைபெற்ற ஆடையலங்காரங்களையும் கண்டு சற்றுப் பயந்துபோயிருந்தாள் அவள். அவள் கண்களில் ஒருவகையான பரபரப்புத் தென்பட்டது. தலைகுனிந்தபடியே தரையை நோக்கி நின்றாள்.

கண்கவர் அவள் கட்டழகு இளவரசனை ஒருகணம் ஸ்தம்பிக்கச்செய்தது. தன்னையும் மறந்தவனாய், மணம்பெருகிய வனமலர்க் கொடிபோன்ற அவளுருவை அப்

படியே விழுங்கிவிடுவான்போன்று நோக்கினான்.

வெளியே தவழ்ந்த தென்றலின் அசைவில் கடலலைகளின் கரங்களில், மரக்கலம் லேசாக ஓர் ஆட்டம் ஆடி நிலைத்தது. அவ்வசைவு தன் உணர்வழிந்து நின்ற கீர்த்திவர்மனைத் தட்டி யெழுப்பியது.

சட்டென்று தன் நினைவடைந்தவனாய், முககமலத்தில் அரும்பிய புன்னகையுடன் அவளை நோக்கி, "பெண்மணி! நீ யார்? இங்கு எதற்காக வந்தாய்?" என்று மெதுவாகக் கேட்டான்.

ஒரு விநாடி தயங்கினாள் பொற்கொடி. அவன் வார்த்தைகள் அவள் ஹிருதயத்தில் நெடுங்காலமாக உறங்கிக்கொண்டிருந்த பலவித இன்ப உணர்ச்சிகளின் இசை நரம்புகளை மீட்டிவிட்டன. அவள் சரீரம் முழுதும் புல்லரித்தது.

ஒருகணம் தன் அகன்ற விழிகளை மலர்த்தி அவனுடைய களைபொருந்திய முகத்தை ஊடுருவி நோக்கினாள். அடுத்தகணம் அவளுடைய மெல்லிய மதுர கண்டம் இளவரசன் செவிகளில் அமுதம் பொழிந்தது.

"ஐயா! என் பெயர் சுபகுப்தை; என் கணவர் அந்தகர். அவர் இந்தப் பொம்மைகளைச் செய்கிறார்; அவற்றுக்கு வர்ணந்திட்டி, முழு மதிதோறும் வாதாபிபுரம் சென்று நான் விற்றுவருவேன்; எங்களுடைய ஜீவனமே அதுதான். நேற்றையதினம் உங்களுடைய மரக்கலம் இங்கு வருவதைக்கண்டு என் கணவரிடம் சொன்னேன்; அவர் இந்தப் பொம்மைகளை என்னிடம் கொடுத்து, இவற்றுக்குப் பதிலாக உங்களிடமிருந்து ஏதாவது உணவுப்பொருட்களும், வஸ்திரங்களும் வாங்கிவரும்படி சொன்னார். அதற்காக வந்தேன்," என்று கூறிக்கொண்டே தன்கையிலிருந்த பொம்மைகளை நீட்டினாள்.

இளவரசன் அவற்றைக் கையில் வாங்கிப் பார்த்தான். அப்பொம்மைகளின் வடிவும், அவற்றிற்கு வர்ணம் தீட்டியிருந்த நேர்த்தியும் அவன் மனதைக் கவர்ந்தன. ஆனால் அவற்றைக் காட்டிலும் அவன் மனதைக் கவர்ந்தது அவள் கூறிய வரலாறு.

"புத்தம் புதுக்குமுதம்போன்ற இக்கட்டழகி ஒரு கண்ணிழந்த குருடனின் மனைவியா? ஆகா!.........தெய்வ சோதனையை என்னவென்று சொல்வது?......அரம்பையர் கண்டு நாணக்கூடிய இப்பொற்கொடி ஒரு அந்தகனுக்கு வாழ்க்கைப்பட்டு அவனுடன் ஈன வேலைசெய்து வாழக்கூடியவளா?...... நிர்மானுஷ்யமான இவ்விடத்தில், காட்டில் எரிக்கும் முழு நிலவைப்போல் யார் கண்ணிலும் படாமலிருந்துவருகிறாளே, இவ்வனிதையர் திலகம்!"......

பலவிதமாக ஓடியது அவன் சிந்தனை. தலை நிமிர்ந்து அவளை நோக்கினான்.

"பெண்கள் திலகமே!.........இவ்வழகிய பொம்மைகளை இங்கே வைத்துவிட்டு இவற்றிற்கீடாக இம்மரக்கலத்திலிருந்து உனக்கு விருப்பமுள்ளவைகளை யெல்லாம் எடுத்துச் செல்!"......என்றான்.

உவகை பொங்கக் களிமிதக்கும் கண்களால் அவனை நோக்கினாள் மின்னற்கொடி. பொங்கிப் பூரிக்கும் அவளுடைய புத்தழகை அப்படியே பருகிவிடுவான் போன்று நோக்கினான் கீர்த்திவர்மன். வெட்கித் தலைகுனிந்தாள் சுபகுப்தை.

பணிமக்களை அவளுக்கு வேண்டியவைகளைக் கொடுத்தனுப்பும்படி உத்தரவிட்டான் இளவரசன்.

கரங் கூப்பி வணங்கியபடி,—"நான் போய் வருகிறேன்," என்றாள் பாவை.

"பெண்மணி!.........உன்னுடைய பெயர் என்ன?...அதை எனக்கு இன்னும் கூறவில்லையே!" என்று புன்சிரிப்புடன் வினவினான் இளவரசன்.

"என் பெயர் சுபகுப்தை; என் கணவர் பெயர் ஆதித்யன்," என்று லஜ்ஜையுடன் கூறிப் பெண்மணி அங்கிருந்து செல்லப் புறப்பட்டாள்.

— 3 —

இரண்டு மூன்று தினங்களுக்குப்பின் ஒரு நாள் மாலை. அன்று பகலெல்லாம் பழுக்கக் காய்ந்தான் கதிரவன். ஆனால் மாலை நேரம் மங்க மங்க, நீலவிசும்பில் கார்மேகம் மூடிற்று. கடலிலிருந்து குளிர்காற்றும் வீசலாயிற்று. அலைகளின் ஆரவாரமும் அதிகரிக்கலாயிற்று.

திறந்த வெளியிலுட்கார்ந்து மண்ணை உருட்டிப் பொம்மை செய்துகொண்டிருந்தான் ஆதித்யன். அவனருகி லுட்கார்ந்து கிண்ணங்களில் பொம்மைகளுக்குத் தீட்ட வேண்டிய சாயங்களைப் பக்குவமாகக் கலந்துகொண்டிருந்தாள் சுபகுப்தை.

அவளுடைய தாமரை நிற மேலாக்குடன் சேர்ந்து குழற் கற்றைகளும் காற்றில் அலைந்தன. அவற்றுடன் போட்டியிடுவது போல் அவள் மனமும் பலவாறாக அலை

பாய்ந்தது. மட்டற்ற கலக்கமும் திகைப்புமடைந்திருந்தாள் அவள். இதுவரையில் தெளிந்த நீரோட்டம்போற் சலனமற்று ஓடிக்கொண்டிருந்த அமைதியான அவள் வாழ்க்கையில் இப்பொழுது சூருவளியொன்று சுழன்றடிக்கலாயிற்று. தனக்கு நேர்ந்தது என்னவென்று பலவாருக யோசித்தும் அவளுக்கு ஒன்றும் விளங்கவில்லை. வானவீதியில் சதா வட்டமிட்டுத் திரிந்த வானம்பாடிபோல் எப்பொழுதும் குதூகலம் நிரம்பி வழிந்த அவள் ஹிருதயத்தில் சொல்லமுடியாத வேதனையொன்று தோன்றி வெதுப்பலாயிற்று. ......என்ன காரணம்?......அவளுக்கே புலனுகவில்லை......... இவ் வேதனையின் நடுவே நிழல்போன்ற ஒரு உருவம் மட்டும் அடிக்கடி தோன்றி மறைந்தது;.........அவ்வுருவம் யாருடையது?...... வாதாபியின் இளவரசன் கீர்த்தி வர்மனுடையது.

என்ன முயன்றும் உயர்ந்த நேர்த்தியான அவனுருவையும், வசீகரமான மதிமுகத்தையும் அவளால் மறக்கவே முடியவில்லை...... மீண்டுமொருமுறை பொம்மைகளுடன்மரக்கலத்துக்கு வரும்படி அழைத்திருந்தான் அவளை.

"போவதா, வேண்டாமா?".........என்று இரண்டு தினங்களாக யோசித்தும் அவளால் ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை. கலக்கமுற்றுத் தவித்தது அவள் நெஞ்சம். இப்பொழுதும் அதே போராட்டத்தில் ஈடுபட்டிருந்தாள்.

"சுபா!" என்ருன் ஆதித்யன். பார்வையற்ற அவன் விழிகள் அவளை நோக்கித் திரும்பின.

"ஏன்?" என மெல்லக் கேட்டாள் அவள்.

"நேற்று சாயந்திட்டிய பொம்மைகளெல்லாம் எங்கே? அவைகளெல்லாம் உலர்ந்துவிட்டனவா?"

"ஆம், உலர்ந்துவிட்டன;......மழை வரும்போல் தோன்றுகிறமையால் அவற்றையெடுத்து உள்ளே வைத்துவிட்டேன்!" இதைக் கூறிக்கொண்டே வர்ணம் குழைத்திருக்கும் கிண்ணங்களைக் கையிலெடுத்துக்கொண்டு எழுந்தாள் அவள். ஆயாசத்துடன் ஒலித்த அவள் குரல் ஆதித்யனுக்கு அதிசயத்தைக் கொடுத்தது.

என்ன நேர்ந்தது அவளுக்கு? அவனுடைய கரங்கள் மட்டில் வேலையிலீடுபட்டிருந்தனவே தவிர, மனம் என்னென்னவோ சிந்தித்தபடியேயிருந்தது.

* * *

நேர் வகிடானுலும் சரி, கோணல் வகிடானுலும் சரி, வாரி எடுத்து இளம் பிறை வடிவாகக் கட்டினுலும் சரி-கூந்தலை எவ்விதமாக ஜோடித்த போதிலும், தலை நிறைந்த கூந்தலில்லாமல், இச்சிங்காரக் கட்டுகளெல்லாம் சோபிக்க மாட்டா. ஆகையால் கேசவர்த்தினியைக் கொண்டு கூந்தலையும் கூந்தலழகையும் இப்போதே பெருக்கிக் கொள்ளுங்கள். தலையை விதவிதமாய் அலங்கரித்துக் கொள்ளுங்கள்.

அழகு என்பது உடன் பிறந்ததே. ஆனுல் கூந்தலழகோ சுபாவமாக அமையாவிடினும், கேசவர்த்தினியால் கிட்டுவதே.

கவனக் குறைவாலோ அல்லது வேறு காரணத்தாலோ இழந்த கூந்தலுக்குப் பதில் இளங் கூந்தலைப் பெறுங்கள். சிறு வயது முதல் கேசவர்த்தினியை உபயோகிப்பதால், கூந்தல் ஆரோக்யத்தையும் அழகையும் தவருமல் ஒருங்கே அடையுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைப் பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகு படுத்துவது

விலை அணு 12

(மேற் செலவு வேறு)

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்

தென் இந்திய ரஸாயன சாலை

கோயமுத்தூர்.

போலிகளை வாங்கி மோசம் போகாதீர்கள். "கேசவர்த்தினி தென்னிந்திய ரஸாயன சாலை என்ற பெயர்களைக் கவனித்து வாங்குங்கள்."

பாறையில் சாய்ந்து நின்றிருந்தான் இளவரசன். அவன் காலடியில் தலை கவிழ்ந்து உட்கார்ந்திருந்த சுபகுப்தை விம்மி அழுது கொண்டிருந்தாள்.... "கண்மணி!......எழுந்திரு!......உன்னை வீட்டிற் கொண்டுவிடுகிறேன்!" என்று தழுதழுத்த குரலிற் கூறியபடியே குனிந்து அவளைத் தூக்கியெடுக்க எத்தனித்தான் கீர்த்திவர்மன்.

காம்பொடிந்த மலரெனத் துவண்ட மங்கை, அவனுடைய அகன்ற மார்பில் முகத்தைப் புதைத்துக்கொண்டாள். உஷ்ணமான அவள் கண்ணீர் அவன் கரங்களை நனைத்தது. ஆர்வத்துடன் அவளைத் தழுவிய இளவரசன் வறண்ட குரலிற் பேசலானான்.

"கண்மணி!......மீண்டுமொருமுறை கேட்கிறேன்; நீ என்னுடன் வாதாபி வந்துவிடு; அரசர்களின் அந்தப் புரத்துக்கு அணிகலனாக விளங்கவேண்டிய நீ, இவ்வாறு ஒரு அந்தகனின் மனைவியாக, மனிதப்பூண்டேயில்லாத இவ்விடத்தில் இன்னும் எவ்வளவு காலம் தள்ளப்போகிறாய்? தேவரும் கண்டு வியப்புறும் உனது கட்டழகனைத்தும், கானிலெரித்த நிலவுபோல் வீணாகத்தானே போகிறது! யோசனை செய்துபார்!"

சுபகுப்தை மெல்லத் தனது கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். அவளுடைய துயரம் அடங்கச் சற்று நேரம் சென்றது.

கண்ணீர் பளபளக்கும் விழிகளால் இளவரசனை நோக்கியவாறே சற்று விலகி நின்றாள். கடலிலிருந்து வீசிய காற்று அவளுடைய மேலாக்கையும் சுருட்குழற் கற்றைகளையும் அலைத்துச் சென்றது. அலைகளின் ஆரவாரத்தைச் செவியுற்றவாறே சற்று நேரம் கற்சிலைபோல் நின்றாள். தன்னைப் பலவாறு உலப்பிய மனோ வேதனைகளிலிருந்து விடுபடுவதற்கு, அவ்வலைகளின் நடுவே அடைக்கலம் புகுந்துவிட்டால் நல மென்றெண்ணியது அவள் நெஞ்சம். அவ்வெண்ணம் தோன்றியவுடன் சட்டெனத் திரும்பியவளாய்ச், சற்றுத் தூரத்திலேயே நுரையிட்டுச், சுருண்டெழுந்து, கரையில் மோதிமோதித் திரும்பிச்சென்ற அலைத் திரைகளை நோக்கினாள். அவ்வலைகள் அவளுக்கு அடைக்கலமளிக்கும்!..........அதன் பின்பு முடிவற்றதோர், எல்லையற்றதோர் சாந்தி......விம்மித் தணிந்தது அவள் நெஞ்சம். திரும்பி நின்றவளாய் இளவரசனை நோக்கிக் கம்பீரமாய்ப் பேசலானாள். அவள் குரலில் மாற்றமுடியாத ஓர் உறுதி த்வனித்தது.

"பிரபு! அரண்மனை வாழ்க்கையும் அந்தப்புர வாசமும் என்னை வசீகரிக்கவில்லை. அந்தகரான என் கணவருடனிருப்பதே எனக்கு இன்பம்; அவரை விட்டுவிட்டு நான் எங்கும் வர விரும்பவில்லை ; தாங்கள் போகலாம் !"

ஓர் அரசிக்குரிய கம்பீரத்துடன் போகத் திரும்பினாள்.

"சுபா! இதுதானா உன் முடிவு?" பரிதாபமாக ஒலித்தது இளவரசனின் குரல்.

" ஆம் !" சற்றும் தயங்காமல் பதிலளித்தாள் பாவை. ஆனால் அவள் கண்ணீர்வழிந்து கன்னத்தில் உவர்க்கோடிட்டதை அவன் காணவில்லை.

*   *   *

நீலக் கடலின் அலைக்கரங்களில் மெல்ல மெல்லச் சென்றுகொண்டிருந்தது கீர்த்திவர்மனின் மரக்கலம். அதன் பாய்மரங்கள் விரிக்கப்பட்டு, காற்றில் அசைந்தாடின. மேற்றட்டில் நின்றுகொண்டிருந்த இளவரசன் மங்கிவரும் கரையையும், அக்கரையில் மணற்பரப்பில் நின்றுகொண்டிருந்த வடிவழகியையும் கண்கொட்டாமல் நோக்கிக் கொண்டிருந்தான். மங்கிவரும் மாலைக்கருக்கலில் கரையும் கண்ணுக்கு மறைந்தது. கட்டழகியும் மறைந்தாள்.

*   *   *

"சுபா! சுபா," என்று கூவிய ஆதித்யனை ஏளனம் செய்வதுபோல் எதிரொலித்தது கடற்காற்று. ஒளியற்ற விழிகளுடன் திக்குத்திசை தெரியாமல் கடற்கரையில் அலைந்தான் அவ்வந்தகன். பேய்க்காற்று ஓவென ஓலமிட்டது. அவ்வோலத்தின் நடுவே கட்டழகி சுபகுப்தையின் குரல் தன்னைக் கூவியழைப்பதாகக் கற்பித்தது அவன் நெஞ்சம்.

"சுபா! சுபா! எங்கிருக்கிறாய் நீ?"

அவன் குரல்தான் பயங்கரமாய் எதிரொலித்தது.

பளீர் பளீரென மின்னல்! கடகடவென்ற இடியோசை! சோனாமாரியாய்க் கொட்டிய மழைத்தாரை.

அலைகளுடன் போராடிக் கொண்டிருந்தாள் சுபகுப்தை. சில கணங்கள் தாம்,...... இரண்டுதரம் அமிழ்ந்தெழுந்தாள்; குபுக்... குபுக்......தன்னிடம் அடைக்கலம் புகுந்த பெண்மணியைச் சமுத்திரதேவன் ஏற்றுக் கொண்டான்.

"சுபா! சுபா! எங்கே நீ?"

அலைகளிடம் அடைக்கலம் வேண்டிய கட்டழகியின் வேண்டுகோள் நிறைவேறியது அடைக்கலம் பெற்றாள்.

ஏழையின் உபகாரம்

மானஸீகன்

அன்று ஹோலி பண்டிகை. மகாராஷ்டிரம் முழுவதும் ஒரே கொண்டாட்டமும் கும்மாளமுமாய் இருந்தது. வீரசிங்கம் சிவாஜியின் ஒப்பற்ற பாதுகாப்பில், முகலாயர் படையெடுப்பில், சிறிதும் கலக்கமில்லாத ஹிந்துக்களின், சாந்தி பொருந்திய மண வாழ்க்கையின் எடுத்துக்காட்டாக அப்பண்டிகை விளங்கியது. குடிசை தொட்டுங் குடில்வரை, தீபங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. தேவாலயங்களின் அகண்ட மணியொலி, காற்றலைகளில் மெல்ல அசைந்து வந்துகொண்டிருந்தது. எங்கும் பூசையும் பஜனையுமாய்த் திகழ்ந்தது.

மகாராஷ்டிரத்தின் அரணாய் விளங்கியவை மேற்குத் தொடர்ச்சி மலைகள். வானம் எட்டும் பெருங் குன்றுகள் சங்கிலிக்கோவை போல் சிவாஜி சாம்ராஜ்யத்தின் மெய்க்காப்பாளராக விளங்கின. சரித்திரப் பிரசித்திபெற்ற கற்குன்றுகள், ராய்காட், பிரதாப்காட், சிம்மகாட், இன்னும் எவ்வளவோ குன்றுகள், தங்கள் அகண்ட புயங்களை, வானத்தில் நீட்டி நின்றன. மேற்கே ஒரே சமவெளியாய்ச் சென்று அரபிக் கடலில் கடந்தது.

மனோகரத்தின் சிகரமாய் விளங்கிய அந்த ராய்கர் கோட்டையில் சிவாஜியின் இஷ்ட தெய்வம் பவானியின் கோயில் எழும்பி நின்றது. அந்த ஹோலி பண்டிகையன்று கோயில் வெகு விநோதமாய் அலங்கரிக்கப்பட்டு, விழா நடத்தப்பட்டது. கோயிலின் மணி டணார், டணாரென்று வெகு சாவதானமாக எழுப்பிக்கொண்டிருந்த ஒலி, அம்மலைப் பிராந்தியம் முழுவதும் ஒலித்துக்கொண்டிருந்தது.

மாலை. கதிரவன், மேற்குக் கடலில் மூழ்கிக்கொண்டிருந்தான். அவனது செந்நிறக் கிரணங்கள், நூற்றுக் கணக்கான மேகச் சிதறல்களிடை பாய்ந்து, ராய்காட்டின் மேற்குச் சரிவில் பரவிக் கிடந்தது. அதற்குச் சிறிது நேரத்திற்கு முன்புதான், மழைத் தூறல் போட்டு நின்றதால், மலைச் சரிவுப் பாதைகளெல்லாம் சதசதவென்று தும்பு தூசு இல்லாமல், சுத்தக் காணமாய் விளங்கியது. மழைக்கப்புறம் கிளம்பும் பனிப்போர்வை போர்த்து, மனதில் தனிமையின் அமிர்தத்தை வார்த்துக்கொண்டிருந்தது. பள்ளத்தாக்கை ஊடுருவிச் செல்லும் பாதையின் இரு மருங்கும், இருள் மங்கும் காடுகள். தொடர்ந்து உள்ளிருந்து கிளம்பும், எண்ணிறந்த பட்சி ஜாலங்களின் குரல்கள் ஒன்று சேர்ந்து நிரந்தரமாய் விளங்கின.

பாதையில் இரு அசுவங்களின்மீது இரு வீரர்கள், அணிவகுத்து வந்தனர். அவர்களில் சற்றுக் குள்ளமாய், தீர்க்க நாசியுடன் இருந்தவரை மகாராஷ்டிரத்தின் அதிபதி சத்ரபதி சிவாஜி என்று தூரத்திலேயே சொல்லிவிடலாம். அவரது பக்கத்தில் வருபவன் குதிரைப்படைத் தலைவன், தேத்தாஜி பால்கர். வீரர் இருவரும் பேசிய வண்ணம் பாதையில் மெள்ளக் குதிரைகளை நடத்திவந்தனர். சிவாஜி தம் தலையைத் தூக்கித் தம் கோட்டையான ராய்கரைப் பார்த்தார். அவர் மனதில் பெருமிதம் ததும்பிநின்றது. கோட்டையை மற்றவனுக்குச் சுட்டிக் காட்டி' "தேத்தாஜி! இரவில் இக்கோட்டையில் படுத்தால்தான், எனக்கு நல்ல உறக்கம் வருகிறது. பீஜபூர் மொகலாய சைன்யங்கள் ஒன்று சேர்ந்து வந்தாலும், நான் இந்தக் கோட்டையிலிருந்துகொண்டே அவர்களை முறியடித்து விடுவேன் என்ற தைரியம் எனக்கு எழுகின்றது"

தேத்தாஜி பால்கர் தன் தலைவணக்கத்தால் அவர் சொன்னதை ஆமோதித்து, உயர எழும்பியிருந்த கோட்டையை நோக்கிக்கொண்டிருந்தான். கொஞ்சநேரம் மௌனம் நிலவியது. அப்போது சிவாஜி குதிரையைத் தட்டிக்கொண்டு, "இன்றைக்கு ஹோலி பண்டிகை, நாம் சீக்கிரம் கோட்டையை அடையவேண்டும். வா" என்று துரிதப்படுத்தவே, குதிரைகள் வேகமாய்ச் செல்ல ஆரம்பித்தன.

பேச்சுச் சுவாரஸ்யத்தில், அவர்கள் தங்கள் எதிரில் ஒரு பெண் வந்து நின்றதைக் கவனிக்கவில்லை. வயது இருபது அல்லது இருபத்தைந்து இருக்கும். மிகவும் வெட்கத்துடன் இவர்கள் எதிரில் வந்ததாகத் தெரிந்தது. அவள் அவர்களை நோக்கி, "குதிரையைக் கொஞ்சம் நிறுத்துங்கள்" என்று கூவினாள்.

தேத்தாஜிக்குக் கோபம் வந்துவிட்டது என்பதை அவன் கண்கள் காட்டின. ஓர்

ஏழைப் பெண்ணாவது, அகில மகாராஷ்டிர அதிபதியான, சிவாஜியை உத்தரவிடுவதாவது? என்று தோன்றியதுபோலும், சிவாஜி அவனுடைய குறிப்பை அறிந்து கையை உயர்த்தி யடக்கி, அன்பு தொனிக்க "உனக்கு என்ன அம்மா வேண்டும்?" என்று கேட்டார்.

"ஒன்றுமில்லை, இன்று பண்டிகை கங்கணங் கட்டிக்கொள்ள, என் தம்பி வருவானென்று நினைத்தேன். அவன் வரவில்லை. இனிமேல் வரமாட்டான். கங்கணம் கட்டாவிட்டால், எங்கள் விரதம் பயனில்லாமல் போய்விடும். தாங்கள் யாராவது என் விரதக் கயிற்றைக் கட்டிக்கொண்டுவிட்டால் ரொம்பவும் புண்ணியமாயிருக்கும்," என்று அவள் சொன்னபோது அவள் கண்களில் ஏக்கக் கண்ணீர் வழிந்தது.

சிவாஜி சற்றும் தயக்கமில்லாமல் தம் கையை நீட்டி "இந்தா கட்டு" என்றார்.

அவ்வனிதைக்கு ஆனந்தம் பொங்கியது. "இப்படிச் சற்றே வரவேண்டும். ஏழையின் குடிசைக்கு வந்து அனுக்ரஹிக்க வேண்டும்" என்று கூறி ஒரு காட்டுப்பாதை வழியாக அவர்களை அழைத்துச் சென்றாள்.

மூவரும் ஒரு சிறு குடிசையின் முன்வந்து நின்றார்கள். அவர்கள் குடிசையை நெருங்கியதும் ஒரு குரல், "யாரது? தாரா, நீயா அது? என்று விளித்தது.

"ஆம், நான் தானம்மா" என்று பதிலளித்தாள் அப்பெண்மணி.

"கூட யாரது கோபியா?"

"இல்லை அம்மா. நம் விரதத்தைப் பூர்த்தி செய்ய வந்துள்ள விருந்தினர்கள்"

கிழவி ஒரு பெரு மூச்சுவிட்டாள். "ஹூம், அவன் ஏன் வரப்போகிறான். தறிதலை. இந்தக்கிழவயதில் என்னையும், ஒன்றும் அறியாத உன்னையும், இப்படியா ஆட்டி வைக்கவேண்டும். எல்லாம் நம் விதி" என்று நொந்து கொண்டாள்.

பெண் உள்ளே போய் இரு பாய்களைக் கொணர்ந்து விரித்து, அதில் அவர்களை உட்கார உபசரித்தாள்.

பின்பு புன்சிரிப்புடன், அம்மாவைப் பார்த்துக் கொண்டே " கோபி என்பது என் அண்ணா, கோபிநாத் பாண்டோஜி. சிறுவயதிலிருந்தே கெட்டுப் போய்விட்

பொதுஜன ஆதரவுக்கு நமது முன்னேற்றமே சான்று

ஏராளமான பாலிஸிகள், இடைவிடாத மகத்தான முன்னேற்றம், அதிகரித்துக்கொண்டே வரும் புகழ், பொதுஜன ஆதரவு— இவைகளுக்குப் போதிய அத்தாட்சி அடியிற் காணப்படும் புள்ளிவிபரங்கள்:-

வருஷம்	புதிய பாலிஸிகள்	மொத்த ஆஸ்தி	நடைமுதலிலிருக்கும் பாலிஸிகள்
1941	1 கோடி 1 லக்ஷத்திற்குமேல்	1 கோடி 95 லக்ஷத்திற்குமேல்	8 கோடி 36 லக்ஷத்திற்குமேல்
1943	2 கோடி 20 லக்ஷத்திற்குமேல்	2 கோடி 50 லக்ஷத்திற்குமேல்	10 கோடி 53 லக்ஷத்திற்குமேல்
1945	3 கோடி 75 லக்ஷத்திற்குமேல்	3 கோடி 30 லக்ஷத்திற்குமேல்	14 கோடி 87 லக்ஷத்திற்குமேல்

1945ல் புதிய பாலிஸிகள் பெருக்கு:— 1 கோடி 15 லக்ஷத்திற்குமேல்

வருடா வருடம் இந்தப் பெரிய தேசீய ஸ்தாபனத்தில்
போது ஜனங்கள் பாலிஸி எடுக்கிறார்கள். அத்துடன் பெருவாரியான பழைய பாலிஸிதார்களும் மேலும் மேலும் புதிய பாலிஸிகள் எடுத்துக்கொள்கிறார்கள்.

லக்ஷ்மி இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

(தலைமை ஆபீஸ்:- லாகூர்)

மதராஸ் பிராஞ்சு:-
4/105, அரண்மனைக்காரத்தெரு, ஜி. டி. சென்னை.

C. R. சேஷன், M.A,
பிராஞ்சு மானேஜர்.

டான். எங்கள் தந்தை இறந்தவுடன் வேண்டுமென்றே பெரிய பட்டணமாகிய பூனாவிலிருந்து, இங்கு அழைத்துக்கொண்டு வந்துவிட்டான். ஒரு நாள் வெளியில் போனால், இரண்டு மூன்று நாள் வீட்டுக்கு வருவது கிடையாது. அவனைக் கடவுள் தான் கண்டிக்கவேண்டும்'' என்று கண்களைத் துடைத்துக்கொண்டாள். அபலையின் சோகசரித்திரம் ஏன் கண்ணீரை வரவழைக்காது?

சிவாஜி அவைகளை உருக்கமாகக் கேட்பதைக் கண்ட தேத்தாஜிக்கு ஆச்சர்யமாக இருந்தது. அப்பெண் மிகவும் வணக்கமாக இரு கோப்பைகளில் சுத்த பசும்பாலைக் கொண்டுவந்தாள். ''இதுதான் எங்கள் பக்ஷணம். இதை ஏற்றுக்கொள்ளவேண்டும்'' என்று வேண்டினாள். அவர்கள் பாலை உண்ட பிறகு, எதிரே பவானியின் படத்தினடியில் வைக்கப்பட்டிருந்த ஒரு கயிற்றை எடுத்து வந்து, சிவாஜியின் இடது கரத்தில் கட்டினாள்.

''உங்கள் வாழ்நாளில் என்னை உங்கள் சகோதரிபோல் ஏற்றுக்கொண்டு ரக்ஷிப்பீர்கள்'' என்று வணங்கினாள். சிவாஜி ''ஜய் பவானி'' என்று கூறி அவளை ஆசீர்வதித்தார்.

தாரா நாணம் கலந்த விஷமச் சிரிப்புடன், ''என் சகோதரர் யாரென்று தெரியவில்லையே'' என்றாள்.

தேத்தாஜி குறுக்கிட்டு ''உன் சோதரர் யார் தெரியுமா, மகாராஷ்டிர சிங்கம், சத்ரபதி சிவாஜி'' என்று கூறவே, இவ் வார்த்தைகள் அப் பெண்மணியை உலுக்கிவிட்டன. ஒரு கணம் ஸ்தம்பித்து நின்றுவிட்டாள்.

''சிவாஜி'' என்ற வார்த்தை குடிசையில், உருண்டுகொண்டிருந்த கிழவியையும் எழுப்பிவிட்டது. ''தாரா? யாரது?'' என்று கேட்டாள்.

தாரா மெதுவான குரலில் ''சத்ரபதி பிரபு அம்மா'' என்றாள். பயத்தினால், அவள் குரல் நடுக்கமுற்றது.

சிவாஜி புன் சிரிப்புடன் எழுந்துகொண்டே, ''தாரா! இன்றுமுதல் நான் உன் சோதரன், ஆபத்தில் என்னை வந்து பார். ஆமாம், சோதரியாகிய நீ, எனக்கு என்ன செய்யப் போகிறாய்?'' என்று கேட்டார்.

தாரா தலையைக் குனிந்துகொண்டே ''ஏழை நான் என்ன செய்யமுடியும். அதுவும் தங்களுக்கு'' என்றாள்.

பிறகு இருவரும் புறப்பட்டுப் போய்விட்டார்கள். குடிசையில் அமைதி நிலவியது. பள்ளத்தாக்கு மறுபடியும் மேகங்களால் மூடப்பட்டு, மழை சடசடவென்று பெய்ய ஆரம்பித்துவிட்டது.

சிவாஜி கோட்டையை அடைந்ததுமே, அங்கு ஒரு பரபரப்பு இருந்தது கண்டார். ஒரு தூதுவன் வந்து, பீஜபூர் சமஸ்தானத்தின் ஒற்றனாய் விளங்கிய மகாராஷ்டிரன் ஒருவன் பிடிக்கப்பட்டான் என்றும், அவனை நீதிபதி விசாரிக்க ஆரம்பித்திருக்கின்றனர் என்றும் அறிவித்தான்.

பாரதத்தின் சிங்கம்போல் சிவாஜி மறு நாள் ஆஸ்தான தர்பாரில் அமர்ந்திருந்தார். பிரதம மந்திரி எழுந்திருந்து, ''மகாராஜ், மராட்டியன் ஒருவன், ஜின் ஜீராகோட்டையின் அருகில் பிடிபட்டான். அவன் பீஜபூர் சமஸ்தானத்தின் உளவாளி என்பது நிரூபிக்கப்பட்டுவிட்டது. தாங்கள் அவனை விசாரிக்கவேண்டும்'' என்றார்,

சிவாஜியின் கண்கள் கோவைப் பழம் போல், சிவந்துவிட்டன. அவர் மீசை துடித்தது. ''கொண்டுவாருங்கள் அந்தத் துரோகியை! அவனை நான் பார்க்கவேண்டும்!'' என்று அவர் எழுப்பிய அதிருங் குரல், சபையை நடுங்கச் செய்தது.

சேவகர்கள் உடனேபோய் ஒரு கைதியை இழுத்து வந்தனர். ஜாதியில் பிராமணன். அவன் வயது முப்பது அல்லது முப்பத்தைந்து இருக்கும். மௌனமாய் நின்றான். சிவாஜியின் உதடுகள் கோபத்தால் துடித்தன. ''இவனைச் சித்திரவதை செய்து கொன்றுவிடுங்கள். கண்களையும் காதுகளையும் வெட்டிவிட்டு, மலைக் குன்றுகளிலிருந்து உருட்டிவிட்டுவிடுங்கள். தேசத் துரோகிக்கு, இதுதான் தண்டனை'' என்று கர்ஜித்தார்.

சபையில் ஒரே நிசப்தம். யாவரும் பயத்தினால் ஒடுங்கிப்போய்விட்டனர். அச்சமயம் ''ஆ'' என்று எழுந்த ஒரு சிறு குரல் யார் காதிலும் விழவில்லை. ஆனால் அது சிவாஜியின் காதுகளில் கணீரென விழுந்தது. சபையின் வாயிற்படியை நோக்கினார். கூட்டத்துடன் கூட்டமாக ஓர் ஏழை யுவதி நின்றுகொண்டிருந்தாள். அவள் தாரா. அவர் கண்கள், அந்த ஏக்கமும் கண்ணீரும் நிறைந்த கண்களை நோக்கின. பிறகு சட்டென்று ஏதோ நினைவிற்கு வந்ததுபோல், ''நிறுத்துங்கள் அவனை''என்று உத்தரவிட்டார். கொண்டு போகப்பட்ட கைதி திரும்பவும் அழைத்து வரப்பட்டான்.

கூண்டில் நின்ற கைதி—கதவருகில் நின்ற யுவதி, முக ஒற்றுமை நன்கு தெரிந்தது. "ஏய் உன் பெயரென்ன?" என்று கேட்டார்.

"பந்தோஜி கோபிநாத்" என்று பதில் வந்தது. சபையில் சற்றுநேரம் மௌனம். பிறகு அரசர் "இன்னும் இரண்டு நாட்களில் நீ மகாராஷ்டிர எல்லையைக் கடந்து போய்விடவேண்டியது. அதற்குப் பின்பும் இருந்தால் தக்ஷணமே சிரச் சேதம், போ! விட்டுவிடுங்கள் அவனை" என்று கூறிப்போய்விட்டார். சபையில் ஏக கல கலப்பு ஏற்பட்டுவிட்டது. தண்டனையின் மாறுதலுக்கு யாவராலும் காரணம் கூற முடியவில்லை.

இது நடந்து ஐந்து வருடங்கள் ஆயிருக்கும். அதற்குள் மகாராஷ்டிரத்தில் ஏக மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன. சிவாஜியின் படைப்பலம் அதிகரிக்கவே, அவர் பீஜபூர் சமஸ்தான ஜில்லாக்களைச் சூறையாடத் தொடங்கினார். இதுகாறும் சும்மா கிடந்த பீஜபூர் சிங்கம், கர்ஜித்துக்கொண்டு எழுந்தது. அப்ஸல்கான், என்னும் சிறந்த யுத்த வீரன் தலைமையில் ஒரு படைதிரட்டப்பட்டது.

"அந்த மலை எலியை, உயிருடன் கூட்டில் பிடித்து வராவிட்டால், நான் அப்ஸல்கான் இல்லை!!" என்று ஒரு பெரிய சபையில் வீராவேசம் பேசிவிட்டுச் சேனையுடன் கிளம்பினான், அப்ஸல்கான்.

மகாராஷ்டிரத்தை நெருங்க நெருங்க சிவாஜிக்குப் பயம்தோன்றிவிட்டது. இந்தப் பெரிய சேனையை எதிர்த்தால் நாசம் வரும் என்று ஆலோசனை கூறினார்கள் அஷ்டப் பிரதானிகள் சமாதானத்திற்கு ஆள் விடப்பட்டான். அப்ஸல்கானும் உடனே சமாதானத்திற்கு ஒத்துக்கொண்டது அவர்களுக்கு வெகு ஆச்சரியமாக இருந்தது. சமாதானம் பேச அப்ஸல்கானிடமிருந்து இருவர் வந்தனர். அவர்களில் ஒருவன் பிராமணன். அவனைக் கண்டதுமே சிவாஜி ஆச்சரியத்தினால், திடுக்கிட்டுப்போனார். அவனைப் பெயரிட்டுக் கூப்பிட வாயைத் திறந்தார். ஆனால் அவன் காட்டிய சைகை, அவரை மௌனமாக்கியது. அவன்தான் ஐந்து வருடங்களுக்கு முன், அவரிடம் உயிர்ப்பிச்சை வாங்கிய டர்தோஜி கோபிநாத்.

சமாதானப் பேச்சுக்களில் சிவாஜியை அறியாதவன்போலவே, அவன் பேசிவந்தான், முதல்நாள் பேச்சு முடிந்தது. வந்த தூதர்களுக்கு, தங்க இடம் அளிக்கப்பட்டது. அச்சமயம் சிவாஜியின் கையில் கோபிநாத் ஒரு சிறு துணுக்குக் கடிதத்தை வைத்ததை யாரும் கவனிக்கவில்லை.

அதில் பின்வருமாறு கண்டிருந்தது.

"இன்று நள்ளிரவு யாரும் அறியாமல் என் விடுதிக்கு வந்தால் முக்கிய சமாசாரம் பேசலாம்".

நள்ளிரவு ராஜ்கோட் மலையில் வெகு பயங்கரமான நிசப்தம் நிலவிக்கொண்டிருந்தது. திடீரென்று ஏற்பட்ட புயற்சுழல், கோட்டையின். மாளிகைகளில் குப்பென்று புகுந்து வெளிப்பட்டது. சரற்கால அமாவாசையாதலால், கும்பிருட்டு. மூன்று உருவங்கள், ஒரு வீட்டை அடைந்து உள்ளே புகுந்தன. அவை சிவாஜியும், அவர் உயிர்த்தோழர் இருவர்களும். "டக் டக்" என்று கதவு மெதுவாகத் தட்டப்பட்டது. கதவு திறந்து மூவரையும் உள்ளே விட்டது.

ஒரு மங்கிய விளக்கின் அருகில் அவர்கள் அமர்ந்துகொண்டனர். கோபிநாத் ஆரம்பித்தான்.

"அரசே அப்ஸல்கான், உங்கள் உயிரின் மேல் கண்வைத்திருக்கிறான். ஆகையால். நீங்கள் ஜாக்கிரதையாக நடந்துகொள்ள வேண்டும்".

இச்செய்தி அனைவரையும் திடுக்கிடச் செய்தது. அவன் விரிவாகச் சொல்ல ஆரம்பித்தான்.

"நீங்கள் என்னைத் தேசப்பிரஷ்டம் செய்த பிறகு நாங்கள் பீஜப்பூரை அடைந்து வசித்துவந்தோம். அங்கிருக்கும்போதும் என் தங்கை தங்கள் நன்றியை மறக்கவில்லை. பீஜபூர் சேனாதிபதி. அப்ஸல்கான், என் தங்கை தாராவின்மேல் அமோகமான காதல்கொண்டு, அவளை அபகரித்துக் கொண்டான். அயல் நாட்டினரான நாங்கள் அதற்குப் பணிவதைத் தவிர, வேறு கதியில்லாமல் போயிற்று. இப்போது அவள் அண்ணனான. எனக்கு. அந்தரங்க காரியதரிசி வேலை கிடைத்தது. இங்கு வரும்போது அவளையும்கூட அழைத்து வந்திருக்கிறான். இங்கு வந்தபோது உங்கள் சமாதான தூது வந்தது. அதைப்பற்றி, அப்ஸல்கானும், அவனது உதவியாள் ரஹ்மத்கானும் சேர்ந்து அவர்கள் கூடாரத்தில் தனிமையாகப் பேசிக்கொண்டிருந்தார்களாம். அப்போது அவர்கள் இச் சமாதான தூதுக்கு ஒத்துக்கொண்டு உங்களைத் தனிமையில்

வருவித்துக் கொன்றுவிடுவது என்று தீர்மானித்திருக்கின்றார்கள். இவ்விஷயம் அவர்களிருவருக்கும் தவிர, யாருக்கும் தெரியாதென்று நினைத்துக்கொண்டிருக்கின்றார்கள். ஆனால் இதை ஒட்டுக் கேட்டுக்கொண்டிருந்த தாரா. தங்களை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளச் சொல்லும்படி உங்களிடம் என்னைச் சொல்லச் சொன்னான். நான் இதைச் சொன்னேனென்று தயவுசெய்து என்னுடன் வந்தவர்களுக்குத் தெரிவிக்க வேண்டாம். உங்களுக்கு என்னால், ஏதாவது காரியம் ஆகவேண்டியிருந்தால், சொல்லுங்கள்; செய்யத் சித்தமாயிருக்கின்றேன்.

சிவாஜி வெகுநேரம், ஆலோசனையிலிருந்தார். கடைசியில் தம்மைக் காப்பாற்றிக்கொள்ள, அவனைக் கொன்றுவிடுவதென்று தீர்மானித்தார். இப்படிச் செய்வதினால் பீஜபூர் சைன்யத்தையும் முறியடிக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது. இவ் விஷயம் கோபிநாத்திற்குத் தெரிவிக்கப்பட்டது. அதற்குண்டான ஏற்பாடுகளைச் செய்ய முனைந்தனர்.

ராஜ்காட்டை அடுத்த பிரதாப் காட்டின் சரிவில் இவர்கள் சந்திப்பு ஏற்பாடாகியிருந்தது. சந்திப்புத் தினமும் வந்தது. மகாராஷ்டிரத்தின் அம்புகள் எனப்படும் மாவலிகள், சந்திக்கும் இடத்தைச் சுற்றிலும் உள்ள காட்டில் மறைந்து கிடந்தனர். ஒவ்வொரு மரமும், ஒவ்வொரு புதரும் விஷத்தைக் கக்குவதற்குத் தயாராக இருந்தன. சங்கு ஒலி கேட்டவுடன், புதரினின்றும் வெளிப்பட்டு, பீஜபூர் சைன்யத்தைத் தாக்கவேண்டுமென்று உத்தரவு. சிறந்த அசுவப்படையின் தலைமையில், தேத்தாஜி பால்கர், பீஜபூர் சைன்யம் முகாம் போட்டிருந்த இடத்தினருகில் பதுங்கிக்கிடந்தான். பிரதாப்காட்டில் பீரங்கி ஒலி கேட்டவுடன், படைகளைத் தாக்கிச் சிதற அடிக்கவேண்டுமென்று உத்தரவு. அப்ஸல்கானுடன், தற்காப்புக்காக ஒரு சிறு சைன்யம் கூடவந்தது. சந்திப்பு இடத்தின் வெகு அருகில் அது நின்றுவிட்டது. உருவிய கத்தியுடன், ரஹ்மத்கான், அப்ஸலைக் காத்துவந்தான். சிவாஜி வெளிக்கு வெகு சாதாரணமாய் உடையணிந்துகொண்டுவந்தார். அவருடன் ஒரு வேலையாள் மட்டும் வந்திருந்தான்.

திடீரென்று பிரதாப்காட் மலையின் பீரங்கி அதிர்ந்தது. மின்னல்போல் அடர்ந்த புதலிருந்து, வெளிப்பட்டனர்

பாத்ருடுவின்

பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரகுலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

48 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக்கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாறுதீர்கள்

டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில் கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளை தெரு. தெப்பக்குளம் போஸ்டு.

மாவலிவீரர்கள். அவர்கள் கூரிய அம்புகள் இவற்றைச் சற்றும், எதிர்பாராத பீஜபூர் சைன்யத்தைத் துவம்சம் செய்தன. வெகு சுலபத்தில் அவர்கள் சைன்யம் முறியடிக்கப்பட்டு ஓடத்தொடங்கியது. இதேசமயத்தில் கோயூர் சமவெளியில் முகாம்போட்டிருந்த நாற்பதினாயிரம், சைன்யத்தின் மேல் தேத்தாஜி பால்கரின் சேனை விழுந்தது. மிகுந்த உயிர்ச் சேதத்துடன், பீஜபூர் சைன்யம் சிதறியோடியது, மகாராஷ்டிரத்திற்கு என்றும் நினைத்திராத பெருவெற்றி கிடைத்துவிட்டது.

அப்ஸல்கானை ஒரு குத்தில் கொன்ற மகாராஷ்டிர சிங்கம் தன் படை ஜயபேரிகை கொட்டுவதைப் பெருமிதத்துடன், ஒரு மலையின் உச்சியிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தது. தான் கனவிலும், எதிர்பாராத வெற்றி யாருக்த்குதான் மகிழ்ச்சி அளிக்காது?

சிவாஜிக்கு மனதில், என்ன தோன்றியதோ, தம்மருகில் நின்ற கோபியை ஒரு கட்டாகக் கட்டிக்கொண்டு, "கோபிநாத், நீயே உண்மை மராட்டியன், அன்று நீ தேசத்துரோகியென நாட்டைக் கடந்தாய். இன்று நீ நாட்டின் மணியென்ற பெயருடன் திரும்பிவருகின்றாய்" என்று அகமகிழ்ந்தார்.

கோபிநாத், "சத்ரபதி மகாராஜ்! பாவம் செய்த மராட்டியனுக்கு, இதைவிடப் பிராயச்சித்தம் வேறென்ன இருக்கப்போகிறது. தேசத்துரோகி என்ற பெயரை அழித்தேனே அதுவே போதும்" என்று பதிலளித்தான்.

அச்சமயம், தேத்தாஜி முதலிய வீரர்கள் சூழ்ந்துவர, தாராபாய் வந்து இறங்கினாள்.

சிவாஜி அவளைக்கண்டவுடன், மரியாதையுடன் கத்தியை உருவிக்கொண்டு, "ஜய் பவானி, தாரா! உன்னைப்போல் மட்டும், ராஜ்யத்தில் நூறு பெண் வீரர்கள் இருந்தால், இந்தப் பாரததேசம் முழுவதும். அந்நியர் ஆட்சியைக் காணாமல் செய்திருப்பேன். மலைஎலி என்னும் ஏளனப் பெயரை, மலைச்சிங்கம் என்று மாற்றியிருப்பேன். மகாராட்டிரம் உனக்குக் கடமைப்பட்டிருக்கிறது. ஹிந்து தர்மம் உனக்குக் கடமைப்பட்டிருக்கிறது. உன் வீரச் செயல் என்றும் மனிதர் உள்ளத்தில் நிலைத்திருக்கவேண்டும். நாட்டின்வாழ்க்கைக்காக உன் வாழ்க்கையை குலைத்துக் கொண்டாய். அதன் அறிகுறியாக, நீ வசித்திருந்த மலைக்கு தாராகாட் என்ற பெயர் வழங்கட்டும். அம்மலையின் பெயர் வரும்போதெல்லாம், உன் தியாகபுத்தி, தேசபக்தி, மனிதர் உள்ளத்தில் எழுட்டும்" என்று உணர்ச்சி மிகுதியினால் சடசடவென்று பொழிந்தார். அனைவரும் அவ்வுணர்ச்சி மேலீட்டில் ஸ்தம்பித்து நின்றிருந்தனர்.

பவானியின் ஆலயமணி வெற்றியின் அறிவிப்பைக் கணார், கணார் என்று ஒலித்துக் கொண்டிருந்தது. தாரா மெல்ல நகைத்துக் கொண்டே "அரசே! அன்று நான் உங்கள் கையில் கட்டிய கங்கணம், கவனத்தில் இருக்கிறதா? அன்று கேட்டீர்களே எனக்கு என்ன செய்யப்போகிறாய் என்று ஞாபகம் இருக்கிறதா?" என்று கேட்டாள்.

சிவாஜி "சோதரி! நான் மறந்தாலும், இந்தக் கயிறு மறக்குமா? நீயே சொல்" என்று தம் கையில் கட்டியிருந்த கயிற்றைக் காட்டிக்கொண்டே கலகலவென்று நகைத்தார். அந்த நகைப்பில் கோயில் மணியின் சாவதான ஒலி, ஏன் மகாராஷ்டிரம் முழுவதுமே கலந்துகொண்டது.

198072

Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami
at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.

தற்காலக் கட்டிடங்கள்
கைத்தொழில்
விவசாயம்
போக்குவரவு வசதிகள்
NATIONAL HIGH SCHOOL
கல்வி
HOSPITAL
சுகாதாரம்
குடியிருப்பு வசதி
அநேகமாய் இந்தியமுன்னேற்றத்திட்டத்தின் ஒவ்வொரு அம்சத்திற்கும் சிமென்ட்
கான்கிரீட் அவசியமாயிருக்கிறது.
கான்கிரீட் கட்டடங்களின் பூரண சாதனத்தை அடைய வேண்டுமானல் "கான்கிரீட் அஸ்ஸோஸியேஷன் ஆப் இந்தியா, 199, மவுண்ட் ரோடு மதராஸ்," என்று விலாஸமிட்டு எழுதுங்கள். உங்களுக்குவேண்டிய எக்ஸ்பர்ட் டெக்னிகல் உதவி அளிக்க அங்கு போதிய திறமைசாலிகள் உளர். உடனே உங்களுக்கு வேண்டியதைச் செய்வார்கள்.
தி ஸிமென்ட் மார்கெட்டிங் கம்வெனி ஆப் இந்தியா லிமிடெட்.
ஸி.எம.ஐ
ஆப்
CM. 199

டி. எஸ். ஆர். கோகுல் தைலத்தை

தொடர்ந்து உபயோகித்த இம்மங்கை தனது கூந்தல்
அடர்ந்து கவர்ச்சியாக வளர்ந்திருப்பதைக் கண்டு
அகமகிழ்கிறாள்

இம் மகிழ்ச்சியை நீங்களும்
எளிதில் அடையலாம்

டி. எஸ். ஆர்.

கோகுல் கூந்தல் தைலம்

சந்தனாதித் தைலம், அரைக்கீரை விதைத் தைலம்

இவைகள் குற்றால ஸ்நானத்தின் குளிர்ச்சிக்கு நிகரானவை!

மதராஸ் ஸிடி ஏஜண்டு **புஷ்பவனம் ஸ்டோர்ஸ்** பைக்ராப்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி

T. S. R. & CO. PERFUMERS KUMBAKONAM

Cauveri Colour Press, Kumbakonam.